Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 கார்த்திகை 06 சனிக்கிழமை (22.11.2014) பக்கங்கள் 20 ஓசை – 053

# ஜனவரி 08 தேர்தல்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக தேர்தல் திணைக்களம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை வரும் டிசம்பர் மாதம் 8 ஆம் திகதி முதல் சமர்ப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜே.வி.பி கட்சி வேட்பாளர் 19 ஆம் பக்கம் பார்க்க

# சுதந்திர வர்த்தக வலயம் வடக்கிலும் நிறுவப்படும்



## அமைச்சர் டக்ளஸ் தகவல்

(கொழும்பு)

வடமாகாணத்தில் சுதந்திர வர்த்தக வலயத்தை நிறுவுவதற்கு துரித நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள அமைச்சரின் வாசஸ்தலத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ளதைப் 19 ஆம் பக்கம் பார்க்க

# பொது வேட்பாளராக மைத்திரிபால சிறிசேன



## தெற்கில் அரசியல் பூகம்பம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி 8 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடக்கவிருக்கும் நிலையில் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக மைத்திரிபால சிறிசேன தெரிவாகியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் இதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு மிகுந்த பரபரப்புக்கு மத்தியில் வெளியிடப்பட்டது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசில் சுகாதார அமைச்சராக இருந்த மைத்திரிபால சிறிசேன இவ்வாறு எதிரணியின் பொது வேட்பாளராக 19 ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சு பொறுப்பிலிருந்து நீக்கம்

(கொழும்பு)

மைத்திரிபால சிறிசேன, ராஜித சேனாரத்ன, துமிந்த திஸாநாயக்க, எம்.கே.டி.எஸ். குணவர்த்தன ஆகியோரை அமைச்சுப் பதவிகளில் இருந்து ஜனாதிபதி நீக்கியுள்ளார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க

## புதிய பொதுச்செயலாளராக எஸ்.பி.

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க நியமிக்கப்பட உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கட்சியின் பொதுச் செயலாளர் 19 ஆம் பக்கம் பார்க்க

# மீண்டும் சந்திரிகா களத்தில்

(கொழும்பு)



மீண்டும் அரசியல் எனும் தனது தாய் வீட்டுக்குள் நுழைய சந்தர்ப்பம் கிடைத்தமையையிட்டு தான் மகிழ்வதாக கண்ணீர் மல்க முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க குறிப்பிட்டுள்ளார்.

நேற்று கொழும்பு நகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது,

9 வருட மௌனத்தின் பின் மீண்டும் அரசியலில் பிரவேசிக்க தினம் தினம் எனக்கு இழைக்கப்பட்ட 19 ஆம் பக்கம் பார்க்க

# ரணிலுக்கு பிரதமர் பதவி?



(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தான் ஜனாதிபதியானால் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை பிரதமராக்குவேன் என்றும், அத்துடன் 18 ஆவது திருத்தத்தை இரத்துச் செய்து 17 ஆவது திருத்தத்தை மீளவும் நடைமுறைப்படுத்துவேன் என்றும் தெரிவித்துள்ளார் எதிரணிகளின் பொதுவேட்பாளராக தெரிவாகியிருக்கும் மைத்திரிபால சிறிசேன.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# அவசர முடிவு எடுக்க மாட்டோம்

(கொழும்பு)




ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரான மைத்திரிபால சிறிசேன எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிலைமைகளை ஆராய்ந்தே முடிவெடுக்கும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

மைத்திரிபால சிறிசேன பொது வேட்பாளராக அறிவிக்கப்பட்டதையும், தொலைக்காட்சியில் ஒளிபரப்பான அவரது செவ்வியையும் தான் கேட்டதாகக் கூறிய சம்பந்தன், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதாக அவர் கூறிய சில அம்சங்களை வரவேற்கின்ற போதிலும் அவை குறித்தும், யாருக்கு ஆதரவு வழங்குவது என்பது குறித்தும் தமது கட்சியே ஆராய்ந்து முடிவெடுக்கும் என்றும் அவர் பி.பி.சிக்குத் தெரிவித்தார்.

# ஸ்திரத்தன்மைக்கு சவால்

(கொழும்பு)



ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து அமைச்சர் மைத்திரிபால சிறிசேன வெளியேறியுள்ளதை 1959 இல் இடம்பெற்ற அரசுக்கெதிரான சதித்திட்டம் போன்றது என அமைச்சர் சுசில் பிரேமஜயந்த வர்ணித்துள்ளார்.

1959 ஆண்டில் நடைபெற்றது போன்று நாட்டை ஸ்திரத்தன்மை இழக்கச் செய்வதற்காக சதி முயற்சி இடம்பெறுவதாக அவர் தெரிவித்துள்ளார். வாராந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இது 19 ஆம் பக்கம் பார்க்க



# பனை தறிப்பவர்களை இனங்கண்டு அறிவியுங்கள்

## பனை அபிவிருத்திச்சபை தலைவர் பசுபதி அறிவிப்பு

பனை மரத்தினை அனுமதியின்றி வெட்டுபவர்களுக்கு புதிய ஆண்டில் இருந்து கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பனை மரங்கள் அனுமதியின்றி வெட்டுவது தொடர்பிலான பிரச்சினை பல ஆண்டுகளாக தொடர்ந்து வருகின்றது. இதற்கு இறுக்கமான நடவடிக்கை இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. இதனால் எமது பாரம்பரிய அடையாளமான பிரதேச வளம் பாதிக்கப்படுகின்றது.

அத்துடன் மன்னார் மாவட்டத்திலும் பச்சிலைப்பள்ளிப் பகுதிகளிலும் அதிகமாக பனை மரங்கள் வெட்டப்பட்டு லொறிகளில் ஏற்றிச்செல்லப்படுகின்றன. எனவே நாம் பொதுமக்களிடம் வேண்டுவது என்னவெனில் அனுமதியின்றி பனை மரங்கள் வெட்டப்படுவதாக தகவல் கிடைத்தால உடனடியாக தங்கள் பகுதியில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கோ அல்லது பனை அபிவிருத்தி சபைக்கோ அறிவியுங்கள்.

தற்போது நவம்பர் மற்றும் டிசம்பர் ஆகிய மாதங்கள் மர நாட்டு மாதம் என்பதனால் பனை மரங்கள் வெட்டுவதற்கு அனுமதி நிறுத்தப்பட்டுள்ளது. எனினும் அவசர தேவைக்கு என கோரும் பட்சத்தில் பனை அபிவிருத்திச் சபை உத்தியோகத்தர்கள் நேரில சென்று பார்வையிட்டபின் அனுமதி வழங்குவர்.

எதிர்வரும் ஆண்டு ஆரம்பம் முதல் அனுமதியின்றி பனை வெட்டுபவர்களுக்கு எதிராக இறுக்கமான நடவிடிக்கை எடுக்கப்படும் என்றும் மக்கள் தாமாகவே எமது பிரதேச வளத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.



வேலணைப் பிரதேச செயலகத்தினால் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவின் பிறந்த தினத்தை முன்னிட்டு வேலணை வங்களாவடி முருகன் ஆலயத்தில் நேற்று மரக்கன்றுகள நாட்டப்பட்டன. இதில் பிரதேச செயலக ஊழியர்களும், ஆலய நிர்வாகத்தினரும் கலந்து கொண்டனர். (21)

# போக்குவரத்து சபை அலுவலர்களுக்கு இன்று நியமனக் கடிதம் கையளிப்பு

## அமைச்சர் டக்ளஸ் வழங்கிவைப்பார்

இலங்கை போக்குவரத்துச் சபை வடபிராந்தியத்துக்கான புதிய சாரதி காப்பாளர்களுக்கான நியமனக்கடிதம் வழங்கும் நிகழ்வு இன்று மாலை 4 மணிக்கு இலங்கை போக்குவரத்துச் சபை யாழ்.சாலையில் நடைபெறவுள்ளது.

இந்நியமனக்கடிதங்களை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா வழங்கவுள்ளார் என இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ்.சாலை முகாமையாளர் செ.குணபாலசெல்வம் தெரிவித்துள்ளார்.


# நுளம்பு பெருக வாய்ப்பளித்த 13 குடும்பங்கள் தண்டம் செலுத்தின

பருவகால மழை ஆரம்பித்துள்ள நிலையில் வீட்டுக்காணியில் நுளம்புகள் பெருகுவதற்கு ஏதுவாக வைத்திருந்த 13 பேருக்கு யாழ்.நீதிமன்றத்தினால் நேற்று முன்தினம் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பொலிஸ் நிலைய சூழல் பாதுகாப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ரணவீர இவ்வாறு தெரிவித்தார்.

பிளாஸ்ரிக் போத்தல்கள், பொலித்தீன்கள் மற்றும் மழை நீர் தேங்கி நிற்கும் வகையில் ரயர் மற்றும் இதர போத்தல்களை தமது வீட்டுக்காணிகளில் அசட்டையீனமாக போட்டு நுளம்புகள் பெருகுவதற்கு ஏதுவாக வைத்திருந்த கொக்குவில் பகுதியைச் சேர்ந்த 12 வீட்டு உரிமையாளர்கள் மற்றும் நாவலர் வீதியில் உள்ள ஒரு வீட்டு உரிமையாளர் உட்பட 13 பேருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்ட நிலையில் யாழ்.நீதிமன்றம் ஒவ்வொருவருக்கும் தலா 1000 ரூபா வீதம் தண்டம் விதித்து விரைவாக அவற்றை துப்புரவு செய்யவேண்டும் எனவும். சூழலை சுத்தமாக வைத்திருக்குமாறும் அறிவிறுத்தியுள்ளதாக ரணவீர மேலும் தெரிவித்தார். (இ)





நீர்வேலி சி.சி.த.க. பாடசாலையின் 135 ஆவது ஆண்டு விழாவும், பரிசளிப்பு விழாவும் பாடசாலை முதல்வர் தி.இரவீந்திரநாதன் தலைமையில் இடம்பெற்றது. இதில் பழைய மாணவன் தி.மயூரகிரிசர்மா மங்களவிளக்கேற்றுவதனையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சு.தட்சணாமூர்த்திக்கு பாடசாலை முதல்வர் தி.ரவீந்திரநாதன் ஞாபர்த்த விருது வழங்கி பொன்னாடை பேர்த்து கௌரவிப்பதனையும் காணலாம்.

# நகைகள் திருட்டு

ஊர்காவற்றுறை - நாராந்தனைப் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து நங்க நகைகள் கடந்த புதன்கிழமை பகல் வேளை திருட்டுப்போயுள்ளது.

இது சம்பந்தமாக வீட்டு உரிமையாளரால் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (21)

**சிறு விளம்பரம்**

**டயானா பிளாஸ்ரிக்**

**ரீசைக்கிள் (மீள் சுழற்சி)**

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன் என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.108 பலாலி வீதி
யாழ்ப்பாணம்.
(இலுப்பையடி சந்தி அருகாமை)

021 222 8680,
077 592 5088.

(C/3800)

**யாழ்ப்பாணம் மாநகர சபை**

**குப்பைகள், கட்டட இடிபாடுகளை அகற்றுதல்**

யாழ்.மாநகர சபையின் எல்லைக்குள் சுகாதாரத்தை பேணும் நோக்குடன் பின்வரும் நடைமுறைகள் பின்பற்றப்படவுள்ளன. எனவே எமது சபையின் வரியிறுப்பாளர்கள் அனைவரும் எமக்கு ஒத்துழைப்பு வழங்கியுதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

1. டெங்கு பரவுதலை தடுக்கும் முகமாக வீட்டு வளவுகளில் காணப்படும் கட்டட இடிபாடுகள் எமது சபையினால் இலவசமாக அகற்றித்தரப்படும். இச்சலுகை மூன்று வாரங்களிற்கு மட்டும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம் 021 222 2019.

02. வீடுகளில் அகற்றப்படும் குசினிக் கழிவுகள், உக்காத கழிவுகள் மற்றும் அருவருக்கத்தக்க கழிவுகள் என கழிவுகளை வகைப்படுத்தி தனித்தனியாக பைகளில் இடப்பட்டு வழங்கப்படல் வேண்டும். அவ்வாறு வகைப்படுத்தப்படாத கழிவுகள் மாநகர சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

3. இக்கழிவுகள் தவிர்ந்த ஏனைய கழிவுகள் எமது சபையின் கட்டண கழிவகற்றல் பகுதியுடன் தொடர்பு கொண்டு கட்டணம் செலுத்தி அகற்றிக் கொள்ளலாம். தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம் - 021 320 7625, 071 862 8535.

ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

(C/3473)

**ஜயோதா**

**உத்தியோகபூர்வ முடிவுகள்**

சீட்டிழுப்பு இலக்கம் 1111

திகதி 20.11.2014

வெற்றி எண்கள்: 07 11 28 29 — ஆங்கில எழுத்து: 0

ஜக்பொட் பரிசு ரூ. 4,50,65,620/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 4,50,65,620/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 8 | 50,000/= | ரூ. 4,00,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 273 | 1,000/= | ரூ. 2,73,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 510 | 1,000/= | ரூ. 5,10,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 12579 | 60/= | ரூ. 7,54,740/= |
| இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6597 | 40/= | ரூ. 2,63,880/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 165442 | 20/= | ரூ. 33,08,840/= |
| ஆங்கில எழுத்து | 23743 | 20/= | ரூ. 4,74,860/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 69,85,320/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூபா. 45,389,080/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.11.24 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

# சிறுவர் உரிமைகள் சாந்தபுரத்தில் செயலமர்வு



(கிளிநொச்சி)

சிறுவர் விவகார பெண்கள் அபிவிருத்தி அமைச்சு நாடெங்கும் 700 மில்லியன் ரூபா செலவிலான வேலைத் திட்டத்தை முன்னெடுத்து வருகிறது. அதன் கீழ் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையால் பாடசாலை மாணவர்களுக்கு சிறுவர் உரிமைகள், சிறுவர்களுக்கான, பொறுப்புணர்வுகள் தொடர்பான செயலமர்வு மிக அண்மையில் கிளிநொச்சி கரைச்சி, பிரதேச செயலர் பிரிவிலுள்ள சாந்தபுரம் மகாவித்தியாலயத்தில் நடாத்தப்பட்டது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் மாவட்ட அலுவலர் இ.செந்தூரன், மாவட்ட உளவள அலுவலர் தே.துஸ்யந்தன் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் 100 மாணவர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (90)

# நீதிமன்ற வளாகத்தில் கஞ்சா பரிமாற்ற நிகழ்வு

## இருவர் வசமாக மாட்டினர்

நீதிமன்ற வளாகத்தில் கஞ்சா பரிமாறிய வேளையில் இருவரை சிறைக்காவலர்கள் கையும் மெய்யுமாக பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றில் வழக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்ட ஒரு சந்தேக நபருக்கான விளக்கமறியல் நீடிக்கப்பட்ட நிலையில் பிறிதொரு வழக்குக்காக அழைக்கப்பட்ட மற்றொரு சந்தேக நபருக்கு பிணை வழங்கப்பட்டது. பிணை வழங்கப்பட்ட சந்தேக நபர் தான் வைத்திருந்த கஞ்சா பொதியை விளக்க மறியல் நீடிக்கப்பட்ட சந்தேக நபருக்கு கை மாற்றிய வேளையில் சிறைக் காவலர்களிடம் கையும்மெய்யுமாக இருவரும் அகப்பட்டுக் கொண்டனர்.

கஞ்சா வழங்கிய நபர் யாழ். பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் பொலிஸாரின் விசாரணையை அடுத்து நேற்று முன்தினம் மாலை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. கஞ்சா வாங்கிய சந்தேக நபர் விளக்கமறியல் நீடிக்கப்பட்ட நிலையில் யாழ். சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார். (இ,25)

# விழிப்புணர்வு

மானிப்பாய் றோட்டறக் கழகத்தின் ஏற்பாட்டில் புகைத்தல் சம்பந்தமாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் வாகனங்களில் புகைத்தல் சம்பந்தமான விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டன. அத்தோடு புகைத்தல் விழிப்புணர்வுத் துண்டுப் பிரசுரங்களும் வழங்கப்பட்டன. (48)

# இளம் யுவதி மாயம் பொலிஸாரிடம் முறைப்பாடு

(பருத்தித்துறை)

பருத்தித்துறையைச் சேர்ந்த யுவதி ஒருவர் காணாமற்போயுள்ளார் என அவரது பெற்றோர்களால் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வராத்துப்பளை, பருத்தித்துறையைச் சேர்ந்த அகிலதாஸ் தர்சினி (வயது 19) என்ற இளம் பெண்ணே இவ்வாறு காணாமற்போயுள்ளார். கடந்த 11ஆம் திகதி வங்கி ஒன்றுக்குச் சென்ற இவர் வீடு திரும்பாததையடுத்து, கடந்த புதன்கிழமை பிற்பகல் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் அவரது பெற்றோர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (18)

# கௌரவிப்பு விழாவும் மரநடுகை தினமும்

(மல்லாகம்)

மல்லாகம் மகாவித்தியாலயத்தில் சுற்றாடல் . முன்னோடிகள் கௌரவிப்பு விழாவும் மரநடுகை விழாவும் கடந்த திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் பாடசாலை அதிபர் கு.திருச்செல்வம் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண-சபை உறுப்பினர் பா.கஜதீபனும் சிறப்பு விருந்தினர்களாக வலி.வடக்கு பிரதேச சபைத்தலைவர் சோ.சுகிர்தன் மற்றும் வலிகாமம் வலய மாண-வர் அபிவிருத்தி பிரதிக்கல்விப்பணிப்பாளர் திருமதி.பேரின்பநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் அண்மையில் இடம்பெற்ற வடமாகாண விளையாட்டுப் போட்டியில் மூன்று போட்டிகளில் பதக்கங்களைப் பெற்ற மாணவனின் சாதனையைக் கௌரவிக்கும் முகமாக சாதனையை ஊக்குவிக்கும் அவருக்கு துவிச்சக்கரவண்டி பரிசாக வழங்கி வைக்கப்பட்டது. இதன் பின்பு மாணவர்களுக்கான சின்னம் சூட்டுவிழாவும் தொப்பி அணிவிக்கும் விழாவும் இடம்பெற்றது. இறுதியில் விருந்தினர்கள் அனைவராலும் மரநடுகை நிகழ்வும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் பழைய மாணவர் சங்கத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (63)

# பதில் சொல்லக் கடமைப்பட்டோர்




ரண்டு நாட்களுக்கு முதல் ரண்டு நண்பர்களோட பல விசயங்களைப் பற்றியும் கதைச்சுக்கொண்டிருந்தேன். அப்பொழுது அவர்கள் சொன்ன சில விடயங்களும் கேட்ட கேள்விகளும் முக்கியமாகப் பட்டுது. அதுகளை இங்கே ஒவ்வொண்டாகப் பட்டியல் போடலாம் எண்டு எண்ணுகிறன்.

இது தமிழ்த்தேசிய அரசியலில் பெரிய செல்வாக்கைச் செலுத்திக் கொண்டிருக்கிற ஆயர்களையும் ஆயர் இல்லங்களையும் நோக்கி கேள்விகள்.

இந்த ஆயர்களும் ஆயர் இல்லங்களும் யுத்தத்திற்குள் மெல்ல மெல்ல அரசியல் மையங்களாக வளர்ச்சியடைந்து இண்டைக்கு அரசியல் நடவடிக்கைகளைத் தீர்மானிக்கிற அளவுக்கு வந்திருக்கின்றன. இப்போது இவை மதவிவகாரங்களில் செலுத்துகின்ற கவனத்தையும் செல்வாக்கையும் விட அரசியல் விவகாரங்களில் செலுத்துகின்ற கவனமே அதிகமாக இருக்கு.

அன்றைய சூழலில் இருந்த சிவில் செயற்பாட்டு வெற்றிடத்தையும் சிவில் ஆளுமைகளின் வெற்றிடத்தையும் வாய்ப்பாகப் பெற்றுக்கொண்டு, எந்த வகையான போராட்டப் பங்களிப்போ, அரசியல் செயற்பாடுகளோ இல்லாமல் இந்த அரசியல் முக்கியத்துவத்தை ஆயர் இல்லங்களும் ஆயர்களும் பெற்றிருக்கிறதை அவதானிக்கலாம்.

சில மாதங்களுக்கு முன்பு, மன்னார் ஆயர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஆட்களைக் கூப்பிட்டு அவர்களுடைய உள் முரண்பாடுகளைத் தீர்க்கிற நடவழக்கையிலயே ஈடுபட்டிருந்தார்.

வெளிநாடுகளில இருந்து வாற பிரதிநிதிகள், தூதுவர்கள், முக்கியத்தர்கள் எண்டு எல்லாரையும் வலு புளுகமாகச் சந்திச்சு தமிழற்றை அரசியல் பிரச்சினையைப் பற்றிக் கதைக்கினம்.

தேர்தல் காலங்களில இன்னாருக்குத்தான் வாக்களிக்க வேணும் எண்டது வரையில போய் அறிவிப்புகளை விடுக்கினம்.

இடையில இராணுவத்தளபதிகள், அரசாங்கத்தரப்புப் பிரதிநிதிகளிட்டயும் அரசியல் விடயங்களைப்பற்றிப் போய்ப் பேசுகினம்.

ஒட்டு மொத்தத்தில வெள்ளை அங்கி போட்ட அரசியல் பிரமுகர்களைப்போல இவையும் அரசியல் மையங்களாக இல்லங்களும் உள்ளன.

எண்டபடியால்தான் சில கேள்விகள்.

1. வடக்குக் கிழக்கில் உள்ள ஆயர் இல்லங்கள் தங்களின் சொத்து விவரங்களை மக்களுக்குப் பகிரங்கப்படுத்த வேணும். முக்கியமாக வடபகுதி ஆயர்கள் இதைச் செய்ய வேணும்.

2. இந்த இல்லங்கள் இப்பொழுது மக்களுக்குச் செய்து வருகின்ற சேவைகள் என்ன?

3. யுத்தத்தின்போதும் யுத்தத்தின் பிறகும் இவை தமிழ்பேசும் மக்களுக்கு ஆற்றிய அரசியல் மற்றும் சமூகப் பங்களிப்புகள் என்ன?

4. போரினால் பாதிக்கப்பட்டு, ஆண்துணையை இழந்த பெண்களுக்கான உதவிகளையும் ஆதரவையும் இவை செய்திருக்கின்றனவா? அப்படியென்றால் அவை எந்தெந்தப் பகுதிகளில் செய்யப்படுகின்றன? எத்தனைபேர் அதனால் பயன்பெறுகிறார்கள்?

5. உடல் உறுப்புகளை இழந்தவர்களாகவும் உடற் செயற்பாட்டை இழந்தவர்களாகவும் ஏறக்குறைய 12000 இற்கும் மேற்பட்டவர்கள் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இருக்கிறார்கள். இவர்களுக்கான உதவித்திட்டங்களையும் ஆதரவுச் செயற்பாடுகளையும் இவை செய்துள்ளனவா? அல்லது இப்பொழுது கூட அப்படியான திட்டம் ஏதும் இந்த இல்லங்களிடம் உண்டா?

6. போரினால் பாதிக்கப்பட்டவர்களில் 10 வீதமானவர்கள் உள ஆற்றுப்படுத்துகைக்கு உட்படுத்தப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இதைச் செய்யக் கூடிய ஆற்றல் அநேகமான மதபோதகர்களுக்கு உண்டு. அதை இவர்கள் செய்கிறார்களா?

7. வடமாகாணசபை செய்திருக்க வேண்டிய பணிகளைப் பற்றி இதுவரையில் ஒரு ஆய்வைச் செய்திருக்கின்றார்களா?

8. வன்னிப் பிரதேசத்தை விட்டு வடமாகாணசபையின் விவசாய அமைச்சு கால்நடை அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவை யாழ்ப்பாணத்திற்கு இரவோடு இரவாக கொண்டுசெல்லப்பட்டுள்ளன. இவற்றைப்பற்றி ஆயர்களுடைய அபிப்பிராயம் என்ன? ஆயர் இல்லங்களின் நிலைப்பாடு என்ன?

9. வடமாகாண சபை வன்னிக்கான ஆசிரியர்களை முறையாகப் பகிர்ந்தளிக்கவில்லை. இதைப்பற்றி மன்னார் ஆயரின் அபிப்பிராயம் என்ன? யாழ்ப்பாணத்திலேயே மேலதிகமான ஆசிரியர்கள் முகாம் இட்டுள்ளார்கள். வன்னியில் ஆசிரியர் பற்றாக்குறை இருக்க யாழப்பாணத்தில் இப்படி அதிகமான ஆசிரியர்களை வைத்திருப்பது சரியா? இதைப்பற்றி யாழ்ப்பாண ஆயருடைய பதில் என்ன?

10. இனப்பிரச்சினைத் தீர்வுக்கு ஆயர் இல்லங்களின் பரிந்துரை என்ன? அதாவது ஆயர்களோ அல்லது ஆயர் இல்லங்களோ முன்மொழிகின்ற தீர்வுத்திட்டம் என்ன? இந்தத் தீர்வுத் திட்டத்தில் வடக்குக் கிழக்கில் பன்மைத்தன்மைக்கும் பல்லின சமூகங்களுக்கும் இடமுண்டா?

11. பிற மதப்பிரிவினருடனும், பிற சமூகங்களோடும் நல்லுறவை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளை ஆயர்கள் மேற்கொண்டிருக்கிறார்களா? இனிமேலாவது அவ்வாறு மேற்கொள்வதற்கான திட்டம் ஏதும் உண்டாஃ

12. இலங்கையில் நிரந்தர அமைதியை எட்டுவதற்கான ஆயர் இல்லங்களின் பரிந்துரை எவ்வாறானது?

நேரம் என்பது செலுத்தப்பட்ட அம்பைப் போன்றது; அது திரும்பி வராது. - ஜேஷி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## நாம் வெறும் பண்டங்கள் அல்ல!

விஞ்ஞானத்தின் வளர்ச்சி, நவீன வசதிகளின் வளர்ச்சி, இயந்திரங்களின் வளர்ச்சி என்பன நமது வாழ்க்கையை இலகுபடுத்தியும் விரைவுபடுத்தியும் செல்வதாக ஒரு தோற்றம் இருக்கிறது.

அன்றாட வேலைகளை மிக இலகுவாக்கியதிலும், புதியன காணும் மகிழ்ச்சியிலும் நாம் நின்று யோசிக்க முடியாதவர்களாக புதிய புதிய பல கருவிகளின் கைப்பாவைகளாக தலைதெறிக்க விரைந்து கொண்டிருக்கிறோம்.

இந்தக் கருவிகளின், நவீன வசதிகளின், உற்பத்திப் பெருக்கங்களின் பின்னால் தொடர்ந்து வரும் ஆபத்துக்கள் ஒருபுறமிருக்க, நாம் இழந்துவரும் மனிதப் பண்புகளும் கவலையளிப்பதாக உள்ளது.

மனிதர்கள் நாம் எப்படி ஒருவருக்கொருவர் அந்நியமாகிப் போனோமோ, அதுபோலவே பறவைகள், மிருகங்கள், பூச்சிகள் என பிற உயிரினங்கள் பற்றிய சிந்தனையும் நம்மிடமிருந்து தொலைந்து விட்டது.

இந்த வளர்ச்சியில் மனிதர்களின் தனித்துவத்துக்கு மதிப்புக் கிடையாது. எங்கும் போட்டி, எதிலும் லாபம் என்பதுதான் இதன் பார்வை. சந்தை தான் முக்கியம். எல்லாவற்றையும் விற்கவோ, வாங்கவோதான் முயலும்.

எந்த விழுமியங்களையும் ஏற்பதில்லை. இதன் பிடியில் எல்லாருமே பண்டங்களாகத்தான் இருக்கிறோம்.

எப்படி மனிதர்களுக்காக பொருட்களையும் பொருட்களுக்காக மனிதர்களையும் உருவாக்குகிறதோ அதே போல நோய்களுக்காக மருந்துகளையும் மருந்துகளுக்காக நோய்களையும் உற்பத்தி செய்தபடியும் இருக்கிறது.

ஒருகாலத்தில் மருத்துவம் மிக உன்னதமான சேவையாகக் கருதப்பட்டது. மருத்துவத்துக்கு ஈடாகப் பொருள் பெறுவதே பாவம் என்று நம்பிய காலம் இருந்தது. மந்திரத்தன்மை கொண்டதாகவும், இரகசியமாய் செய்ய வேண்டியதாகவும் கருதப்பட்டது.

அந்த மருத்துவ ரகசியங்களை யாரிடமும் பகிர்ந்து கொள்ளக் கூடாது. அப்படி பகிர்ந்து கொண்டால் அது பலிக்காது என்றும் நம்பப்பட்டது.

எல்லா நோய்களுக்கும் மருத்துவர்களைத் தேடிப்போவதில்லை. பெரும்பாலும் கை வைத்தியமாக வீடுகளில் குணமாக்கி விடுவார்கள். காய்ச்சல், சளி, தலைவலி, என்று அடிக்கடி வரக்கூடிய நோய்களுக்கு, உணவுப்பத்தியம், பச்சிலைச்சாறு, கஷாயம், கொத்தமல்லித் தண்ணி, சஞ்சீவி, கோரோசனை என்று கொடுத்துக் குணப்படுத்தி விடுவார்கள்.

உணவே மருந்து, மருந்தே உணவு என்று இயற்கையோடு இயைந்து வாழ்ந்த காலமாக இருந்தது.

இப்போது விதவிதமான மருந்துகளோடுதான் எல்லோரும் வாழ்கிறோம். மருந்துக் கடைகளும், ஆஸ்பத்திரிகளும் மக்கள் தொகைப் பெருக்க வேகத்தைவிட அதிக வேகமாகப் பெருகி வருகின்றன.

நமக்குத் தரப்படும் மருந்துகள் அதன் விளைவுகள், பக்க விளைவுகள், எல்லாவற்றைப் பற்றியும் நாம் கவலைப்பட வேண்டியிருக்கிறது.

பிரசவம் என்றாலே அது வயிற்றை வெட்டி எடுத்தல் (சிசேரியன்) தான் என்றாகி விட்டது. இது திட்டமிட்டு பணம் பறிப்பதற்கான செயலாகவும் மாறி விட்டது.

ஆஸ்பத்திரியில் அனுமதித்த உடனேயே பிரஷர் இருக்கிறது, அது இருக்கிறது என்று என்னென்னவோ பயமுறுத்த ஆரம்பித்து விடுகிறார்கள். வெட்டுவதைத் தவிர வேறு வழியில்லை என்றே எல்லா பிரசவங்களும் போய்க் கொண்டிருக்கிறது.

அதுபோன்றே எல்லா நோய்களுக்கும் உடலை மருந்துகளின் கிடங்காக்கி வருகிறோம்.

நாம் யோசிக்க வேண்டும். நமது வேகத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு வேறு வழிகளையும் சிந்திக்க வேண்டும். பண்டங்களாக நம்மை ஒப்புக்கொடுத்துக் கொண்டிருக்காமல் விழிப்படைய வேண்டும்.

- ஆசிரியர்



## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2014

"மரங்களின் பிரதான தொழிற்பாடுகள் புரிந்துகொள்ளப்பட்டு அவை உயர்வாழ் அங்கிகளாக எம்மால் உணரப்பட்டால், அவை எமக்கு ஆதாயமும் அகமகிழ்வும் தரக்கூடிய என்றும் முடிவில்லாத வளமாக விளங்கும்."

——— நி.தி.மிரோவ் (அமெரிக்க எழுத்தாளர்)

# ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் உடன்படிக்கைகள் எதுவும் இல்லை

## முஸ்லிம் காங்கிரஸ் திட்டவட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் எந்தவிதமான இரகசியப் பேச்சுவார்த்தைகளையோ அல்லது உடன்படிக்கைகளையோ ஏற்படுத்திக்கொளளவில்லை என முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் வாக்குறுதிகளை அளித்த போதிலும் அவற்றை நிறைவேற்றுவதில்லை அரசாங்கத்துடன் எவ்விதமான இரகசிய இணக்கப்பாடுகளும் ஏற்படுத்திக் கொள்ளப்படவில்லை. தமிழ்த் தேசியம் பிரச்சினைகளை எதிர் நோக்கவில்லை எனவும், முஸ்லிம் தேசியம் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மலையக தமிழ் மக்கள் பற்றி கவனத்திற் கொள்வதில்லை. மலையக மக்களுக்கு அவர்களுடைய அரசியல் தலைவர்கள் இருக்கின்றார்கள் எனினும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெற்கு முஸ்லிம்களைப் போன்றே ஏனைய பகுதி முஸ்லிம்களையும் பாதுகாக்க வேண்டிய நிர்ப்பந்தம் காணப்படுகின்றது என்றார்.

# பிராந்திய கடல் பாதுகாப்பு கொழும்பில் அடுத்த மாதம் மாநாடு

(கொழும்பு)

பிராந்திய கடல் பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பாக விரிவாக ஆராயும் பிகோல் டயலொக் உயர் மட்ட பாதுகாப்பு மாநாடு அடுத்த மாதம் 01,02 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

கடற்படையின் ஏற்பாட்டில் காலி துறைமுக நகரில் ஆரம்பமாகவுள்ள இந்த உயர் மட்ட பாதுகாப்பு மாநாட்டை பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு ஆரம்பித்து வைக்கவுள்ளதுடன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பிரதிநிதிகளின் பங்குபற்றலுடன் இடம்பெறவுள்ளது.

பிகடல்சார் சுபீட்சத்துக்கான ஒத்துழைப்பு என்ற தொனிப் பொருளில் பிராந்திய கடல் பாதுகாப்பு மேம்படுத்தல், பிராந்திய கடல் வழி பாதுகாப்பு போன்றவைகள் தொடர்பாக பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சும் இலங்கை கடற்படையும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த உயர் மட்ட பாதுகாப்பு மாநாட்டில் கடந்த 11 மாதங்களாக இடம்பெற்ற நிகழ்வுகள் சம்பந்தமாக கலந்துரையாடப்படவுள்ளது.

40 நாடுகளின் கடல்சார் நிபுணர்கள் கடற்படை உயர்அதிகாரிகள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு புத்திஜீவிகள் கலந்து கொள்ளும் இந்த உயர் மட்ட மாநாட்டில் கடல்சார் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளது.

# மீனவர் பிரச்சினைகள் குறித்து இலங்கையுடன் பேச ஆர்வம்

## இந்திய வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

மீனவர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் குறித்து இலங்கையுடன் பேச ஆர்வம் காட்டுவதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும் வரையில் இந்திய மீனவர்கள் அத்து மீறி மீன்பிடியில் ஈடுபடக் கூடாது. எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபடுவதனை மீனவர்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள 24 மீனவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். மீனவர் பிரச்சினைகள் குறித்த இரு நாடுகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் மீளவும் ஆரம்பிக்கப்படும். இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 24 மீனவர்களும், 79 படகுகளும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவித்துள்ளார்.

# "தமிழ் சிவில் சமூக அமையம்" புதிய அமைப்பு உதயம்

(யாழ்ப்பாணம்)

மன்னார் ஆயர் தலைமையில் "தமிழ் சிவில் சமூக அமையம்" என்ற புதிய அமைப்பு உதயமாகியுள்ளது.

நேற்று யாழ்.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தமிழ் சிவில் சமூக அமையத்தின் உத்தியோகபூர்வ பேச்சாளரான குமாரவேல் குருபரன் இந்த தகவலைத் தெரிவித்துள்ளார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அவ் அமைப்பின் மற்றுமொரு பேச்சாளராகிய எழில் ராஜனும் கலந்து கொண்டதுடன் அமையத்தின் ஊடக அறிக்கை ஒன்றும் கொள்கை ஆவணமொன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து வருடங்களாக தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகப் பல்வேறு வழி களில் குரல் கொடுத்து வந்த மன்னார் ஆயர் தலைமையிலான தமிழ் சிவில் சமூக வலையமைப்பு "தமிழ் சிவில் சமூக அமையம்" எனும் பெயரில் அமைப்பு வடிவம் பெற்றுள்ளது.

அண்மையில் நடைபெற்ற இவ்அமையத்தின் வருடாந்த ஒன்றுகூடலில் அமையத்தின் கொள்கை ஆவணமும் யாப்பும் ஒன்றுகூடலில் பங்குபற்றியிருந்த 60 இற்கும் மேற்பட்ட வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தமிழ் சிவில் சமூக செயற்பாட்டாளர்களல் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மேலும் அமையத்தின் நிர்வாகக் குழுவும் ஒன்று கூடலில் தெரிவு செய்யப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு,

அமைப்பாளராக மன்னார் ஆயர் கலாநிதி இராயப்பு ஜோசப், இணைச் செயலாளர்களாக பொ.ந.சிங்கம், தியாகராஜன் ராஜன், பேச்சாளர்களாக குமாரவடிவேல் குருபரன், எழில் றாஜன், பொருளாளராக பேராசிரியர் வி.பி.சிவநாதன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் வடக்கு கிழக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்குமான அமையத்தின் இணைப்பாளர்களும் வடக்கு, கிழக்கிற்கு வெளியேயான மாவட்டங்களுக்கான ஓர் இணைப்பாளரும் தெரிவு செய்யப்பட்டனர். (பா)

# வடக்கில் அரச பணிசெய்தவருக்கு

# பாராட்டுரை - மெய்ச்சுரை வழங்குவதில்லை

## கொழும்பு உள்ளூராட்சி வளவாளர் டிலான் கவலை

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் உததியோகத்தர்கள் யாராவது தவறிழைத்தால் உடன் விளக்கம் கோரப்பட்டு அதன் கடிதம் கோவையில் இடப்படுகிறது.

ஆனால் சபைகளின் முன்னேற்றத்திற்கு கஷ்ரப்படும் அலுவலர்களுக்கு மெய்ச்சுரை பாராட்டுக்கள் வழங்கப்படாதது நிர்வாகத்தில் உள்ள குறைபாடாகும்.

கொழும்பு உள்ளூர் ஆளுகை நிறுவன பயிற்சிகள் பணிப்பாளர் டிலான் பெர்னான்டோ இவ்வாறு கவலை தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி அலுவலர்களுக்கான 'பெர்பெக்ட்' (PERFECT) அறிவுறுத்தல் பயிற்சி நெறி யாழ்.பொது நூலகத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது. இதில் வளவாளராக கலந்து கொண்டு உரையாற்றிய டிலான் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி மட்டத்தில் சுவாணபுர விருதுகள் வருடா வருடம் வழங்கப்படுகின்றன. இது பிரதேச, மாகாண, தேசிய மட்டங்கள் என மூன்று வகையாக வகுக்கப்பட்டுள்ளன.

இங்கு நான் அவதானித்த போது உள்ளூராட்சி சபைகளில் பணிகளைச் செய்யாது ஐஸ் அடிப்பவர்களுக்கும், பணிகளை தவறவிட்டவர்களுக்கும் சுட்டி காட்டி கடிதம் அடிப்பதை நான் அறிகின்றேன்.

ஆனால் பிரதேச சபையின் முன்னேற்றத்திற்கும் செயலுருவாக்கத்திற்கும் வினைத்திறனாக கஷ்டப்படும் அலுவலர்களுக்கு மெய்ச்சுரைகள் வழங்கப்பட வேண்டும். இம் மெய்ச்சுரைகள் பாராட்டுக்கள் விருதுகள் வழங்கும் போது பொதுப்படிவம் 230 என்பதனை மையமாக வைத்து செயற்பட வேண்டும்.

மேலும் அதிகார கையளிப்பு கடமைப்பட்டியல், மனிதவலு, நல்லாட்சி, மிலேனியம் இலக்கு தொடர்பில் விளக்கியுள்ளேன். எனவே சபைகளில் பணியாற்றும் முன்னிலை அலுவலர்கள் அர்ப்பணிப்புடன் நேர்மையாக கடமையாற்றினால் சபையும் வளரும் உங்களுக்கான சுவர்ணபுர விருதும் எதிர்காலத்தில் கிடைக்கும் என்றார்.

மேற்படி நிகழ்வை வடமாகாண உள்ளூராட்சி அமைச்சு ஒழுங்குசெய்ததாக வடமாகாண சபை கைதடி அதிகாரி தெரிவித்தார்.

# அக்கரை கிராமத்திற்கு மீள்குடியேற்ற அமைச்சு உதவி

(திருநெல்வேலி)

கோப்பாய் பிரதேச அபிவிருத்திக்காக பன்முகப்படுத்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 42 இலட்சத்து 13 ஆயிரம் ரூபா பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மக்கள் மீளக்குடியமர்ந்த இடங்களில் மலசலகூடம் அமைப்பதற்காக குடும்பம் ஒன்றுக்கு தலா 60 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இடைக்காட்டுப் பகுதியில் உள்ள அக்கரைக் கிராமத்துக்கு மீள் குடியேற்ற அமைச்சினால் 20 மலசலகூடங்கள் அமைப்பதற்கு தலா 60 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. (137)

# கலைத்தூது அழகியற் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெற்றது.



கலைத்தூது அழகியல் கல்லூரியின் அதிபர் திருமதி அஞ்சலா அல்போன்சஸ் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி, சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வித்திணைக்களத்தின் அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மதிவாணி விக்னராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரி கடந்த 2006 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இடம்பெற்ற 6 ஆவது பரிசளிப்பு விழா இதுவாகும். இந்நிகழ்வில் கல்லூரி மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (48)






சிறுப்பிட்டி அ.த.க.பாடசாலையில் கல்வி கற்பித்து வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றவர்களுக்கான பிரிவுபசார வைபவம் அண்மையில் இடம் பெற்றபோது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், பாடசாலை முதல்வர் ப.சுதர்சன் ஆசிரியரொருவருக்கு நினைவுப் பரிசு வழங்கிக் கௌரவிப்பதையும் காணலாம். (137)

# இரத்தப் பரிசோதனை வசதிகள் இல்லை

அச்சுவேலி வைத்தியசாலையில் இரத்தப் பரிசோதனை மேற்கொள்வதற்கான வசதி இல்லாமையால் நோயாளர்கள் பல்வேறு நெருக்கடி நிலைகளை எதிர்கொள்வதாக விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதியில் சிகிச்சை பெறும் மற்றும் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவோர் இரத்தப் பரிசோதனையினை தனியார் இரத்தப் பரிசோதனை நிலையத்தில் அதிகளவு பணம் கொடுத்து மேற்கொள்கின்றனர்.

எனவே குறித்த வைத்தியசாலையில் இரத்தப் பரிசோதனை மேற்கொள்ளும் வசதியினை ஏற்படுத்தித் தருமாறு சம்பந்தப்பட்ட தரப்பினரை நோயாளர்கள் கேட்டுள்ளனர். (85)

# முதியவர்களுக்கு கண் வில்லைகள்

கண் பரிசோதனை செய்யப்பட்டு பார்வைக் குறைபாடுடையவர்கள் என அடையாளம் காணப்பட்ட 60 வயதுக்கு மேற்பட்ட ஐந்து முதியவர்களுக்கான கண்வில்லைகள் சமூகசேவைகள அமைச்சினால் கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கீழ்க்காணும் பெயரையுடையவர்களை கோப்பாய் பிரதேச செயலக சமூகசேவைகள் கிளையில் வந்து அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் ம.பிரதீபன் கேட்டுக் கொண்டுளளார். அவர்களின் விபரம் வருமாறு, ஜெயபத்மராணி சிவம் (இருபாலை கிழக்கு), வைத்திலிங்கம் கனகசுந்தரம்பிள்ளை (தோப்பு, அச்சுவேலி), பொன்னர் கந்தசாமி (முருகன் திடல், புத்தூர் கிழக்கு), மகேஸ்வரி குமாரசாமி (இருபாலை கிழக்கு), சின்னத்தம்பி மூர்த்தி (புத்தூர் மேற்கு). (137)

# சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் விடுதலை செய்யப்பட வேண்டும்

## வடமாகாண எதிர்க்கட்சித்தலைவர் கோரிக்கை



கைது செய்யப்பட்டு சிறைகளில தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும். அத்துடன் இவர்களை விடுவிப்பதாக கூறி வெளிநாடுகளில் இருந்து பணம் சம்பாதிப்பவர்கள் இனம் காணப்பட்டு வெளிப்படுத்தப்படவேண்டும் என வடமாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தார்.

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற வடமாகாண சபையின் அமர்வில அவைத் தலைவரினால் கொண்டு வரப்பட்ட பிரேரணை தொடர்பில் உரை நிகழ்த்துகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

அண்மையில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் ஜனாதிபதியிடம் கைதிகள் விடுதலை தொடாபாக கோரிக்கைவிடப்பட்டது.

நிச்சயமாக இவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும். விளக்கமறியலில் உள்ளவர்கள் வழக்கு பதிவு செய்தவர்களுக்கு என்றால அவர்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட தண்டனைகள் வழங்கப்படவேண்டும். ஏற்கனவே தண்டனை வழங்கப்பட்டவர்கள் பொது மன்னிப்பின் மூலமும் விடுதலை செய்யப்படவேண்டும். ஜனாதிபதிக்கு அந்த அதிகாரம் இருக்கின்றது. அதற்கமைய அவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்பது எமது நிலைப்பாடாகும். வடக்கு, கிழக்கு மட்டுமல்ல மத்தி, மலையகத்தைச் சேர்ந்த பலர் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களது விபரங்கள் பெறப்பட்டு அவர்கள விடுவிக்கப்படவேண்டும். அதுமட்டுமல்லாது அவர்களது குடும்பங்களின விபரங்களைத் திரட்டி அவர்களுக்கான சட்ட உதவிகளை மேற்கொள்ளவேண்டும்.

இதேவேளை இந்த இளைஞர்களை விடுவிப்பதாகக் கூறி பலர் இங்கும் பணம் சம்பாதிக்கின்றனா. புலம் பெயர்ந்தவர்களிடமும், வெளிநாட்டு அரசியலிலும் இவ்வாறு பலர் உழைக்கிறார்கள். கஷ்ரப்படுவது யாரோ அதை வைத்து பணம் உழைப்பது யாரோ. இது நடக்கின்ற விடயம் அதுவும் கணக்கீடு செயயப்பட வேண்டும். இவர்களுக்கு சட்ட உதவி செய்வதாக கூறி பெரும் தொகை பணம் சேகரிக்கின்றார்கள். இவ்வாறு சேகரிக்கப்பட்ட பணத்திற்கு சட்ட உதவி செய்யப் பட்டுள்ளதா? என்பது குறித்தும் ஆராயப்படவேண்டும என்வும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# யுத்தத்திற்கு செலவழித்த பணம் இன்று அபிவிருத்திக்கு செல்கிறது

## அமைச்சர் மகிந்த யாப்பா தெரிவிப்பு



ஒரு காலத்தில் யுத்தத்திற்காக செலவழிக்கப்பட்ட பணம் தற்போது நாட்டின் அபிவிருத்திக்காக செலவழிக்கப்பட்டு வருவதாக அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் யாப்பா இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர் யாப்பா, நாட்டில் தற்போது எங்கு திரும்பினாலும் அபிவிருத்திப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் முன்னொரு காலத்தில் நாட்டில் எங்கு பார்த்தாலும் யுத்தம் காரணமாக உயிரிழந்தவர்களின் மரணவீடுகள் தான் காணப்பட்டன.

இன்று ஜனாதிபதியின் ஆளுமையின் முன்னால் எதிர்க்கட்சிகள் தாக்குப்பிடிக்க முடியாமல் திணறி வருகின்றன. இதன் காரணமாக அவர்களால் இதுவரை ஒரு பொது வேட்பாளரைக் கூட தேடிக் கண்டுபிடித்துக் கொள்ள முடியவில்லை. தேர்தல் முடியும்வரை அவர்களால் பொது வேட்பாளரைத் தேடிக்கொள்வது சிரமமாகவே இருக்கும்.

எதிர்வரும் ஆண்டில் மாத்தறை முழுமையாக அபிவிருத்தி செய்யப்பட்ட மாவட்டமாக மாறி விடும். அதற்கான காரணம் ஜனாதிபதியின் அபிவிருத்திப் பணிகள் தான்.

எனவே பொதுமக்கள் அவரது வெற்றியை உறுதிப்படுத்த முன்வரவேண்டும் என்றும் அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதித் தேர்தல் குறித்து தீர்மானம் எடுக்கவேயில்லை

## என்கிறது ஜே.வி.பி.



ஜனாதிபதி தேர்தல் சட்டவிரோதமான முறையில் நடாத்தப்படுகின்றது. எனவே, இந்த ஜனாதிபதி தேர்தல் குறித்து இறுதித் தீர்மானம் எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை என ஜே.வி.பி. கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாட்களில் மிகவும் தீர்மானமிக்க பல்வேறு சம்பவங்கள் இடம்பெறவுள்ளன. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பிளவடைந்து துண்டுகளாக சிதைவடையக் கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

நாம் இது குறித்து இறுதித் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை. பொது வேட்பாளருக்கு ஆதரவளிப்பதா அல்லது பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதா அல்லது தனியாக வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதா என்ற தீர்மானத்தை ஜே.வி.பி இதுவைரயில் எடுக்கவில்லை.

எதிர்வரும் நாட்களில் இது குறித்து தீர்மானம் எடுக்கப்படும் என ரில்வின் சில்வா செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

# யாழ்ப்பாண மீனவர்களுக்கான மரண தண்டனையில் மாற்றமில்லை

## நீதியமைச்சு தெரிவிப்பு

போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள யாழ்ப்பாண மீனவர்களுக்கான தண்டனையில் மாற்றம் இல்லை என்று நீதியமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சின் செயலாளர் கமலினி டி சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான உடன்படிக்கையின் கீழ் தண்டனை விதிக்கப்பட்ட இந்திய மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர். எனினும் உள்ளூர் சட்டப்படி மூன்று இலங்கை மீனவர்களுக்கும் இன்னும் மரணதண்டனை தீர்ப்பு வழக்கில் உள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

# நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதே அரசின் நோக்கம்

## கூறுகிறார் அமைச்சர் கெஹலிய

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இரத்துச் செய்ய வேண்டும் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடு என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.



அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் நேற்று முன்தினம் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மகிந்த சிந்தனை கொள்கைத் திட்டத்திற்கு அமைய நிறைவேற்று அதிகாரத்தை இரத்துச் செய்ய வேண்டும் என்பதே இன்றைக்கும் ஆளும் கட்சியின் நிலைப்பாடாக அமைந்துள்ளது.

இது தொடர்பில் சந்திக்கு சந்தி சென்று பொய்யாக பிரசாரம் செய்யாது, நியமிக்கப்பட்ட நாடாளுமன்றக் குழுவில் எதிர்க் கட்சிகள் பங்கேற்க வேண்டும்.

அரசியல் அமைப்பில் திருத்தங்களை செய்யும் நோக்கில் 2013ஆம் ஆண்டில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டது.

இந்தக் குழுவில் பங்கேற்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு எதிர்க்கட்சிகள் உரிய பதிலளிக்கவில்லை.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் ஊடாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை 13ஆவது திருத்தச் சட்டம் மற்றும் தேர்தல் முறைமை போன்ற விடயங்கள் குறித்து பேசி இறுதித் தீர்மானங்களை எடுக்க முடியும் என கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

# 1,20000 இளைஞர், யுவதிகள் அரசசேவையில் இணைப்பு



எதிர்காலத்தில் 120,000 இளைஞர், யுவதிகள் அரச சேவையில் இணைத்துக்கொள்ளப்படவுள்ளதாக பொதுநிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது.

க.பொ.த உயர்தரம் சித்தியடைந்த இளைஞர் யுவதிகளை அரச சேவையில் இணைத்துக்கொள்ளும் பொருட்டு 50,000 இளைஞர் யுவதிகள் அரச பாடசாலைகளில் ஆசிரிய உதவியாளர்களாக இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர்.

மேலும், உள்ளூராட்சி நிறுவனங்களின் சேவைகளை திறன்மிக்கதாக்கும்பொருட்டு 50 ஆயிரம் இளைஞர் யுவதிகள் உள்ளூராட்சி நிறுவனங்களில் சேவைக்காக உள்வாங்கப்படவுள்ளனர். இதுதவிர, 20 ஆயிரம் இளைஞர்கள் தொழில்நுட்ப சேவையிலும் நாட்டின் பின்தங்கிய பிரதேச அரச நிறுவனங்களிலும் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நியமனங்கள் 2015 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுக்கு ஏற்ப இடம்பெறவுள்ளன, இதேவேளை, 2014ஆம் ஆண்டில் 51ஆயிரம் பட்டதாரிகள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகவும், 13,308 பேர் முகாமைத்துவ உதவியாளர்களாகவும், 4,200 பேர் கிராம உத்தியோகத்தர்களாகவும் 1,017 பேர் பொறியியலாளர்களாகவும், 1,054 பேர் இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களாகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், 1,212பேர் மொழிபெயர்ப்பாளர்களாகவும் தொழில்நுட்ப உதவியாளர்களாகவும் இவ்வாண்டில் நியமனம் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டு சக்திகளிடம் சிக்கியுள்ளார் அத்துரலிய

## அமைச்சர் எஸ்.பி. தெரிவிப்பு



(கொழும்பு)

அத்துரலிய ரத்ன தேரர் வெளிநாட்டு சக்திகளிடம் சிக்கி இருப்பதாக உயர் கல்வி அமைசசர் எஸ். பி.திஸாநாயக்க தெரிவிததுள்ளார்.

உடுநுவர- தவுலகல பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போது அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ரதன தேரர் வெளிநாட்டு சக்திகளிடம் சிக்கிக் கொண்டிருப்பதாக தான் கருதுவதாக அவர் கூறியுள்ளார்.

யாரையாவது தேர்ந்தெடுத்து பொது வேட்பாளராக முன்நிறுத்தி, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவை விரட்டியடிக்க வேண்டிய தேவை அவருக்கு இருக்கிறது.

இதன்மூலம் அவர் விடுதலைப் புலிகளை மீளெழுப்ப முறபடுகிறார்.

அத்துடன் நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைக்க அவர் முயற்சிக்கின்றார்

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி பொது வேட்பாளராக ரணில் விக்ரமசிங்க போட்டியிடுவதே சிறந்தது என்று அமைச்சர் எஸ். பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாகத்தை கொண்டு செல்லக் கூடியவர் அவர் என்ற வகையில் இதனைக் கூறுவதாக குறிப்பிட்டுள்ளார்.

ரணில் விக்ரமசிங்கவை நியமிக்காது போனால் பல்வேறு வெளித்தரப்புக்களும் கரு ஜெயசூரியவை வேட்பாளராக நியமிக்குமாறு கோரும் சந்தர்ப்பங்கள் உள்ளன.

இது கட்சிக்கு அழுத்தத்தை ஏற்படுத்தும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# வருமானவரி அறிக்கையை பெற்றுக்கொள்ள விசேடதிட்டம்

(கொழும்பு)

வருமானவரி அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கு இந்த வருடம் விசேட முறையொன்றை தயாரித்துள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வருமானவரி தொடர்பான அறிக்கையை ஜாவத்தையில் அமைந்துள்ள அலுவலகத்தில் சமர்ப்பிப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம் சம்பா மஞ்சநாயக்க தெரிவித்தார்.

வருமானவரி அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு நவம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். தற்போது 80 வீதமான வரி வருமானம் கிடைத்துள்ளதாகவும், ஏனைய 20 வீதத்தினை விரைவில் பெற்றுக் கொள்ள எதிர்பார்த்துள்ளதாகவும் சம்பா மஞ்சநாயக்க குறிப்பிட்டார்.

பொதுமக்கள் சிரமப்படாது தமது வருமான வரி அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தியுள்ளதாகவும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மேலும் குறிப்பிட்டது.

# பயங்கரவாதத்தை தோற்கடிக்க நிறைவேற்று ஜனாதிபதி அவசியமில்லை

## என்கிறது ஐ.தே.க.

பயங்கரவாதத்தை தோற்கடிக்க நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை அவசியமில்லை என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரட்ன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிராந்திய நாடுகளில் பயங்கரவாதத்தை ஒழிக்க, நாடாளுமன்ற நிர்வாகமே பயன்படுத்தப்பட்டது.

எனவே நிறைவேற்று அதிகாரம் இலங்கையில் பயன்படுத்தப்பட்டமைக்காக பயங்கரவாதத்தை காரணம் கூறுவது பொருததமாகாது என்று எரான் தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய அவர், இந்தியாவிலும் பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைகள் நாடாளுமன்ற நிர்வாகத்துக்கு ஊடாகவே மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிட்டார்.

# சரியான அரசியல் தலைமையே அபிவிருத்திக்கு அவசியம்

## யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஜெகன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வல்லமை உடையவர்களின் திறமைகளை பயன்படுத்தி எமது பகுதி அபிவிருத்திகளை மேம்படுத்துவதற்கு சரியான ஒரு அரசியல் தலைமை தேவை. என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.வி.குகேந்திரன் (வி.கே. ஜெகன்) தெரிவித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற மானிப்பாய் பகுதி இளைஞர் அணி அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

இன்று உருவாக்கப்பட்டுள்ள இந்த இளைஞர் அணியானது மானிப்பாய் பகுதி அபிவிருத்தியின் சிற்பிகளாக இருக்கவேண்டும். ஒவ்வொரு இளைஞர் மனதிலும் தனது மக்கள் தனது ஊர் என்ற மனப்பாங்கு வளர்க்கப்பட்டால் எமது சமூக வளர்ச்சி தானாக வளர்க்கப்பட்டு விடும். கடந்த காலத்தில் பல இளைஞர் அமைப்புகள் உருவாக்கப் பட்டிருந்தன.

ஆனால் அவை ஒவ்வொன்றும் தவறானவர்களது வழி நடத்தல்களால் திசைமாறி மிக மோசமான அழிவுகளை சந்திக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டனர் என்பது வரலாறு. ஆனால் இன்று உருவான உங்களது அமைப்பு ஒருபோதும் தவறான பாதையில வழிநடாத்தப்படமாட்டாது.

வல்லமை கொண்ட இளைஞர்களது கரங்களைக் கொண்டு அழிந்துபோன எமது தேசத்தை கட்டியெழுப்ப அமைச்சர் டக்ளஸ தேவானந்தா என்றும் உங்களுடன் இருப்பார்.

அவரது கரங்களை பலப்படுத்த வேண்டியது உங்களது கரங்களிலேயே இருக்கின்றது என்றார்.

இந்த இளைஞர் அணி செ.றொபின்சன் தலைமையில் ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவை உள்ளடக்கிய 29 உறுப்பினர்களையும் கொண்டதாக உருவாக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மானிப்பாய் பிரதேச சபை எதிர்க்கட்சித்தலைவர் ஜீவா மற்றும் கட்சி உறுப்பினர்கள் பொதுச்சபை உறுப்பினர்கள் ஆகியோருடன் 100 இற்கு மேற்பட்ட இளைஞர் அணி உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

# பாடசாலை மாணவியின் தோடு அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவி ஒருவரின் தோட்டினை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அபகரித்துச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி ஜெயந்திநகர் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் தரம் 2 இல் கல்விகற்கும் மாணவி ஒருவரிடமே இந்த நகை அபகரிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்றுமுன்தினம் பாடசாலை முடிவடைந்து வீட்டிற்கு சென்று கொண்டிருந்த மாணவியிடம் மோட்டார் சைக்கிளில வந்த ஆணும் பெண்ணும் உனது தோடு கழன்று விட்டது அதனை பூட்டி விடுகின்றேன் எனக் கூறி 5000 ரூபா பெறுமதியான தோட்டினை அபகரித் துச் சென்றுள்ளதாகவும் இது தொடர்பாக கிளிநொச்சி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக் கப்படுகின்றது.

மேலும் இது தொடர்பாக பாடசாலை அதிபர் பெற்றோரிடம் பாடசாலைக்கு மாணவர்களை கொண்டு வந்துவிட்டு பின்னர் ஏற்றிச் செல்ல வேண்டும். அத்துடன் அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் பெற்றோரே அக்கறையாக இருக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார். (81)

# இனம்தெரியாதோரின் நடமாட்டம் பதட்டத்தில் தம்பாலை மக்கள்

(அச்சுவேலி)

அச்சுவேலி, தம்பாலை சபா லேன் பகுதியில் இரவு வேளைகளில் இனந்தெரியாதோரின் நடமாட்டம் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் இரவு வேளையில் சிலர் உலாவித் திரிவதாகவும் இதனால் இரவு வேளைகளில் வீட்டை விட்டு வெளியே வருவதில்லை எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

சில மாதங்களுக்கு முன்னர் இப்பகுதியை அண்டிய இடங்களில் பல்வேறு பொருட்கள் திருட்டுப்போயுள்ளதாகவும் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே இது தொடர்பில் பொலிஸார் கவனமெடுத்து செயற்படவேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (85)

# முரசின் இன்றைய பலன்



(22.11.2014 சனிக்கிழமை)

ஜய வருஷம் கார்த்திகை மாதம் 06 ஆம் திகதி.
அமாவாசை / சித்தம்.
விசாக நட்சத்திரம் பிற்பகல் 02.01 வரை. பின் அனுசம்.
இராகு காலம் 09.10 - 10.40 வரை. சுபநேரம் 03.10 - 04.40 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | வயது மற்றும் பதவிக்கு மதிப்பளிக்காதவர்களை நினைத்து வேதனையடைதல், பணியை நிறைவேற்ற பிரயத்தனம் செய்தல். |
| ரிஷபம் | வாக்குறுதி அளிக்கும் போது சிந்தித்து செயற்பட வேண்டும், அரச அதிகாரிகளின் செல்வாக்கினால் உயர்பதவி கிட்டும். |
| மிதுனம் | பிரயாணத்தின் போது அசௌகரியம் ஏற்படல், காசோலை கொடுக்கல் வாங்கலை பயன்படுத்துவதை தவிர்த்தல் நன்று, எடுத்த காரியம் சிறப்புற அமையும். |
| கடகம் | ஆலோசனையைக் கேட்டு முடிவெடுப்பது நன்று, வீண் அலைச்சல் ஏற்படும், எடுத்த காரியம் தாமதமாக முடிவடையும். |
| சிம்மம் | மொழி தெரிந்ததால் பிரச்சினை சுமுகமாதல், அடுத்தவர்களுக்காக பொறுப்பினை ஏற்காது கைவிட்டு விடுங்கள். |
| கன்னி | நீண்ட நாட்களாக டிமிக்கி கொடுத்தவர் கையும் மெய்யுமாகப்பிடிபடல், விவாகபேச்சு தொடர்பில் அவதானம் தேவை. |
| துலாம் | எதிர்பாராது ஏற்பட்ட இடமாற்றத்தினால் தயக்கமடைதல், நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்க தம்பதியர் சகிதம் கலந்து கொள்ளல். |
| விருச்சிகம் | நம்பிக்கையிழந்த பணம் கைக்குவந்ததை நம்பமுடியாது இருத்தல், சுகாதாரச்சீர்கேடு காரணமாக சீல் வைக்க எச்சரிக்கை விடுத்தல். |
| தனுசு | சரியாகக்கணக்கிட்டுப் பெறாத பணத்தில் குறைவு கண்டு அதிர்ச்சியடைதல், காவலரின் எச்சரிக்கையைப் பொருட்படுத்ததால் பிடிபடல். |
| மகரம் | சகோதரர்கள் பொறுத்த கட்டத்தில் உதவியும் ஆதரவும் வழங்குதல், சேமிப்பில் கவனஞ்செலுத்துதல். |
| கும்பம் | ஒழுக்கத்தைப் பேணியதால் மகிழ்ச்சிகிட்டும், உதவி செய்யும்படி தொலைபேசி மூலம் வந்த செய்தியை நிறைவேற்றித்திருப்திப்படல். |
| மீனம் | போக்குவரத்தின் போது விபத்தேற்படும் அபாயம், நீண்ட நாள் பிரார்த்தனை நிறைவேறியதில் தெய்வத்திற்கு நன்றி கூறல். |


# இலங்கை வங்கி குறைந்த வட்டிக்கு விவசாயக் கடன் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

இலங்கைவங்கி தற்போது குறைந்த வட்டி வீதத்திற்கு விவசாய கடன்களை வழங்கி வருகின்றது. இது குறித்து இலங்கை வங்கியின் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் எஸ்.என். மாணிக்கசிங்கி தகவல் தெரிவிக்கும்போது முன்பு வருடாந்தம் ஒன்பது வீத வட்டிக்கு வழங்கப்பட்டு வந்த கடனின் வட்டி வீதம தற்போது ஏழு வீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி முன்னர் பரப்பு பயிர்ச் செய்கைக்கு வழங்கப் பட்ட கடன் தொகையை விட தற்போது அதிகரித்த தொகை கடனாக வழங்கப்பட்டு வருகின்றது. பரப்பு ஒன்றிற்கான கடன் தொகையானது பயிரிடப்படும் பயிர்வகைகளின் பயிர் பராமரிப்பு, சந்தைப்படுத்தல் போன்றவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

முன்பு வங்கியில் ஒன்பது வீதவட்டிக்கு கடன் பெற்றுக் கொண்டவர்களும் அந்தக் கடனை மீளச்செலுத்துவதன் மூலம் குறைந்த வட்டி வீதத்தில் இந்த கடனைப்பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவித்தார். (54)




கொமர்சல் வங்கியின் சமூகப் பொறுப்பு நிதியத்தினால் முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட கணனி ஆய்வுகூடத்தை கொமர்ல் வங்கி முகாமையாளர் எம்.மணிவண்ணன் கணனியை இயக்கி ஆரம்பிப்பதையும் மாணவர்கள் கணனியை பயன்படுத்துவதையும் காணலாம். (01)

### மைலோ கிண்ண கால்பந்தாட்டம்

# அரையிறுதிக்கான மோதல்கள் இன்று

## சென். மேரிஸ், நவஜீவன்ஸ், மற்றும் பாடுமீன், கலைமதி அணிகள் பலப்பரீட்சை



நாவாந்துறை சென். மேரிஸ்



உடுப்பிட்டி நவஜீவன்ஸ்



நவிண்டில் கலைமதி



குருநகர் பாடுமீன்

(யாழ்ப்பாணம்)

மைலோ கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டத்திற்கு நாவாந்துறை சென். மேரிஸ், உடுப்பிட்டி நவஜீவன்ஸ் மற்றும் பாடுமீன், கலைமதி அணிகள் முன்னேறி யுள்ள அதேவேளை, அரையிறுதி ஆட்டங்கள் இன்றைய தினம் நடைபெறவுள்ளன.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட விளையாட்டுப் பிரிவு ஏற்பாடு செய்துள்ள மைலோ கிண்ண கால்பந்தாட்டத் தொடரின் முதன்மைச் சுற்றின் காலிறுதி ஆட்டங்கள் நேற்றைய தினம் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

முதலாவது காலிறுதிப் போட்டியில் நடப்புச் சம்பியனான நாவாந்துறை சென். மேரிஸ் அணியும் மெலிஞ்சிமுனை இருதயராஜா அணியும் மோதின. ஆட்டம் ஆரம்பமாகி மூன்றாவது நிமிடத்தில் சென். மேரிஸ் அணியின் ஜக்சன் முதல் கோலை அடித்து அணியை முன்னிலைப்படுத்தினார். தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திய சென். மேரிஸ் அணிக்கு 23ஆவது நிமிடத்தில் ஜெனற் மற்றுமொரு கோலைப் போட்டுக் கொண்டார். இந்நிலையில் முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தது.

பிற்பாதி ஆட்டத்தில் மெலிஞ்சிமுனை இருதயராஜா அணி கோல் அடிக்க பெரும் பிரயத்தனம் செய்தபோதிலும் சென். மேரிஸ் அணியின் பிற்கள தடுப்பணையைத் தாண்டி உள்நுழைய அதனால் முடியவில்லை. மறுபுறத்தில் சென். மேரிஸ் அணியின் கோல் எண்ணிக்கை உயர்ந்தவண்ணமிருந்தது. 31ஆவது நிமிடத்தில் நிரோஜன், 45ஆவது நிமிடத்தில் ஜெனற் கோல் அடித்து அணியின் ஸ்திரத் தன்மையை அதிகரித்தனர். நிறைவில் நாவாந்துறை சென். மேரிஸ் அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது காலிறுதிப் போட்டியில் நவாலி சென். பீற்றர்ஸ் அணியும் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும் மோதின. முதல் கோலை நவஜீவன்ஸ் அணி 14ஆவது நிமிடத்தில் பெற்றுக்கொண்டபோதிலும் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் மோதிக் கொண்டன. இதன் காரணமாக முற்பாதி ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை நவஜீவன்ஸ் அணி 1-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றிருந்தது. பிற்பாதி ஆட்டத்தின் 28ஆவது நிமிடத்தில் நவஜீவன்ஸ் அணியின் உமாகாந் சிறப்பானதொரு கோலைப் போட்டு அணியை முன்னிலைப் படுத்தினார். இதற்குப் பதிலடி கொடுக்கும் வகை யில் நவாலி சென். பீற்றர்ஸ் அணியின் ஸ்ரீபன் 35ஆவது நிமிடத்தில் கோல் ஒன்றைப் போட்டுக் கொண்டார். இரு அணிகளும் மேலதிகமாக கோல்களைப் பெற்றுக் கொள்ள போராடின. இதில் 42ஆவது நிமிடத்தில் நவஜீவன்ஸ் அணிக்கு முதல் கோல் அடித்த கௌதமன் மீண்டுமொரு கோலை அடித்து அணியின் வெற்றியை உறுதி செய்தார். முடிவில் நவஜீவன்ஸ் அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

மூன்றாவது காலிறுதிப் போட்டியில் வேலணை துறையூர் ஐயனார் அணியும் நவிண்டில் கலைமதி அணியும் மோதின. முதல் இருபது நிமிடங்களும் இரு அணிகளும் பந்து மாறி மாறி தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தன. இந்நிலையில் 22 மற்றும் 24ஆவது நிமிடங்களில் கலைமதி அணியின் சிந்துஜன் அடுத்தடுத்து இரு கோல்களை அடித்து அணியை முன்னிலைப்படுத்தினார். தொடர்ந்து கலைமதியின் சந்துரு 31ஆவது நிமிடத்தில் கோல் அடித்து அசத்தினார். இதன் பின்னர் வேகம் கொண்ட துறையூர் ஐயனார் அணியின் கோகுலன் 32ஆவது நிமிடத்தில் கோல் அடித்து அணியைக் கௌரவப்படுத்தினார். இதன் பின் 38ஆவது நிமிடத்தில் கலைமதியின் ரவிசங்கர் ஒரு கோலை அடிக்க போட்டி நிறைவுக்கு வந்தது. முடிவில் நவிண்டில் கலைமதி அணி 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இறுதியாக நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் குருநகர் பாடுமீன் அணியும் தெல்லிப்பளை நாமகள் அணியும் மோதின. ஆரம்பம் முதலே அசத்திய பாடுமீன் அணி கோல் மழை பொழிந்து இரசிகர்களைப் பரவசப் படுத்தியது. முதலாவது கோலை 10ஆவது நிமிடத்தில் கெடில்ஸ், இரண்டாவது கோலை 33ஆவது நிமிடத்தில் ஞானப்பிரதாபன், மூன்றாவது கோலை 37ஆவது நிமிடத்தில் சேயன், நான்காவது கோலை 43ஆவது நிமிடத்தில் மீண்டும் ஞானப்பிரதாபன் அடித்து அணியின் வெற்றியை உறுதி செய்தனர். இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் நாமகள் அணி செயற்பட்டபோதிலும் அதன் முயற்சிகள் அனைத்தும் பாடுமீன் அணியால் முறியடிக்கப்பட்டது. நிறைவில் பாடுமீன் அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இதேவேளை, இன்றைய தினம் நடைபெறவுள்ள முதலாவது அரையிறுதிப் போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் அணியும் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும் மோதவுள்ள அதேவேளை, இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து குருநகர் பாடுமீன் அணியும் மோதவுள்ளன. இப்போட்டிகள் இன்று முற்பகல் 10.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (எஸ்.பி., 93,48)

## உலக கிண்ணத்துடன் ஓய்வுபெறும் சங்கா

இலங்கை அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்கார அவுஸ்ரேலியா - நியூசிலாந்தில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் தொடருக்குப் பின்னர் ஓய்வு உள்ளதாக தெரிவித்துள்ளார். இது குறித்து சி.என்.என். இன் ரோல்க் ஏசியாவுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார். இதில் அவர் தெரிவித்த விடயங்கள் வருமாறு: நான் அண்மைக்காலமாக ஓய்வு குறித்து கவனம் செலுத்தி வருகிறேன். ஏற்கனவே ருவென்ரி-20 கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டேன். இப்போது இரு வடிவ கிரிக்கெட் போட்டிகளில் மட்டும் விளையாடி வருகிறேன். உலகக்கிண்ணத்தின் பின்னர் எனது ஒருநாள் கிரிக்கெட் வாழ்வை ஒரு வருடத்தால் அதிகரித்தாலும் 7 தொடக்கம் 9 வரையான போட்டிகளிலேயே என்னால் விளையாட முடியும். ஓய்வின் பின் சனத் ஜெயசூரியா ஆகியோருடன் நானும் அணித் தேர்வாளர்களில் ஒருவராகவே விரும்புகிறேன். இது மிகவும் கஷ்டமான வேலை. உலகக்கிண்ணத்தின் பின் எதுமில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஸ்மித் சதம்; தொடரை வென்றது ஆஸி.

(மெல்பேர்ன்)

தென்னாபிரிக்க அணிக்கெதிரான நான்காவது ஒரு நாள் போட்டியில் அவுஸ்ரேலிய அணி மூன்று விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றதுடன் ஒரு நாள் தொடரையும் கைப்பற்றிக்கொண்டது.

தென்னாபிரிக்க, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் நான்காவது போட்டி நேற்று மெல்பேர்னில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய தென்னாபிரிக்க அணி டிவில்லியர்ஸின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் தென்னாபிரிக்க அணி 50 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 267 ஓட்டங்களைப் பெற்றது. இதில் டிவில்லியர்ஸ் 91, டேவிட் மில்லர் 45, டுபிளிசர்ஸ் 28 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் போல்க்னர் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 268 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அவுஸ்ரேலிய அணி ஸ்ரீபன் ஸ்மித்தின் அதிரடிச் சதத்தின் மூலம் வெற்றியைப் பதிவு செய்தது. இறுதியில் அவுஸ்ரேலிய அணி 49 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ஸ்ரீபன் ஸ்மித் 104, போல்க்னர் 34, ஆரோன் பிஞ்ச் 22, வட்சன் 19 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஸ்ரெய்ன் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். போட்டியின் ஆட்டநாயகனாக ஸ்ரீபன் ஸ்மித் தெரிவு செய்யப்பட்டார். இவ்வெற்றியின் மூலம் ஐந்து




போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரில் ஒரு போட்டி எஞ்சியுள்ள நிலையில் அவுஸ்ரேலிய அணி 3-1 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியுள்ளது.

இரு அணிகளுக்குமிடையிலான ஐந்தாவதும், இறுதியுமான ஆட்டம் நாளை சிட்னியில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டுத்துறைக்கு பெருமளவில் நிதி ஒதுக்கீடு

## அமைச்சர் அளுத்கமகே மகிழ்ச்சி

(கொழும்பு)

இலங்கை அரசியல் வரலாற்றில் எந்தவொரு அரசாங்கமும் விளையாட்டுத் துறைக்கு ஒதுக்கியிருக்காதளவு பணத்தை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் ஒ்துக்கியிருப்பதாக விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

விளையாட்டுத் துறைக்கான ஒதுக்கீடு 500 மில்லியன் ரூபாவிலிருந்து 6500 மில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். விளையாட்டுத்துறை அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு குறித்த குழுநிலை விவாதத்தில் பதிலளித்து உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார். தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்,

ஐ.தே.க.வின் ஆட்சிக் காலத்தில் கொழும்புடன் மட்டுப்படுத்தப்பட்டிருந்த விளையாட்டுத்துறையை மகிந்த அரசாங்கம் கிராமங்களுக்கு கொண்டு சென்றுள்ளது. இதற்காகவே 6500 மில்லியன் ரூபாவை அரசு விளையாட்டுத்துறைக்கு ஒதுக்கியுள்ளது. விளையாட்டின் முக்கியத்துவத்தை நாட்டுத் தலைவரான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உணர்ந்துள்ளதால் பெருந்தொகை பணத்தை அவர் ஒதுக்கியுள்ளார்.

இவருடைய ஆட்சிக் காலத்திலேயே



விளையாட்டுத்துறைக்கென தேசிய கொள்கையொன்று தயாரிக்கப்பட்டது. முன்னர் கல்வி அமைச்சு, உயர்கல்வி அமைச்சு, விளையாட்டு அமைச்சு என ஒவ்வொரு அமைச்சுக்களும் ஒவ்வொரு விதமாக விளையாட்டுப் போட்டிகளை நடாத்தின. ஆனால் தற்பொழுது தேசிய கொள்கையொன்று தயாரிக்கப்பட்டு அதன் படியே விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்படுகின்றன.

பாடசாலைகளில் விளையாட்டு கட்டாயப்படுத்தப்படவேண்டும் என ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளார். இதற்கமைய அடுத்த வருடம் முதல் பாடசாலைகளில் விளையாட்டு கட்டாயப் படுத்தப்பட்டுள்ளது. இதன் ஊடாகவே தேசிய விளையாட்டு வீரர்களை நாம் உருவாக்க முடியும். விளையாட்டுக்களுக்கான பயிற்றுவிப்பாளர்கள் பற்றாக்குறையாக உள்ளனர். புதிய பயிற்சியாளர்களை உருவாக்குவது தொடர்பிலும் அரசாங்கம் அதிக அக்கறை செலுத்தியுள்ளது. 1000 பயிற்சியாளர்களுக்கு பயிற்சிகளை வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

விளையாட்டுத்துறை தொடர்பான சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் திருத்தியமைத்ததன் மூலம் தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்துகளைப் பயன்படுத்திய வீரர்களுக்கு எதிராக தண்டனை வழங்க முடிந்தது. இலங்கையின் விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் சகல நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த பின்னரே இலங்கையில் 120 சர்வதேச போட்டிகள் நடாத்தப்பட்டுள்ளன. இது நாட்டுக்கு மேலும் பெருமையைச் சேர்த்துள்ளது என்றார்.



## மன்னார் வலய ஆசானுக்கு இரண்டு பதக்கங்கள்

(மன்னார்)

ஆசிரியர்களுக்கான விளையாட்டு விழாவில் மன்னார் சித்தி விநாயகர் தேசிய பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியர் குணலிங்கம் சியாந்தன் தங்கம் உட்பட இரு பதக்கங்களை வென்று மன்னார் வலயத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்.

ஆசிரியர்களுக்கான விளையாட்டு விழா அண்மையில் நுவரெலியாவில் நடைபெற்றது. இதில் முப்பாய்ச்சல் போட்டியில் பங்குகொண்ட மன்னார் சித்தி விநாயகர் பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியர் குணலிங்கம் சியாந்தன் 13.63 மீற்றர் பாய்ந்து தங்கப்பதக்கத்தை வென்றதோடு 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும் வென்றுள்ளார். இவருக்கு மன்னார் கல்வி வலயம் மற்றும் பாடசாலைச் சமூகம் வாழ்த்துத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஏழு போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடருக்கான கிண்ண அறிமுக நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றுது. இதில் கப்டன்களான மத்தியூஸ், குக் ஆகியோர் கிண்ணத்தை அறிமுகம் செய்துவைப்பதைக் காணலாம். இப்போட்டித் தொடரின் முதல் ஆட்டம் எதிர்வரும் 26ஆம் திகதி கொழும்பு பிரேமதாஸ விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சாய்னாவின் அடுத்த இலக்கு

(மும்பை)

கிராண்ட்ஸ்லாமில் பெண்கள் இரட்டையர் பட்டத்தை வெல்வதே எனது அடுத்த இலக்கு என சானியா மிர்சா தெரிவித்துள்ளார்., சமீபத்தில் உலக பெண்கள் சம்பியன்ஷிப் பட்டத்தை வென்றேன். கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் மூன்று கலப்பு இரட்டையர் பட்டத்தை கைப்பற்றியிருக்கிறேன். கிராண்ட்ஸ்லாமில் பெண்கள் இரட்டையர் பட்டத்தை வெல் வதே எனது அடுத்த இலக்கு. ரென்னிஸை விட்டு விலகும் முன்பு அந்த இலக்கை அடைந்து விடுவேன் என்று நம்புகிறேன் என்றார். 28 வயதான சானியா மிர்சா, அடுத்த ஆண்டில் சீன-தைபே வீராங்கனை சு-வெய் ஹூசையுடன் இணைந்து இரட்டையர் பிரிவில் சானியா விளையாடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ஆளுநர் வெற்றிக் கிண்ண கால்பந்து

## விநாயகர், யங்ஹென்றீஸ் முன்னேற்றம்



ஆளுநர் வெற்றிக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் இரண்டாவது சுற்றுக்கு இளவாலை யங்ஹென்றீஸ் மற்றும் கல்வளை விநாயர் அணிகள் முன்னேறியுள்ளன.

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் ஆளுநர் வெற்றிக்கிண்ண கால்பந்தாட்டப் போட்டிகள் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

விலகல் முறையில் நடைபெற்று வரும் இப் பேர்ட்டித் தொடரில் வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட அணிகள் பங்குபற்றி வருகின்றன.

இதில் நேற்று முன்தினம் இரண்டு போட்டிகள் நடைபெற்றன. முதல் போட்டியில்

அராலி அண்ணா அணியும் கல்வளை விநாயகர் அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் கோல்களைப் பெற்றுக்கொள்ள துடிப்புடன் செயற்பட்டன. இதில் கல்வளை விநர்யகர் அணிக்கு கிடைத்த வாய்ப்பை உரிய முறையில் பயன்படுத்தி கோலைப் பெற்றுக் கொண்டதுடன் முன்னிலையும் பெற்றது. இதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாக அராலி அண்ணா செயற்பட்டபோதிலும் விநாயகர் அணியின் பிற்கள தடைகளைத் தாண்டி உள்நுழைய முடியவில்லை. நிறைவில் கல்வளை விநாயகர் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் இளவாலை யங்ஹென்றீஸ் அணியும் சாவற்காடு மகாத்மா அணியும் மோதின. இதில் இரு அணிகளும் கோல்களைப் பெற்றுக்கொள்ள தீவிரமாகச் செயற்பட்டன. இரு அணிகளும் பந்தை மாறி மாறி கட்டுப்பாட்டில் வைத்திருந்தபோதிலும் கோல் அடிக்கும் வாய்ப்புக்களை கோட்டைவிட்டு தமது இரசிகர்களை ஏமாற்றினர். இரு அணிகளின் கோல் அடிக்கும் முயற்சி இறுதி வரை கைகூடாத நிலையில் தண்ட உதையின் மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் இளவாலை யங்ஹென்றீஸ் அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது.

இப்போட்டித் தொடரின் ஏனைய ஆட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93, 48)

## காதலை சூசகமாக ஒப்புக்கொண்ட ஹோலி

பொலிவுட் நடிகை அனுஷ்காவுடன் காதல் இருப்பதை இந்திய கிரிக்கெட் வீரர் ஹோலி ஒப்புக் கொண்டார். எனினும், இது எங்கள் தனிப்பட்ட வாழ்க்கை. இதை மற்றவர்கள் மதிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

ஹோலியும், அனுஷ்கா சர்மாவும் காதலிப்பதாக கடந்த இரண்டு ஆண்டுகளாக செய்திகள் வெளியாகி வருகின்றன. நியூசிலாந்து சுற்றுப்பயணம், இங்கிலாந்து சுற்றுப் பயணம், இலங்கையில் படப்பிடிப்பு போன்ற தருணங்களில், இருவரும் இணைந்து



பொது இடங்களுக்குச் சென்ற படங்களும் வெளியாகின.

இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் ஹோலி சரியாக ஆடாததற்கும் கூட, அனுஷ்கா சர்மா அங்கு சென்றிருந்ததுதான் காரணம் என பத்திரிகைகள் வரிந்து கட்டிக் கொண்டு எழுதின. சமீபத்தில் இலங்கைக்கு எதிரான 3ஆவது ஒரு நாள் ஆட்டத்தில் ஹோலி அரைச்சதம் அடித்த பின்பு, போட்டியை நேரில் பார்த்துக் கொண்டிருந்த அனுஷ்காவின் திசையை நோக்கிப் பறக்கும் முத்தம் கொடுத்தார். இது அவர்களது காதலை மேலும் உறுதிப்படுத்துவது போல இருந்தது.

இந்நிலையில், மும்பையில் நடைபெற்ற தனியார் நிகழ்ச்சியின்போது, முதல் முறையாக ஹோலி, தங்களது காதலை உறுதிப்படுத்தினார். அவர் கூறியதாவது: நாங்கள் எதையும் மறைக்கவும் இல்லை, மறைக்க முயற்சிக்கவும் இல்லை. அப்படி இருக்கையில் திரும்பத் திரும்ப ஒரே கேள்வியைக் கேட்டு, அதில் விவாதம் நடாத்துவது சரியென்று நாங்கள் கருதவில்லை.

இருவரும் இணைந்து செல்வதைப் பார்த்து விட்ட பின்பும், இது உண்மை தானா எனக் கேட்கின்றனர். இந்த இடத்தில் மக்கள் நாகரீகத்துடன் நடந்து கொள்ள வேண்டும். எனக்கும், அனுஷ்காவுக்கும் இடையே நட்பு உள்ளது. இது பற்றி யாரும் அதிகம் தெரிந்து கொள்ள விரும்பக் கூடாது. அது எங்கள் தனிப்பட்ட உரிமை. இதை நாங்கள் வெளிப்படையாகப் பேச விரும்பவில்லை. எனவே, ஊடகங்களும், மற்றவர்களும் இதைப் புரிந்து நடந்து கொள்ள வேண்டும் என்று ஹோலி தெரிவித்தார்.

## ஹபீஸ் விளக்கம்

அண்மையில் பந்துவீச்சு தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டுள்ள பாகிஸ்தான் அணியின் மொஹமட் ஹபீஸ், தான் துடுப்பாட்ட வீரனே எனக் கூறியுள்ளார். தன்னை ஒரு பந்துவீச்சாளராக தான் நினைக்கவே இல்லை எனக் கூறியுள்ள அவர் தான் எப்போதும் தனது துடுப்பாட்டத்திலேயே அக்கறை செலுத்தி வருவதாகவும் கூறியுள்ளார்.

என்னால் ஓரளவு மாற்றங்களை செய்து பந்து வீச முடியும். அது அணிக்கு கை கொடுத்துள்ளது. நான் மீண்டும் சாதாரணமான கிரிக்கெட் விளையாடும் நிலையில் மீள வருவேன். அஜ்மல் தொடர்பாக என்னால் கருத்துத் தெரிவிக்க முடியாது. அவர் சிறந்த மனிதர். மற்றவர்களுக்கு உதவ நினைக்கும் ஒருவர் என அவர் மேலும் தெரிவித்தார்

# எதிர்க் கட்சிகளின் தடுமாற்றம்

– எம்.எஸ்.எம்.ஐயூப் கட்டுரையிலிருந்து.



மகிந்த ராஜபக்ஷ மூன்றாவது முறையும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியும் என்றும் அவர் தமது தற்போதைய பதவிக் காலத்தில் நான்காண்டுகள் முடிவடைந்ததன் பின் மற்றுமொரு ஜனாதிபதித் தேர்தலை நடாத்த நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

மகிந்த ராஜபக்ஷவுக்கு மூன்றாவது முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது என்று முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என். சில்வாவே முதன் முதலாக கூறியிருந்தார். அதன் பின்னர், மக்கள் விடுதலை முன்னணி அக் கருத்தை தமது தற்கால பிரதான அரசியல் ஆயுதமாக பாவிக்க முற்பட்டது.

சில்வா, சட்டத்தைப் பற்றி மட்டுமல்லாது சட்டத்துறையில் உபயோகிக்கப்படும் தந்திரோபாயங்கள் மற்றும் திருகுதாளங்களைப் பற்றியும் நன்கு அறிந்தவர். ராஜபக்ஷ மூன்றாவது முறையாக போட்டியிட முடியாது என்று அவர் உண்மையிலேயே கருதியிருந்தால், அதேவேளை சட்டத்தின் ஆதிக்கமும் நிலைத்திருக்க வேண்டும் என்பதற்காக ராஜபக்ஷ மீண்டும் போட்டியிடுவதை தடுக்க வேண்டும் என்றும் அவர் கருதியிருந்தால், அவர் தமது கருத்தை முன்கூட்டியே வெளியிட்டு இருக்கக் கூடாது.

தமது பதவிக் காலத்தில் நான்காண்டுகள் முடிவடைந்த பின், மகிந்த ராஜபக்ஷ மீண்டும் ஜனாதிபதித் தேர்தலை நடாத்த நடவடிக்கை எடுக்கப் போகிறார் என்று பல மாதங்களாக வதந்திகள் பரவியிருந்தன. இந்த நிலையில் அந்த நான்காண்டுகள் முடிவடைவதற்கு பல மாதங்களுக்கு முன்னரே அவ்வாறு தேர்தலை நடாத்த முடியாது என்றும் ராஜபக்ஷ போட்டியிட முடியாது என்றும் கூறினால், ராஜபக்ஷ அதைக் கேட்டு "சும்மா" இருந்துவிடுவார் என சில்வாவும் பல அரசியல் கட்சிகளும் நினைத்திருக்கின்றன போலும்.

முன்கூட்டியே அவ்வாறு கூறியதால், ஒன்றில் ராஜபக்ஷ தமது ஜனாதிபதி அதிகாரங்களைப் பாவித்து தேர்தலை நடாத்தவும் அதில் போட்டியிடவும் முற்படுவார், அல்லது உயர்நீதிமன்றத்தை அணுகுவார் என்பது சிறு குழந்தைகளும் ஊகித்து இருக்கும். ஆனால், சில்வாவோ அல்லது மக்கள் விடுதலை முன்னணியோ அதனை விளங்கிக்கொள்ளவில்லை போலும்.

ராஜபக்ஷ, தமது ஜனாதிபதி அதிகாரங்களைப் பாவித்து தேர்தலை நடாத்தவும் அதில் போட்டியிடவும் முற்பட்டால் சில்வாவோ வேறு எவருமோ அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடியாது.

ஏனெனில், நிறைவேற்று ஜனாதிபதி செய்த அல்லது செய்யாத எந்த விடயத்தைப் பற்றியும் வழக்குத் தாக்கல் செய்ய முடியாது என்று சட்டத்தில் இருக்கிறது.

ஆனால், ராஜபக்ஷ தமது ஜனாதிபதி அதிகாரங்களைப் பாவித்து தேர்தலை நடாத்தவும் அதில் போட்டியிடவும் முற்பட்டால் அந்தத் தேர்தலை நடாத்துவது தொடர்பாகவும் ராஜபக்ஷவின் வேட்புமனுவை ஏற்றது தொடர்பாகவும் தேர்தல் ஆணையாளருக்கு எதிராக வழக்குத்

# கே.வி. மகாதேவன்



**32**

– பி.ஜி.எஸ்.மணியன் –

எழுத்தாளர் அகிலனின் "வாழ்வு எங்கே" நாவல் ஏ.பி.நாகராஜனின் திரைக்கதை வசனம் இயக்கத்தில் சிவாஜி கணேசன் - சரோஜாதேவி - தேவிகா நடிக்க "குலமகள் ராதை" படமாக வெளிவந்தது.

"உலகம் இதிலே அடங்குது" - டி.எம்.எஸ். பாடும் இந்த விறுவிறுப்பான பாடலுடன்தான் படமே தொடங்குகிறது.

"ராதே உனக்கு கோபம் ஆகாதடி" - எம்.கே. தியாகராஜா பாகவதர் பாடிப் பிரபலமான ஒரு பாடல். அதே மெட்டில் டி.எம். சௌந்தரராஜனின் கம்பீரக்குரலில் அப்படியே வார்த்தெடுத்திருந்தார் கே.வி. மகாதேவன்.

"சந்திரனைக் காணாமல் அல்லிமுகம் மலருமா" - டி.எம்.எஸ் - பி.சுசீலா பாடும் இந்தப் பாடலில் முதல் சரணம் முடிந்ததும் நடைபேதம் செய்து அடுத்த சரணத்தை அமைத்து கடைசியில் மீண்டும் பல்லவிக்கேற்ற நடைக்குத் திரும்பிவந்து .. என்று நகாசு வேலை காட்டி இருக்கிறார்.

"உன்னைச் சொல்லிக் குற்றமில்லை" - டி.எம்.எஸ். குரலில் மிகவும் பிரபலமான இந்தப் பாடல் - வித்தியாசமான மெட்டு.

"பகலிலே சந்திரனைப் பார்க்கப் போனேன்" - பி.சுசீலாவின் சோகப் பாடல்.

"கள்ளமலர்ச் சிரிப்பிலே" - பி.சுசீலா குரலில் செந்தேனாக இனிக்கும் பாடல்.

டி.எம்.எஸ். இக்கு என்று பிரபலமான பாடலைக் கொடுத்த மகாதேவன் படத்தின் பெயர் சொன்னாலே நினைவில் நிற்கும் அளவுக்கு பி.சுசீலாவின் குரலில் கொடுத்த பாடல் "இரவுக்கு ஆயிரம் கண்கள்".

பாடல் வரிகளும், இணைப்பிசையும், அமைத்த விதமும் இந்தப் பாடலை நிற்க வைத்துவிட்டது.

சிவாஜி கணேசன் சொந்தமாக தயாரித்த முதல் படத்துக்கு இசை அமைக்கும் வாய்ப்பு கே.வி.மகாதேவனுக்கே கிடைத்தது. படம் "அன்னை இல்லம்". பி.மாதவன் இயக்கிய முதல் சிவாஜி படம் இது.

"நடையா இது நடையா" - டி.எம்.எஸ். குரலில் ஒரு ஈவ் டீசிங் பாடல்.

"மடிமீது தலைவைத்து" - டி.எம்.எஸ். - சுசீலாவின் குரல்களில் அருமையான ஒரு மெலடி.

"எண்ணிரண்டு பதினாறு வயது" - டி.எம்.எஸ்ஸுடன் "ஹம்மிங்கில்" எல்.ஆர். ஈஸ்வரி இணையும் பாடல்.

"பாசமலர்" தயாரித்த மோகன் கிருஷ்ணன் பஞ்சு இயக்கத்தில் தயாரித்த "குங்குமம்" படத்தின் அனைத்துப் பாடல்களும் சூப்பர் ஹிட்.

சிவாஜிக்கு ஜோடியாக விஜயகுமாரி நடித்த முதல் படம் இது. 'இவர்களுடன் எஸ்.எஸ்.ஆர்., சாரதா, எஸ்.வி. ரங்காராவ், எம்.வி.ராஜம்மா, நாகேஷ், மனோரமா - ஆகியோரும் நடித்திருந்தனர்.

பாடல்களில் ஒரு இசைச் சாம்ராஜ்யமே நடாத்தி இருந்தார் கே.வி.மகாதேவன்.

"குங்குமம் மங்கள மங்கையர் குங்குமம்" - சூலமங்கலம் ராஜலக்ஷ்மி, பி.சுசீலா. முழுக்க முழுக்க கர்நாடக ராகமான "ஆபேரி"யில் அற்புதமாக அமைத்திருந்தார்.

"பூந்தோட்டக் காவல்காரா" - பி.சுசீலாவின் குரலில் துள்ளலாகவும் டி.எம்.எஸ். குரலில் விருத்தமாகவும் ஒலிக்கும் பாடல்.

"இசைச் சக்கரவர்த்தி" ஜி.ராமநாதன் பிரபலப்படுத்திய ராகம் சாருகேசி.

இந்த ராகத்தில் - "தூங்காத கண்ணின்று ஒன்று" - டி.எம்.எஸ். - சுசீலா பாடும் இந்தப் பாடலை மறக்கத்தான் முடியுமா?

இதேபோல "தர்பாரி கானடாவில்" டி.எம்.எஸ். - எஸ். ஜானகியின் குரல்களில் ஒலிக்கும் - பிரபலமான "சின்னஞ்சிறிய வண்ணப் பறவை" இன்றளவும் இசை வானில் சிறகடித்துப் பறந்து கொண்டிருக்கிறதே.

ஆனால் இந்தப் பாடல் பதிவின் போது ஒரு சிக்கலான பிரச்சினையை கே.வி. மகாதேவன் சந்திக்க நேர்ந்தது.

பாடலைக் கவியரசர் எழுதிக் கொடுத்ததும் அதற்கு யாரைப் பாடவைக்கலாம் என்று ஒரு சர்ச்சை எழுந்தது.

பெண் குரலுக்கு எஸ். ஜானகிதான் என்று ஒருமனதாக முடிவானது. ஆண் குரலுக்கு பி.பி. ஸ்ரீனிவாஸை பாடவைக்கலாம் என்று முதலில் நினைத்தார் மகாதேவன். ஆனால் நடிப்பவர் சிவாஜி. அவருக்கேற்ப கம்பீரமான குரலாக இருக்கவேண்டும் என்று தோன்றியதும் சீர்காழி கோவிந்தராஜனைப் பாடவைக்க கே.வி. மகாதேவன் முடிவெடுத்தார். தயாரிப்பாளர், இயக்குனர்கள் கிருஷ்ணன் பஞ்சு ஆகியவர்களும் அதற்கு சம்மதித்ததும் சீர்காழி கோவிந்தராஜனை எஸ். ஜானகியுடன் பாடவைத்தார்.

தர்பாரி கானடா ராகத்தில் சீர்காழி கோவிந்தராஜனின் சஞ்சாரங்கள் அனைவரையும் பிரமிக்க வைத்தன. வெகு உற்சாகமாகப் பாடிக் கொடுத்தார் சீர்காழி. நடிகர் திலகத்திற்குப் பாடல் போட்டுக் காண்பிக்கப்பட்டது. "அருமையாக வந்திருக்கிறது" என்று அவர் பாராட்டுவார் என்று அனைவரும் எதிர்பார்த்திருந்தார்கள்.


ஆனால் பாடலைக் கேட்ட சிவாஜி கணேசனின் முகம் சுருங்கியது.

"என்ன இது? எனக்கு டி.எம்.எஸ். குரல் தான் பொருந்தும் என்று தெரியாதா?

கோவிந்தராஜன் பாட்டுக்கு நான் வாயசைச்சு நடிச்சா ஜனங்க ஏத்துக்க மாட்டாங்க. இந்தப் பாட்டை டி.எம்.எஸ். பாடினாத்தான் நான் நடிக்க முடியும்." - என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டார் சிவாஜி.



சீர்காழி





டி.எம்.எஸ்

எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவர் தன் பிடிவாதத்தைக் கைவிடாததால் மறுபடியும் டி.எம்.சௌந்தரராஜனைப் பாடவைத்துப் பதிவு செய்தார் கே.வி. மகாதேவன்.

கல்லூரி விழாவில் மாணவி சாரதா பாடலை ஆரம்பித்து சரணம் வரும் போது "உலகம் புரியவில்லை" என்ற வரிகளை அடுத்த வரி மறந்து திணறும் போது பார்வையாளர்களின் கேலித்தனமான விசில் சப்தம் காதைப் பிளக்க மேலே என்ன செய்வதென்று புரியாமல் திகைத்து தடுமாறி தவிக்கும்போது "மனதினிலே தோன்றும் மயக்கங்கள் கோடி" என்று டி.எம்.எஸ். எடுப்பாகத் தொடங்கும்போது அப்படியே நம்மைக் கட்டிப்போடத் தவறாது.

பாடலில் டி.எம்.எஸ்.ஸுக்கு ஈடுகொடுத்து எஸ். ஜானகி கொடுத்திருக்கும் பிருகா சஞ்சாரங்கள் அவரது திறமைக்கு ஒரு எடுத்துக்காட்டு.

அடுத்து டி.எம்.எஸ். தனித்துப்பாடும் சோகப் பாடல். "மயக்கம் எனது தாயகம்"

இப்படிப் பாடல்கள் அனைத்துமே ஒன்றை ஒன்று விஞ்சும் வகையில் இருந்தாலும் "குங்குமம்" படம் வணிகரீதியாக தோல்வி கண்டது. ஆனால் அந்தத் தோல்வி பாடல்களைப் பாதிக்கவில்லை. பெருவெற்றி கண்டு இன்றளவும் நிலைத்து நிற்கின்றன "குங்குமம்" படப் பாடல்கள்.

(தொடரும்)

தாக்கல் செய்ய முடியும்.

எதிர்க்கட்சிகள் அவ்வாறு செய்யும் என்பதை, மஹிந்த ராஜபக்ஷ போன்ற ஒருவர் அறிந்திருக்க மாட்டார் என்று நினைப்பது மடமை. இவ்வாறு தேர்தல் ஆணையாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டால், இந்த நான்காண்டுகளில் தேர்தலை நடத்த முடியுமா என்பதைப் பற்றியும் மஹிந்த ராஜபக்ஷ போட்டியிட முடியுமா என்பதைப் பற்றியும் சட்ட வாதங்களை முன்வைக்க எதிர்த் தரப்பினரின் சட்டத்தரணிகளுக்கு வாய்ப்பு கிடைக்கும். சிலவேளை, தேர்தலை தற்காலிகமாகவாவது இடைநிறுத்தவும் நேரலாம்.

எனவே, மஹிந்த ராஜபக்ஷ மீதான துவேசத்தினாலன்றி, உண்மையிலேயே சட்டத்தின் ஆதிக்கம் நிலைத்திருக்க வேண்டும் என்பதற்காகத் தான் சரத் என். சில்வா ஜனாதிபதி நான்கு ஆண்டுகளில் தேர்தலை நடத்துவதையும் அதில் போட்டியிடுவதையும் தடுக்க நினைத்தாரென்றால், தேர்தலுக்காக வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் தேர்தல் ஆணையாளருக்கு எதிராக நீதிமன்றத்தை நாடுவதே சிறந்த நடவடிக்கையாக இருந்திருக்கும்.

அவ்வாறு செய்வதனாலும் நீதிமன்றம் சில்வாவுக்கு சாதகமான தீர்ப்பை வழங்கும் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை. ஆனால், அவ்வாறு செய்யாததனால் எதிர்ப்பின்றியே தாம் சட்டபூர்வமான வேட்பாளராக போட்டியிட ராஜபக்ஷவுக்கு வாய்ப்பு கிடைத்தது.

சட்டத் துறையில் தமது போராட்டம் தோல்வியுற்று இருப்பதனால் ம.வி.மு. உட்பட எதிர்க் கட்சிகள் வேண்டும் என்றால் இப்போது ஓரணியாக திரண்டு ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ள முடியும். அதற்காக அவர்களுக்கு நிறைவேற்று ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வதென்ற பொது சுலோகமும் கிடைத்திருக்கிறது.

சகல எதிர்க் கட்சிகளும் ஓரணியாக நின்று போட்டியிட்டால் ஐ.ம.சு.கூ க்கு அது கடும் சவாலாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், எதிர்க் கட்சிகள் மத்தியிலும் அக் கட்சிகளில் உள்ள சில முக்கியஸ்தர்களிடையிலும் பல கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. ஆளும் கட்சியாக வந்து அதில் இரண்டாம் வரிசையில் இருந்தாலும் அது எதிர்க்கட்சியில் எந்தப் பதவியை வகிப்பதையும் விட மேலானது என்பதை அவர்களில் பலர் விளங்கிக் கொள்ளவில்லை.

இதன் காரணமாக கடைசி நேரம் வரை அவர்கள் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக பொது வேட்பாளர் ஒருவரை தேடிக் கொள்வார்களா என்ற சந்தேகம் பலமாக எழுகிறது.

## அரைமணி நேர நாடகம்!


**பி**ரபல மர்மக்கதை எழுத்தாளர் அகதா கிரிஸ்டி, 1947இல் எழுதிய நாடகம் ஒன்று இன்றும் லண்டனில் அரங்கேறி வருகிறது. “அரைமணி நேரம் ஒலிபரப்பக் கூடிய நாடகம் ஒன்று வேண்டும்...” என்று அகதாவிடம் பி.பி.சி., ரேடியோ நிறுவனம் கேட்டுக் கொண்டது. அவர், வூசநந டீடைனெ ஆஊைந என்ற நாடகம் எழுதினார். இந்த நாடகம், 1952இல் மேடை நாடகமானது. முதலில், அம்பாசிடர் தியேட்டரில் அரங்கேறியது. பின், The Mousetrap (எலிப்பொறி) என்று பெயர் மாற்றி, “சென் மார்ட்டின்” தியேட்டரில் அரங்கேறி, இன்றும் ரசிகர்களை மகிழ்விக்கிறது. இந்நாடகத்தை சினிமாவாக தயாரிக்க, இரு தயாரிப்பாளர்கள் முன் வந்தனர். இதன் உரிமையை, 4 இலட்சம் ரூபாய்க்கு வாங்கினர். ஆனால், இவர்கள் மரணமடைந்ததால், நாடகம் படமாக்கப்படவில்லை எனவே, இன்றும் நாடகம் தொடர்ந்து அரங்கேறி வருகிறது.


A poster of Ambassador Theatre in London playing and playing and playing ...the Mousetrap




“**க்**ரஸ்ட்-கொன்கோடியா” இது, ஒரு ஆடம்பரக் கப்பல். 4,200 நபர்கள் பயணம் செய்ய வசதியாக உருவாக்கப்பட்டுள்ள இக்கப்பலில், நான்கு நீச்சல் குளங்களும், கசினோ கிளப்களும் உல்லாசப் பயணிகளுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளன. இக்கப்பல், 2005இல் புறப்பட்டு இத்தாலியை அடைந்த போது, பாறையில் மோதி, 32 பயணிகள் மரணமடைந்தனர். சேர்ஜியோ க்ரிட்டோ என்ற பொறியியலாளர் தலைமையில், கப்பல் மீட்கும் பணி துவங்கியது. இதற்கான செலவு, 200 கோடி டொலர். இவ்வளவு செலவு செய்து மீட்கும் இக்கப்பல், மீண்டும் கடலில் பயணத்தை தொடர போவதில்லை; இரும்புக் கடைக்குத் தான் போகப்போகிறது.

## இன்னொரு டைட்டானிக்!





## மாவையண்ணை போராட்டத்தை தடுக்கவும் சர்வதேச அளவில் சதி?

### வெளிவாயன் வேலாயுதன் சொல்லுவது....

**தி**னமுரசிலை மாவையண்ணையின்ரை நாட்களை எண்ணிக் கொண்டிருக்கினை. மாவையண்ணைக்குக் குலைப்பன் அடிக்குதோ இல்லையோ இவைக்கு ஒரு விசியத்தைச் சொல்ல வேணும்.

எங்கடை மாவையண்ணை கொஞ்சக் காலத்துக்கு முன்னமே சாடையாய் சொல்லிப் போட்டார். ஜனாதிபதி தேர்தல் வந்தால் அகிம்சைப் போராட்டம் பரிசீலிக்கப்படும் எண்டு. எப்பிடியும் ஜனாதிபதி தேர்தல் வரத்தான் போகுது. எனவே மாவையண்ணையும் சனங்களுக்கு ஒரு அறிக்கையை விடுத்திட்டு விலகத்தான் போறார்.

சரி, ஜனாதிபதித் தேர்தலைப் பின்னுக்கு அறிவிச்சால் என்ன செய்யிறது? அதுக்குத்தான் எங்கடை புலம்பெயர் அமைப்புக்கள் இருக்குதே! “அகிம்சைப் போராட்டம் நடத்த இது உகந்த காலமில்லை. தயவு செய்து முடிவை மீள்பரிசீலணை செய்யுங்கோ” எண்டு அதிலை ஒரு அமைப்பு அறிக்கை விட்டால் போச்சுது.

உள்ளூரிலையும் வெளிநாட்டிலையும் உறவுகள் கேட்டுக் கொண்டதுக்கு இணங்க தற்காலிகமாக அகிம்சைப் போராட்டத்தை நிப்பாட்டிறம். ஆனால் தமிழ் மக்களுக்கான எங்கடை போராட்டம் உரிமையள் கிடைக்கும் வரை தொடரும் என்று மாவையண்ணை மறு அறிக்கை விட்டிட்டு கொஞ்சக் காலம் சிவனே எண்டிருப்பார்.

நாங்கள் இப்பிடி எத்தினை தரம் அகிம்சைப் போராட்டம் நடத்தீட்டம் தெரியுமே? அந்த நேரம் சனங்களுக்கு எந்தத் தெரிவுகளும் இல்லை. ஒண்டிலை சிங்களக் கட்சியள். இல்லாட்டில் தமிழரசுதான்.

ஈழநாட்டிலையும், சுதந்திரனிலையும் விடுகிற அறிக்கையோடை சனங்கள் வேலையளை விட்டிட்டு வந்து சத்தியாக்கிரகத்திலை கலந்து கொள்ளும். அலையலையாய் சனம் வந்து கோசமெழுப்பியும் ஒண்டு மட்டுந்தான் நடந்தது. அதுதான் தமிழரசுக் கட்சி தேர்தலிலை பெரும் வெற்றி பெற்றது.

வேறையொண்டும் நடக்கேல்லை. தலைவர்களின்ரை குடும்பங்கள் வெளிநாடுகளிலையும், இந்தியாவிலையும் சந்தோசமாய் குடியேறி வாழவும் முடிஞ்சது.

ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டம் எல்லாம் நடந்தது. தமிழீழத்துக்கு சனங்கள் வாக்குப் போட்டுதுகள். ஆனால் மந்திரத்தாலை மாங்காய் விழுத்த எங்களாலை ஏலாதுதானே!


சில காவாலியள்... “கேட்டதோ தமிழீழம் கிடைச்சதோ யப்பான் ஜீப்” எண்டு மதில் சுவருகளிலை எழுதினதுகள்தான். நல்ல வேளை தமிழரசாலை உசுப்பேறி பெடியள் ஆயுதந் தூக்க வெளிக்கிட்டதாலை மாவையண்ணை உட்பட்ட அகிம்சைக் குஞ்சுகள் தப்பிச்சினை.

இப்ப ஒரு போராட்டம் எண்டு வெளிக்கிட்டால் எத்தினை பேர் வருவினை எண்டது முக்கியமானது. அடிபிடி சண்டையள், வாள்வெட்டுக்கள் எண்டு திரியிற வேலையில்லாத, வேலை செய்யத் தயாரில்லாத கொஞ்சப் பேரை ஆள் சேர்க்கலாமெண்டாலும் அவையும் எத்தினை நாளைக்கு வருவினை.

பிரதேச சபை, மாகாண சபையெண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்துப் போட்டு வரவு இடாப்பைப் பார்த்தால் கனபேர் கூட்டங்களுக்கே ஒழுங்காய் வாறானில்லை.

அதுக்குள்ளை மெத்தப் படிச்ச மனிசன் எண்டு கொண்டு வந்து விட்ட விக்கியர் மச்சம் சைவம் பார்த்து கூட்டமைப்பை உடைக்கப் பார்க்கிறார். எனவே, தமிழரசுக் கட்சியின்ரைதானே எண்டு சொல்லி ஆயுதக்கட்சிக்காரங்களும் வராமல் விட்டிடுவினை.

இந்தியாவிலை இருந்து மனிசி, மக்ளையும், கனடாவிலை இருந்து பெடியளையும் கொண்டு வாறதெண்டால் வக்கேசன் பிரச்சினையிருக்குது. மற்றது இதுகளுக்கெல்லாம் அவையள் தயாராகவும் இல்லை. மனிசனுக்கு அறளை பெயர்ந்து இப்படி அறிவிச்சுப் போட்டு நிக்குது எண்டு கடுப்பாயிருக்கினையாம்.




மாவையண்ணருக்கு பிறசர் தலைக்கேற முதலே அகிம்சைப் போராட்டத்தை நிப்பாட்டிற அறிவிப்பை விட்டிட வேணும்.

இன்னொரு மாற்றுத் தீர்வு தொடர்பிலையும் மாவையண்ணைக்குப் பரிந்துரை செய்ய வேணும். இலங்கையிலை இதைச் செய்ய அரசாங்கம் அனுமதிக்கேல்லை. குழப்பத் திட்டமிடுகுது எண்டு ஒரு அறிக்கையை விட்டிட்டு ஒரு ரண்டு மாதம் ஐரோப்பாவிலை சூறாவளிச் சுற்றுப் பயணம் செய்து ஆங்காங்கே அடையாள சத்தியாக்கிரகங்களைச் செய்யலாந்தானே!

முப்பது நாப்பது புலக்குஞ்சுகள் வருங்கள். நியூ மீடியா என்ற இணையப் புரட்டுக்களிலையும் கவர் பண்ணப்படும். கொஞ்சம் கையிலை மடியிலையும் கிடைக்கும். ஓசியிலை இடங்களையும் பார்த்திட்டு வரலாம்.

தினமுரசுக்காரர் போராட்டம் நடக்கிறதுக்கு நாளெண்ணட்டும். மாவையண்ணை நடக்காதெண்டு அறிவிக்க நாளும் காரணமும் எண்ணிக் கொண்டிருக்கிறார்.

# புதிர்ப்போட்டி இல. 16


**அனுப்பவேண்டிய முகவரி**

புதிர்ப்போட்டி இல: -------
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

இதற்கான விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும் புதிர்ப்போட்டியில் வெளியிடப்படும் அதற்கு முன்னதாக பெயர் விபரத்துடன் உங்களது பதில்கள் புகைப்படத்துடன் குறித்த முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் கிடைப்பதோடு படங்களுடன் பெயர்களும் பிரசுரிக்கப்படும்.

## புதிர்ப்போட்டி 16-1

1 தொடக்கம் 3 வரையான வினாக்களில் உள்ள மூன்று படங்களில் ஒரு பகுதி வெற்றிடமாக உள்ளது. அதற்குப் பொருத்தமான பகுதியை தெரிவு செய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக



## புதிர்ப்போட்டி 16-2

1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றும் ஆங்கில எழுத்துக்களுக்குப் பதிலாக இலக்கங்கள் இடப்பட்டுள்ள இரகசிய மொழியை அடிப்படையாகக் கொண்டவை. இங்கு ஒவ்வோர் ஆங்கில எழுத்திற்கும் இடப்படும் இலக்கங்களின் பெறுமானங்களைக் கூட்டிப் பெறப்பட்ட கூட்டுத் தொகைகள் ஆங்கிலச் சொற்களுக்கு எதிரே தரப்பட்டுள்ளன.

HOLD = 14, BLADE =22, HEAD =17

மேலும் H =2, O = 4, A =5, B = 6 என்னும் பெறுமானங்களும் தரப்பட்டுள்ளன.

ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைக் கீழே தரப்பட்டுள்ள நான்கு விடைகளிலிருந்தும் தெரிந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

1) L இன் பெறுமானம்
1. (1) 2. (2) 3. (3) 4. (4)

2) E யின் பெறுமானம்
1. (1) 2. (2) 3. (3) 4. (4)

3) D யின் பெறுமானம்
1. (4) 2. (5) 3. (6) 4. (7)


4) BLOAT இன் எழுத்துக்களுக்கு இடப்படும் இலக்கங்களின் கூட்டுத்தொகை 25 எனின் AT யின் பெறுமானம் யாது?
1) 10 2) 12 3) 14 4) 16


5) TABLE ஐ இலக்கங்களில் எழுதும்போது கிடைப்பது யாது?
1. 69531 2. 95613 3. 13569 4. 75321


## புதிர்ப்போட்டி 16-3

1 தொடக்கம் 2 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் தொடக்கத்தில் அட்டைத்தாள் சதுரமுகி காணப்படும். அதேவேளை அதன் முன்னால் இருந்து பார்க்கும்போது காணப்படும் மூன்று பக்கங்களில் சில கோடுகள் இடப்பட்டுள்ளன.

அச்சதுரமுகியின் ஆறு பக்கங்களில் சில கோடுகள் இடப்பட்டுள்ளன. அச்சதுரமுகியின் ஆறுபக்கங்கள் விரிக்கப்படும் போது தோற்றும் விதத்தைக் காட்டும் உருவைத் தரப்பட்டுள்ள நான்கு விடைகளிலிருந்தும் தெரிந்தெடுத்து அதனைக்குறித்து நிற்கும் இலக்கத்தை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.







## புதிர்ப்போட்டி 16-4

1 தொடக்கம் 2 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றும் ஆங்கில எழுத்துக்களைக் கொண்ட நெய்யரியை அடிப்படையாகக் கொண்டவை. இந்நெய்யரிகளில் எழுத்துகள் ஒரு குறித்த கோலத்திற்கேற்ப இடப்பட்டுள்ளன. அக்கோலத்தை இனங்காண்க. வெற்றிடத்தில் வரவேண்டிய எழுத்துக்கள் உள்ள விடையைக் கீழே தரப்பட்டுள்ள நான்கு விடைகளிலிருந்தும் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

1.

| | | | | |
|---|---|---|---|---|
| A | C | E | G | I |
| S | Q | | | K |
| U | W | | | C |
| M | K | I | G | E |
| O | Q | S | U | W |

(1)

| | |
|---|---|
| Y | M |
| A | O |

(2)

| | |
|---|---|
| A | O |
| M | Y |

(3)

| | |
|---|---|
| O | M |
| Y | A |

(4)

| | |
|---|---|
| O | Y |
| A | M |

2.

| | | | | |
|---|---|---|---|---|
| A | B | E | F | I |
| D | Y | | C | L |
| G | | | | O |
| J | S | N | W | R |
| M | P | Q | T | U |

(1)

| | | |
|---|---|---|
| | H | |
| V | K | Z |

(2)

| | | |
|---|---|---|
| | V | |
| K | H | Z |

(3)

| | | |
|---|---|---|
| | H | |
| Z | K | V |

(4)

| | | |
|---|---|---|
| | K | |
| V | H | Z |

# சரியான விடைகளை எழுதி பாராட்டுப் பெறுவோர்

பெயர் :- ஈ.சுமன்ராஜ்
தரம் :- 8
பாடசாலை:- கிளி/பாரதிவித்தியாலயம்.

பெயர் :- க.துளசிகா
தரம் :- 7
பாடசாலை:- கிளி/ பாரதி வித்தியாலயம்.

பெயர் :- ச.ஜதுசன்
தரம் :- 7
பாடசாலை:- யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி.

பெயர் :- ச.குபேரன்
தரம் :- 8
பாடசாலை:- யா/மானிப்பாய் இந்து கல்லூரி.

பெயர் :- ச. செந்தூரன்
தரம் :- 6
பாடசாலை:- யா/இந்துக்கல்லூரி.

பெயர் :- க. தர்மினி
தரம் :- 8
பாடசாலை:- யா/வேம்படிக்கல்லூரி.

**விண்ணப்பதாரரின் விபரம்**

முழுப்பெயர் :- ------------------------------
பாடசாலை :- ------------------------------
கல்வி கற்கும் தரம் :- ------------------------------
வீட்டு முகவரி :- ------------------------------
தொ.பேசி இலக்கம் :- ------------------------------

# சென்றவார விடைகள்

## புதிர்ப்போட்டி 15-1

01. இடமிருந்து வலமாக 4ஆம் மேலிருந்து கீழாக 1ஆம் விடையும் பொருந்தக்கூடியவாறு அவதானிக்குக சிலை - அடிசில் எனவே 3ஆம் விடை
02. இடமிருந்து வலமாக 12ஆம் மேலிருந்து கீழாக 9ஆம் விடையும் பொருந்தக்கூடியவாறு அவதானிக்குக விரை - கல்வி எனவே 1 ஆம் விடை
03. 'ம்' இல்முடிவடையக்கூடியவாறு மூன்றெழுத் துள் ள இராசியின் பெயர் மேடம் எனவே 4ஆம் விடை
04. இடமிருந்து வலமாக 1ஆம் மேலிருந்து கீழாக 2ஆம் விடையும் பொருந்தக்கூடியவாறு அவதானிக்குக அங்சனம் - சகா எனவே 2ஆம் விடை
05. இடமிருந்து வலமாக 'னை' என்பதில் முடிவடையக்கூடியவாறு அவதானிக்குக பனை எனவே 1ஆம் விடை

## புதிர்ப்போட்டி 15-2

01. 06சுட்டெண்கள் (49,58,67,76,85,94)

02. $5000 \times 6.25 \times \frac{90}{100}$

ரூ - 28125

03. $\frac{75}{15} \times 100$

$= 500$

04. $2\pi r = 44$

$2 \times \frac{22}{7} \times r = 44$

$\therefore r = 7$

பரப்பளவு $\pi r^2$

$\frac{22}{7} \times 7 \times 7 = 154 m^2$

05. $12100 \times \frac{10}{100} = 1210$

$12100 + 1210 =$ ரூ 13310

06. ∴3நிமிடங்களின் சென்ற தூரம் $\frac{20}{60} \times 3$

$= 1 km$

## புதிர்ப்போட்டி 15-3

1. 1ஆம் விடை
2. 2ஆம் விடை
3. 3ஆம் விடை

வெற்றிடமுள்ள அடைப்பையும் ஏனைய நிரல் நிரைகளை ஒப்பிடுவதன் மூலமும் தரப்பட்ட விடைகளையும் அவதானிப்பதனூடாக சரியான விடையை இலகுவாக பெறலாம்

## புதிர்ப்போட்டி 15-4

01. $15 - (4 + 9)$
$= 2$

02. Mஇன்பரப்பளவு $= 8 \times 2 = 10m^2$ =Nஇன் பரப்பளவு
∴ Nஇன் ஒரு பக்க நீளம் $= 16m^2$ 4
$= 4m$
∴ Nஇன் சுற்றளவு $= 2(4+4)m$
$= 16m$

## புதிர்ப்போட்டி 15-5

01. 1ஆம் விடை
02. 2ஆம் விடை
03. 3ஆம் விடை

தரப்பட்ட விடைகளினூடாகவும் கோலத்திற்கு வெளியே அடிப்படையாகக் கொண்டும் இலகுவாக விடைகளைப் பெறலாம்

# மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக வறியகுடும்பங்களுக்கு சுயதொழில் உதவி

மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகரம், அடம்பன்,முசலி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் யுனிசெவ் நிறுவனத்தினால் வழங்கப்படும் சுயதொழில் உதவி நன்கொடைக்கான காசோலை 15 பேருக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பயனாளியும் தலா 36000 ரூபா வீதம் இந்த காசோலையைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் பாடசாலை செல்லும் வறிய மாணவர்கள் உள்ள குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்குடன் இந்த சுயதொழில் நன்கொடைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மன்னாரிலுள்ள ஏனைய இரு பிரதேச செயலகங்களான மாந்தை மேற்கு, மடு ஆகிய பிரதேச செயலகங்களில் தலா 50 பேருக்கு 39 000 ரூபா வீதம் சோ.ஆ நிறுவனத்தால் சுயதொழில் நன்கொடைகள் மிக விரைவில் வழங்கப்படவுள்ளன.

இவையும் பாடசாலை செல்லும் வறிய மாணவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு மட்டுமே வழங்கப்படவுள்ளது.

இந்த சுயதொழில் நன்கொடையைக் கொண்டு கால்நடை வளர்ப்பு, சிறுகடை,சிறுகைத்தொழில், போன்ற தொழில் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

யுனிசெவ் நிறுவனம் சென்ற 2012 ஆம் ஆண்டில் மன்னாரிலுள்ள 5 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் 122 பேருக்கும், 2013 ஆம் ஆண்டில் 117 பேருக்கும் சுயதொழில் நன்கொடைகளை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது. (90)

# அதிகரித்துவரும் டெங்கை கட்டுப்படுத்த விழிப்புணர்வு

யாழ்.உடுவில் சுகாதார வைத்தியஅதிகாரி பிரிவில் அதிகரித்துவரும் டெங்கு நோய் தாக்கத்தை அடுத்து, அதனை கட்டுப்படுத்தும் முகமான விழிப்புணர்வு நடவடிக்கைகள் கடந்தபுதன்கிழமை முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி அ.ஜெயக்குமரன் தெரிவித்தார்.

உடுவில் சுகாதார வைத்தியதிகாரி பிரிவில் 38 டெங்கு நோயாளிகள் வரையில் இனங்காணப்பட்டுள்ளனர். இம்மாதம் மட்டும் 21 பேர் டெங்கு நோய் தாக்கத்துக்குஉள்ளாகியதாக இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களுக்கான சிகிச்சைகள் வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தற்போது பெய்து வரும் மழை காரணமாக, டெங்கு நோயின் தாக்கம் அதிகரிக்க வாய்ப்புக்கள் காணப்படுவதை கருத்திற்கொண்டு இந்த விழிப்புணர்வு நடவடிக்கைகளைமேற்கொள்கின்றோம்.

இந்த விழிப்புணர்வு நடவடிக்கைகளை பொது சுகாதார பரிசோதகர்கள், சுகாதார மருத்துவ மாதுக்கள், கிராமஅலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள் மற்றும் சுகாதாரதொண்டர்கள் ஆகியோர் இணைந்து மேற்கொள்ளவுள்ளதாக சுகாதார வைத்தியஅதிகாரி மேலும் தெரிவித்தார்.

# முதியோருக்கு சேவையாற்றும் நிறுவனங்களின் விபரம் திரட்டல்

முதியோர் தொடர்பான சேவைகளை வழங்கும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் விபரங்களை வட மாகாண சமூக சேவைகள் திணைக்களம் பெற்று வருகிறது.

இது தொடர்பான விபரங்களை பிரதேச செயலகப் பிரிவு ரீதியாக பெறும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றனர்.

சேவையை வழங்கும் நிறுவனத்தின் பெயர், முகவரி,நிறுவன இயக்குநரின் பெயர்,ஆரம்பிக்கப்பட்ட காலம் போன்ற விபரங்களைப் பெறும் வகையில் படிவம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.

இலங்கையில் அரச முதியோர் இல்லங்கள் கைதடி,அநுராதபுரம்,மீரிகம போன்ற இடங்களில் மட்டும் இயங்கி வந்தபோதிலும் முதியோர் தொடர்பான சேவைகளை பல அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

மாகாண ரீதியில் முதியோர்களுக்கு சிறந்த சேவைகளை வழங்கும் நோக்குடன் இந்த விபரங்கள் சேகரிக்கப்படுவதாக கூறப்படுகிறது. (90)

# கண்சிகிச்சை விடுதி புனரமைப்பு நிறைவு

யாழ் போதனா வைத்தியசாலையில் 15 ஆம் இலக்க கண்சிகிச்சை விடுதி புனரமைப்பு பணிகள் நிறைவு பெறும் கட்டத்தை அடைந்துள்ளன. 15 ஆம் விடுதி பெண்களுக்குரிய விடுதியாக உள்ளது. மிகப் பழைமையான இந்த விடுதி தற்போது புனரமைக்கப்படுவதால் 19 ஆம் இலக்க ஆண்கள் விடுதியின் அரைவாசி பகுதியில் பெண்கள் விடுதி இயங்கி வருகிறது.

இதனால் இட நெருக்கடி தோன்றியுள்ளது. இன்னும் சில தினங்களில் இந்த விடுதி புனரமைப்பு பணிகள் நிறைவு பெற்றவுடன் பெண்கள் விடுதி விசாலமான இடத்தில் இயங்க ஆரம்பித்து விடும்.

கண் சிகிச்சை விடுதி கட்டடங்கள் மிகப் பழைமையான வையாகவும் கூரை ஓட்டுடன் இருந்ததாலும் மழை காலங்களில் நீர் ஒழுக்கு காணப்பட்டு நோயாளர் பலத்த சிரமங்களை எதிர்நோக்கினார்கள். தற்போது இந்த புனரமைப்பின் மூலமாக அஸ்பெஸ்ரஸ் சீற் வசதி மிக்க விடுதிகளாக இவை மாற்றப்பட்டுள்ளன. (90)

# ஐயப்ப விரத வழிபாடு



யாழ்ப்பாணம் உரும்பிராய் தெற்கு சாட்டுபத்தூர் சபரிபீடம் அருள்வளர் சிவதர்மசாஸ்த்தா தேவஸ்தான ஐயப்பன் ஆலயத்தில் ஐயப்ப விரத ஆரம்ப நிகழ்வு கடந்த திங்கட்கிழமை வெகு சிறப்பாக இடம்பெற்றது. எதிர்வரும் தை மாதம் 15 ஆம் திகதி வரை தினமும் மாலை 06.00 மணி முதல் அபிஷேகம் பூசை, பஜனை, படிப்பூசை, ஹரிவராசனம் என்பன இடம்பெற்று இரவு 08.00 மணிக்கு மடைசாத்துதல் நடைபெற்றுவருகின்றது. (48)

## வாரம் ஒரு காரம்

# ஒளி இன்றி விழி இருந்தும் என்ன பயன்?....



இறைவன் படைத்த இந்த இரு விழிகளுக்கும் உலகில் விலை மதிப்பில்லை. இருந்தும் இந்த விழிகளுக்கு ஒளிகள் இல்லையென்றால் உலகில் எந்த ஒளியும் தெரியாது. விழிகளைப் படைத்த இறைவன் அன்று ஒளிகளைப் பற்றி சிந்திக்க வில்லையென்றால் விழியிருந்தும் குருடர்கள் தான் நாமெல்லாம். இன்றிருக்கும் இலங்கைத் தமிழர் நிலையும் இது தான். விழி இருந்தும் ஒளியிழந்த குருடர்கள் தான் நாமெல்லாம்.

தமிழர் தரப்பில் ஒவ்வொருவருக்கும் தெளிவாகத் தெரிகின்றது அந்த ஒளி. இருந்தும் இமைகளை இறுக மூடி இருட்டுக்குள் இருந்து பல கதை பேசுகின்றோம். பேசும் போதும் தெரிகிறது நாம் இமைகளைத் திறந்தால்தான் இருள் நீங்கு மென்று. இருந்தாலும் திறக்க மறுக்கின்றோம்.

இது தான் எமக்குள் இருக்கும் 'ஈகோ' அது எங்கிருந்து முளைத் தது. ஏன் அது எமது இனத்திற்கே சாபமானது என்பது தான் இன்று எமக்குத் தேவையான அரசியல் பக்கங்கள். சீனாவின் பெரும்போகம் இந்தியாவின் சிறுபோகத்தை அழிக்கின்றது என்பதும் எமக்குத் தேவையில்லை, மலையக மஞ்சரிவின் மர்மமென்ன என்கின்ற ஆய்வும் எமக்குத் தேவையில்லை. அந்தரத்தில் ஆடும் தமிழர் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கு என்ன வழி?.. என்பது தான் இன்று எமக்குத் தேவை.

அன்று ஆயுதமெடுத்தோம் அழிவைத்தவிர அதனால் எதையும் சாதிக்க முடியவில்லை; மாகாணசபை வேண்டுமென்று மண்டியிட்டுப் பிரச்சாரம் செய்தோம்; கிடைத்தவுடன் மலர்ந்தது தமிழரசு என்று கூட மார்பு தட்டினோம். ஆண்டொன்று கழிந்தும் கூட அமர்வுகளைத் தவிர அங்கு எதுவும் மிஞ்சவில்லை.

இத்தனைக்கும் பின்பு எதை நீங்கள் மார்பு தட்டிப் பேசி வென்றெடுக்கலாமென எதிர்பார்க்கின்றீர்கள்? என்பதையேனும் தெளிவாகச் சொல்லுங்கள்? கூட்டமைப்புக் கும்பல்களின் நிலைப்பாட்டை விடுங்கள் சுயலாபத்திற்காக ஐஸ்கிறீம் விற்கும் கும்பல்கள் தானே அவர்கள். மக்களிடம் நாம் கேட்கும் நியாயமிது சொல்லுங்கள்?....

தற்போது தெளிவாகத் தெரிகின்றதல்லவா இமைகளைத் திறந்தால்தான் இனித்தமிழர்க்கு ஒளியென்று. ஒளியிழந்த விழிகளைப்போல் எமது அரசியல் நகர்ந்தால் அடுத்த சந்ததி கூட இருளுக்குள் தான் இடர்படும். இதனை மக்களாகிய நாமென்றாலும் பொறுப்புடன் சிந்திக்க வேண்டும்.

பெரும்பான்மை நாடொன்றில் சிறுபான்மையினம் தனது அரசியல் உரிமைகளை வென்றெடுக்க பல வழிகள் உண்டு. ஒரு வழி தோற்றால் மறு வழி அது தானே யதார்த்தம்? மாற்று வழியில்லாத அரசியல் பக்கங்கள் என்று எதுவுமே உலக நாட்டில் இல்லையே!....

நாம் மாறத் தயாரில்லை என்பதற்காக மாற்றமேயில்லை யென்று வாதிட முடியாது. எமது சந்ததியின் சரிவிற்கு எது தெரியுமா சாபக்கேடு?.... யதார்த்தத்திற்குப் புறம்பாக நாம் போடும் வேலிகளும், மாற்றத்தை இழிவாகப் பார்க்கும் மனப்பாங்குகளும் தான்.

இன்று அபிவிருத்தியை நாம் அனுபவிக்கவில்லையா?... அதற்குத் தானே அன்று பொருள் சொன்னோம் அடிமை வாழ்க்கையென்று. வாழ்வுரிமைகளை பொரும்பான்மை மத்தியில் சிறுபான்மை பெற்றெடுக்கும் வழிமுறைகளை அடிமைத்தனமென விமர்சிப்பது தப்பு. அது தான் வழியென்றால் அதைச் சாதுரியமாகப் பெற்றெடுப்பது தான் சிறுபான்மையினத்தின் அரசியல் வெற்றி.

தனித்தமிழன் தலைநிமிர்ந்து வாழவேண்டுமென்று நாம் எட்டடி பாய்ந்தால் பொரும்பான்மை சிங்களம் பதினாறடி பாய்வதில் தப்பில்லையே. இருவரும் எட்டின் மடங்காக எதிரெதிரே பாய்ந்தால் எங்கய்யா தீர்வு எமக்குக் கிடைக்கும்.

சுயநிர்ணயம் சுதந்திரமெனும் பெயரில் நாமும் இனவாதம் பேசுகின்றோம். சிங்களமும் இதை ஆதாரப்படுத்தி அதைவிட இனவாதம் பேசுகின்றது. இப்படியே தொடர்ந்தால் முடிவுதான் என்ன?

அன்று சிங்களத் தலைவர்களை பிரித்தானியர் சிறையடைத்தபோது சேர்.பொன்.இராமநாதன் பிரித்தானியா சென்று குடியேற்ற ஆட்சியாளர்களிற்கெதிராக போரடி வெற்றியும் கண்டு சிறையெடுத்தார். அன்று இலங்கையில் இனவாதம் இருந்தா?... என்று வந்தது இந்த இனவாதம்?...

அதுதான் மாற்றம். அன்று இல்லாதது இன்று வந்திருக்கல்லவா!.... இன்று இல்லாதது நாளை வரவேண்டும். அந்த மாற்றத்தை ஏற்ற நாம் இனிவரும் மாற்றங்களையும் ஏன் ஏற்க முடியாது?....

**விழியிருந்தும் ஒளியிழந்த குருடர்களாய் எமது சந்ததி சாகக்கூடாது. மாற்றங்கள் தான் மனித வாழ்க்கையின் வெற்றி. மாற எத்தனிப்போம்.**

## மரங்கள் கடத்தல் சிக்கினர் இருவர்

(வவுனியா)

12 இலட்சம் ரூபாய் பெறுமதியான காட்டுமரங்களை அனுமதிப்பத்திரமின்றி கடத்திச் சென்ற இருவரை, வவுனியா - ஈச்சங்குளம் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் அதிகாலை கைது செய்ததாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

பாலமோட்டை காட்டுப் பகுதியிலிருந்து வவுனியா நகரத்துக்கு காட்டுமரங்களை கடத்திச் செல்கையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், மரங்களைக் கடத்துவதற்குப் பயன்பட்ட வாகனமும், பொலிஸாரால் கைப்பற்றப்பட்டு பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளது. வவுனியா, பாலமோட்டை, நவ்வி ஆகிய பகுதிகளிலுள்ள காட்டு மரங்களை கடத்தும் நடவடிக்கைகள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளதாகவும், அதற்கெதிரான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# மலசலகூடம் பயன்படுத்தாதோர் முன்னிலையில் வடபகுதி மக்கள்

நாட்டில் 5,188,047 வீட்டு உரிமையாளர்கள் உள்ளனர். அவர்களில் 84,248 பேர் மலசல கூடத்தை பயன்படுத்துவதில்லை எனவும் குறிப்பாக வட மாகாணத்திலேயே அதிகளவானோர் (24,917) மலசல கூடங்களை பயன்படுத்துவ தில்லை எனவும் கிழக்கு மாகாணம் இரண்டாவதாக (24,592) காணப்படுவதாகவும் புள்ளி விபரவியல் திணைக்களத்தின் தரவுகள் தெரிவிக்கின்றன. 5,188,047 வீட்டு உரிமையாளர்களில் வீட்டு உரிமையாளர்கள் மாத்திரம் 1,698,474 மலசல கூடங்களை பயன்படுத்துவதாகவும் வேறு குடித்தனத்துடன் சேர்ந்து பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 113,362 ஆகும்.

உலக மலசலகூட தினம் நேற்றுமுன்தினம் 19 ஆம் திகதியாகும். இந்நிலையிலேயே மேற்கண்ட தகவல்கள் வெளியாகியுளான. புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் 2012 ஆம் ஆண்டுக்கான தரவுகளின் பிரகாரம்,

மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில் 574 பேரும் கம்பஹா மாவட்டத்தில் 775 பேரும் களுத்துறை மாவட்டத்தில் 746 பேருமாக மொத்தம் 2,095 பேர் மலசல கூடங்களை பயன்படுத்துவதில்லை. மத்திய மாகாணத்தைப் பொறுத்தவரை கண்டி மாவட்டத்தில் 1,591 பேரும் மாத்தளை மாவட்டத்தில் 666 பேரும் நுவரெலியா மாவட்டத்தில் 6,500 பேருமாக மொத்தம் 8757 பேர் மலசல கூடங்களை பயன்படுத்துவதில்லை.

தென் மாகாணத்தில், காலி மாவட்டத்தில் 1,008 பேரும் மாத்தறை மாவட்டத்தில 402 பேரும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 600 பேருமாக மொத்தம் 2,010 பேர் மலசல கூடங்களை பயன படுத்துவதில்லை.

வட மாகாணத்தில், யாழ்ப்பாண மாவட்டத்தில் 7,235 பேரும் மன்னார் மாவட்டத்தில் 2,397 பேரும் வவுனியா மாவட்டத்தில் 4,018 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 4,967 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 6,300 பேரும் மொத்தம் 24,917 பேர் மலசல கூடங்களை பயன்படுத்துவதில்லை.

கிழக்கு மாகாணத்தில், மட்டகளப்பு மாவட்டத்தில் 16,868 பேரும் அம்பாறை மாவட்டத்தில் 4,233 பேரும் திருகோணமலை மாவட்டதில் 3,491 பேருமாக மொத்தம் 24,592 பேர் மலசல கூடங்களை பயன்படுத்துவதில்லை.

வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் 4,331 பேரும் புத்தளம் மாவட்டத்தில் 6,426 பேருமாக மொத்தம் 10,757 பேர் மலசல கூடங்களை பயன்படுத்துவதில்லை.

வடமத்திய மாகாணத்தில் அநுராதபுரம் மாவட்டத்தில் 5,042 பேரும் பொலநறுவை மாவட்டதில் 2,082 பேருமாக மொத்தம் 7,124 பேர் மலசல கூடங்களை பயன்படுத்துவதில்லை.

ஊவா மாகாணத்தில் பதுளை மாவட்டத்தில் 2,079 பேரும் மொனராகலை மாவட்டத்தில் 2,212 பேருமாக மொத்தம் 4, 291பேர் மலசல கூடங்களை பயன்படுத்துவதில்லை. சப்ரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில் 1,532 பேரும் கேகாலை மாவட்டத்தில. 1,173 பேருமாக 2,705 பேர் பயனபடுத்துவதில்லை.

## உயிரிழந்த நாய்க்கு விசர் என அறிக்கை


கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் தெல்லிப்பழை சந்தி மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் கட்டாக்காலி நாய் ஒன்று ஆறு பேரை கடித்து காயப்படுத்தியது. இதனையடுத்து அந்த நாயை பிடித்து கட்டிய வேளையில் அது மரணம் அடைந்தது.

இதனால் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் நாயின் தலையை வெட்டி பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைத்தனர். கொழும்பிலிருந்து பெறப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் குறிப்பிட்ட நாய்க்கு விலங்கு விசர் நோய் உள்ளது என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. என தெலலிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

இதேவேளை சங்கானை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள நாய்களுக்கு விசர் நாய் தடுப்பூசி ஏற்றும் பணிகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வலி மேற்கு பிரதேச சபையும் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் இணைந்து இந்தப் பணியை கடந்த வாரம் முதல் மேற்கொண்டு வருகின்றன.

### உறவுப்பாலத்தை பலப்படுத்தும் வகையில்

# கொத்மலை வலய மாணவர்கள் குப்பிளான் ஆசிரமத்திற்கு விஜயம்



நுவரெலியா மாவட்டத்தின் கொத்மலை கல்வி வலயத்திற்குட்பட்ட 06 பாடசாலைகளைச் சேர்ந்த தமிழ், சிங்கள மாணவர்கள் இணைந்து குப்பிளான் சிவபூமி ஞான ஆசிரமத்திற்கு அண்மையில் விஜயமொன்றை மேற்கொண்டனர்.


தமிழ் சிங்கள உறவுப் பாலத்தைக் கட்டியெழுப்பும் வகையில் யாழ்ப்பாணத்துக்கான சுற்றுப் பயணம் அமைந்திருந்தது. நயினாதீவு நாகவிகாரை, நாக பூசணி அம்மன் ஆலயம் ஆகியவற்றைத் தரிசித்த மாணவர்கள் தென்மராட்சியிலுள்ள சில பாடசாலைகளுக்கும் சென்று அங்குள்ள மாணவர்களுடன் கலந்துரையாடினர்.

அதனைத் தொடர்ந்து குப்பிளான் சிவபூமி ஞான ஆசிரமத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்ட குறித்த குழுவினர் அங்கு இடம்பெற்ற சமயம சாரபான நிகழ்விலும், விசேட பூஜை வழிபாட்டிலும் கலந்துகொண்டனர்.

சிவபூமி ஆசிரமத்தின் பொறுப்பாளர் எஸ்.சிறிதரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சிவபூமி ஞான ஆசிரமத்தால் மேற்கொள்ளப்படும் சமயப் பணிகள் தொடர்பில் அவரால் விளக்கமளிக்கப்பட்டது.

இதன் போது மாணவர்களுடன், ஆசிரியர்கள், பௌத்த தேரர், கல்வி அதிகாரிகள் மற்றும் ஊர்ப் பொதுமக்கள் ஆகியோரும் உடனிருந்தனர். வருகை தந்த அனைவருக்கும் சிவபூமி ஞான ஆசிரமத்தால் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.

## அனர்த்தங்களை தடுப்பதற்கு விவசாயிகளுடன் கலந்துரையாடல்



(வவுனியா)

தற்போது ஏற்பட்டுள்ள கால நிலை காரணமாக குளங்களில் ஏற்படும் அனர்த்தங்களை தடுப்பதற்காக வவுனியா மாவட்ட விவசாயிகளுடனான கலந்துரையாடல் வவுனியாவில் நடைபெற்றது.

அனர்த்த முகாமைத்துவ நிலையமும் விவசாய திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்த இந்தக் கலந்துரையாடலில், சேதமடைந்துள்ள குளங்களை புனரமைப்பதன் ஊடாக அனர்த்தங்களை எவ்வாறான வழிமுறைகளில் தடுக்கமுடியும் என்பது தொடர்பில் விவசாயிகளுடன் கலந்துரையாடப்பட்டது.

அணைக்கட்டுகளின் தற்போதைய தன்மைகள் குறித்து அனர்த்த முகாமைத்துவ நிலையத்தால் விவசாயிகளிடமிருந்து எழுத்துமூலமாக தகவல் பெறப்பட்டிருந்ததுடன், அவற்றை சீர் செய்வது தொடர்பிலும் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் வவுனியா மாவட்ட உதவிப் பணிப்பாளர் ரி.சூரியராஜா எடுத்துரைத்தார்.

இதன்போது கமநல சேவைகள் திணைக்களத்தின் வவுனியா மாவட்ட உதவி ஆணையாளர் எம்.சுலோஜனா கலந்து கொண்டார்.

## சுன்னாகம் விடுதியில் அநாகரிகம் பொலிஸாரிடம் சிக்கியது ஜோடி

(சுன்னாகம்)

சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில் தகாத நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஜோடியை சுன்னாகம் பொலிஸார் கைது செய்தனர். குறித்த பகுதியில் இருக்கும் விடுதியில் அண்மைக்காலமாக இவ்வாறான முறைகேடான சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக பல தடவைகள் மக்கள் பொலிஸாருக்குத் தகவல் தெரிவித்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் மக்கள் சுன்னாகம் பொலிஸாருக்கு இந்த விடயம் குறித்து அறிவித்தனர்.

இதனையடுத்து அப்பகுதிக்கு விரைந்த பொலிஸார் விடுதியை சுற்றிவளைத்து குறித்த ஜோடியைக் கைது செய்தனர். இதில் ஆண் சுன்னாகத்தில் தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார் எனத் தெரிய வருகிறது.

# தொழிற்சாலையிலிருந்து துர்நாற்றம் மக்களுக்கு பல்வேறு அசௌகரியம்

மன்னார்- தலைமன்னார் பிரதான வீதியில் அமைந்துள்ள பெந்தகோஸ்தே தேவாலயத்திற்கு பின்புறமாக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தொழிற்சாலையில் இருந்து நாளாந்தம் பாரிய துர்நாற்றம் வீசி வருவதாகவும், இதனால் அப்பகுதியில் உள்ளதாம் பல்வேறு சுகாதார பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்களும், மன்னார் எழுத்தூர் பெரியகமம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினரும் மன்னார் நகரசபை, மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர் மற்றும் மன்னார் மாவட்ட மத்திய சுற்றாடல் அலுவலகம் ஆகியோரிடம் எழுத்து மூலம் தெரியப்படுத்தியுள்ளனர்.

குறித்த தொழிற்சாலையானது கழிவு மீன்களை பதப்படுத்தி கோழித்தீன் தயாரிக்கும் செயற்பாட்டில் திடீர் என ஈடுபட்டு வந்தனர். மீன்களை அவித்து பதப்படுத்தும் போது அப்பகுதியில் பாரிய துர்நாற்றம் ஏற்படுகின்றது.

அப்பகுதியில் உள்ள பெரிகமம் உட்பட பல கிராமங்களில் இந்த துர்நாற்றத்தின் தாக்கத்தினால் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் ஆராய்ந்து பார்த்தபோது குறித்த தொழிற்சாலை அமைப்பதற்கான கட்டட அனுமதி மன்னார் நகர சபையில் பெற்றுக் கொள்ளப்படவில்லை.

அதேவேளை தொழிற்சாலைக்கான அனுமதி சுற்றுச் சூழல் திணைக்களத்திடமும் பெற்றுக்கொள்ளாத நிலையில் இத் தொழிற்சாலை அமைக்கப்பட்டு செயற்பட்டு வருவதாக பெரியகமம் மாதர் கிராம அபிவிருத்திச்சங்கத்தினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

இந்த நிலையில் மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தலைமையிலான குழுவினர் குறித்த தொழிற்சாலையை நேற்றுமுன்தினம் நேரில் சென்று பார்வையிட்டதோடு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தெரிவித்தார்.

# தரம் -09 மாணவர்களுக்கான முன்னோடிப்பரீட்சை

# GRADE -09 Examination model Paper

வரலாறு

ஆசிரியர்:-மதிவதனன்

கடந்த 18.11.2014 பிரசுரமாகிய தரம் -09 இற்கான வரலாற்று வினாக்களின் தொடர்ச்சி ....................

01. 1948,1972,1978 ஆகிய ஆண்டுகளில் இலங்கை அரசியலமைப்புக்களில் இடம்பெறும் சில பிரதான இயல்புகள் கீழே காணப்படுகின்றன. அவற்றிடையே 1948 அரசியலமைப்பில் இடம்பெறும் இரு இயல்புகளைச் சரியாக காட்டுக.

A - தேசிய அரச சபை
B - விகிதாசார பிரதிநிதித்துவம்
C - இருமன்றப் பாராளுமன்றம்
D - பொதுசன வாக்குகளினால் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுத்தல்
E - பெயரளவிலான ஜனாதிபதி
F - ஆளுநர்

1) A,D ஆகியன
2) C,E ஆகியன
3) C,F ஆகியன
4) B,D ஆகியன

02. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் நடைபெற்ற சில ஆண்டுகள் நிரல் X இல் உள்ளன. அவ்வாண்டுகளில் நடைபெற்ற சில அரசியலமைப்பு சீர்திருத்த யோசனைகள் Y இல் உள்ளன. நிரல் X நிரல் Y உடன் பொருத்தமாகும்போது சரியான விடை யாது?

| நிரல் X | நிரல் Y |
|---|---|
| 1. கி.பி.1833 | A - வரையறுத்த வாக்கினால் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்தல் |
| 2. கி.பி.1910 | B - சர்வசன வாக்குரிமை |
| 3. கி.பி.1921 | C- சட்ட சபையை அமைத்தல் |
| 4. கி.பி 1931 | D - மாகாணத்தேர்தல் தொகுதி முறைமையை அறிமுகஞ்செய்தல் |

1) A,B,C,D
2) B,A,D,C
3) D,A,C,B
4) C,A,D,B

03) இலங்கையில் அரசியல் தலைவர்களும் அவர்கள் தலைமை வகித்த அரசியல் கட்சிகளும் இடம்பெறும் நான்கு சோடி விடைகள் தரப்பட்டுள்ளன அவற்றில் பிழையான விடை யாது?

1) ஏ.ஈ குணசிங்க - தொழில்கட்சி
2) என்.எம்.பெரேரா - இலங்கை சமசமாஜக் கட்சி
3) பிலிப் குணவர்த்தன - இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி
4) எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தமிரசுக்கட்சி

04) 19 ஆம் நூற்றாண்டின் நிலவிய இலங்கையின் சமய பண்பாடு விழிப்புத் தொடர்பான நாலன்கு கருத்துச் சோடிகள் கீழே காணப்படுகின்றன. அவற்றில் ஒரு சோடி பொருந்துவதில்லை அது யாது?

1) அனகாரிக தர்மபாலா மகாபோதிச்சங்கத்தை ஆரம்பித்தல்
2) கென்றி ஸ்ரீஸ் ஒல்கொட் பரமஞான சங்கத்தை ஆரம்பித்தல்
3) ஆறுமுகநாவலர் சைவப்பிரகாசசபையை ஆரம்பித்தல்
4) கிக்கடுவை ஸ்ரீசுமங்கலதேரர் பரமஞா சங்கபீரிவோனாவை ஆரம்பித்தல்

05) ஸ்ரீவிக்கிரமராஜசிங்க மன்னன் பிக்குமார்களின் ஆதரவை இழக்க பிரதான காரணம்

1) பிக்குமார்களுக்கு பதவிகளை வழங்காமை
2) பிக்குமார்களை கொலை செய்தமை
3) பொதுமக்களின் பக்கம் மன்னன் இருந்தமை
4) பிரதானிகளுக்கு அதிக அதிகாரம் கொடுத்தமை

06) 1815 ஆம் ஆண்டு கண்டிய உடன்படிக்கையின் 10ஆம் வாசகமாக நாம் கொள்ளக்கூடியது

1) பிக்குமார்கள் மற்றும் பௌத்தமதம் பாதுகாப்பு பற்றியது
2) ஆள்பாதியின் வருமானம் பற்றியது
3) 3ஆம் 4ஆம் கோறளைகள் இணைப்புபற்றியது
4) மக்களின் நீதிச் சட்டங்கள் பற்றியது

07) முதலாம் உலகமகாயுத்தம் ஆரம்பிக்கும் தறுவாயில் தீராதபகைகளை கொண்டிருந்த இரு நாடுகள்

1) பிரான்ஸ் - பின்லாந்து
2) பிரான்ஸ் - ஜேர்மன்
3) ரஷ்யா - இங்கிலாந்து
4) அமெரிக்கா - பிரிட்டன்

08) சரஜீவோ கொலைச்சம்பவத்தின் பின் சோபியாவிடம் அதற்குத்தக்க பதிலையும், நட்ட சட்டையும் எதிர்பார்த்த நாடானது

1) ஜேர்மன்
2) ஆஸ்திரியா
3) பிரிட்டன்
4) ரஸ்யா

09) 2ஆம் உலகயுத்தத்தில் பின் பனிப்போரின் மாட்டிக்கொள்ளக் கூடாது என்பதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பு

1) சர்வதேச சங்கம்
2) அணிசேரா இயக்கம்
3) பொதுநலவாய அமைப்பு
4) ஐக்கிய நாடுகள் சபை

10) இலங்கை ஜனாதிபதி தனது பதவியேற்பின் போது யார் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்ய வேண்டும்

1) பிரதமர் முன்னிலையில்
2) பிரதம நீதியரசர் முன்னிலையில்
3) சபாநாயகர் முன்னிலையில்
4) எதிர்கட்சி முன்னிலையில்

11) இலங்கை சுதந்திரம் அடைந்த போது பலமாக இருந்த அரசியல் கட்சியானது

1) ஐக்கிய தேசியக்கட்சி
2) மக்கள் விடுதலை முன்னணி
3) ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி
4) இலங்கை தொழிலாளர் சங்கம்

12) 1ஆம் உலகயுத்தத்திற்கான உடனடிக் காரணம்

1) கிட்லரின் ஆக்கிரமிப்பு
2) சரஜீவோ கொலை
3) முசோலினின் அதிரடித்தாக்கல்
4) பேர்ள் துறைமுக தாக்குதல்

13) 2ஆம் உலகயுத்தத்தின் பின் கெடுபிடியுத்தத்தில் ஈடுபட்ட இருபெரும வல்லரசு நாடுகள்

1) ரஸ்யா ஐக்கிய அமெரிக்கன்
2) சீனா இங்கிலாந்து
3) ரஸ்யா பிரித்தானியா
4) இந்தியா சீனா

14) இலங்கையில் முதலாவது குடியரசு யாப்பு கொண்டுவரப்பட்ட ஆண்டு

1) 1948
2) 1972
3) 1978
4) 1985

15) A - ஊவா வெல்லா கலவரம்
B - பிலிமத்தலாவ கொலை
C - நோத் கண்டிய படை பிக்குவின் மரணம்

இவற்றுள் 1818,1848ஆம் ஆண்டு பிரித்தானியருக்கு எதிராக இலங்கையில் ஏற்படுத்திய கலவர நிகழ்ச்சிகளுடன் மட்டும் தொடர்புபடும் சரியான விடைத்தொகுதி

1) C,D
2) A,C
3) D,B
4) A,D

16) சிங்கள மக்களே விழித்திடுவீர் புத்தகாயாவை காத்திடுவீர் என்ற கூற்றினை உடைய இலங்கை சிங்கள கலாசார மறுமலர்ச்சித் தலைவர்

1) மீதெட்டுவத்த குணாந்ததேரர்
2) கிக்கடுவ சுமங்கலதேரர்
3) அநாகரிகதர்மபால
4) ஸ்டீஸ் ஒர்கொட்

17) 1ஆம் உலகமகாயுத்தத்தின் ஜேர்மனி தோல்வியடைந்தமைக்கு பிரதான காரணம்

1) ஜேர்மனி நேச நாடுகளின் உதவியைப் பெற்றாலும் அரசு நாடுகளிடம் பின் வாங்கியமை
2) ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகள் முதன்முதலில் நீர்மூழ்கி கப்பலைப் பயன்படுத்தி ஜேர்மனியைப் பின்வாங்க செய்தமை
3) ஜப்பானும் சோபியவும் இணைந்து ஜேர்மனியிடம் ஆஸ்திரியா இளவரசன் படுகொலைக்கு தீர்வு கேட்டு யுத்தத்தில் இறங்கியமை
4) 1917 ஆம் ஆண்டு காலத்திற்கு பின் ஜேர்மன் அரசுக்கு எதிரான கிளர்ச்சியில் உள்நாட்டு மக்கள் ஈடுபட்டமையும் படைவீரர்கள் பின்வாங்கியமை

18) ஜேர்மனி சர்வதிகாரி கிட்லரால் அறிமுகப்படுத்தப்பட்ட சுவஸ்டிகள் இலட்சினையின் பொருள் என்ன என்பதை பின்வருவனவற்றிலிருந்து தெரிவு செய்க

1. பாசிச வாதிக்கொள்கையும் நாசிசவாதிக் கொள்கைகளும் இணைந்த போராட்டம் என்பதை காட்டல்
2. ஆரிய இனத்தின் வெற்றிக்கான போராட்டத்தினை காட்டிநிற்றல்
3. கெஸ்ட்போ ரகசியபொலிஸ் போராட்டத்தினை காட்டிநிற்றல்
4. வல்லரசு நாடுகளுடன் சமாதானத்தினை ஏற்படுத்திக் கொள்ளும் நோக்கினை எடுத்துக்காட்டல்

19) ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கங்களில் அடங்காதது

1) சார்க் நாடுகளின் விருத்திக்கு மும்முரமான முறையில் தலைமை தாங்கல்
2) சர்வதேச அமைதியை ஏற்படுத்தல்
3) உலகின் அனுவாயுத கட்டுப்பாட்டினை மேற்கொள்ளல்
4) உலக நாடுகளின் பொருளாதார விருத்திக்கு உதவுதல்

20) இலங்கையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை ஆரம்பித்தல்

1) D.S சேனநாயக்க
2) S.W.R.D பண்டாரநாயக்க
3) ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க
4) ஜேனாண் கொத்தலாவல

21) நீண்டகாலமாக அந்நியர்களின் வசமாகாதிருந்த கண்டிய இராசதானியை குறுகிய காலத்தில் வீழ்ச்சியடைய செய்து ஆங்கிலேயர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பிரித்தானிய ஆள்பதி

1) பிரட்றிக்நோத்
2) தோமஸ்மெயிற்லண்ட்
3) றொபேட் பிறவுன்றிக்
4) வில்லயம் கிரகரி

22) இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் கரையோரப்பிரதேசங்களில் இரட்டை ஆட்சிமுறை நிலவிய காலப்பகுதி
 1) 1798 - 1813
 2) 1798 - 1802
 3) 1796 - 1833
 4) 1798 - 1818

23) ஆஸ்திரிய நாட்டு பட்டத்து இளவரசன் சுற்றுலாவுக்காக தன் மனைவியுடன் சென்றிருந்த போது கொலையுண்ட இடம்
 1) சரஜீவோ
 2) லெனின் கிராட்
 3) போலந்து
 4) பிரான்ஸ்

24) 1949இல் S.I.V செல்வநாயகத்தால் இலங்கையில் ஆரம்பிக்க அரசியல் கட்சியானது
 1) இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்
 2) ஜனநாயக சோசலிசக்கட்சி
 3) ஈழமக்கள் விடுதலை இயக்கம்
 4) தமிழரசுக்கட்சி

25) 1ஆம் குடியரசு யாப்பு இலங்கையில் கொண்டுவரப்பட்ட ஆண்டு
 1) 1978
 2) 1971
 3) 1972
 4)1981

26) A - கெப்பற்றிப்பொல திசாவை
 B - தோமஸ் மெயிற்லண்ட்
 C - டொறிங்டன்
 D - கேர்குலிஸ் ரொபின்சன்
மேற்கூறப்பட்ட விடயங்களில் இலங்கையருக்கு பாரியளவு பாதிப்புக்கள் ஏற்படாதவாறு நடந்து கொண்டோர்
 1) Aயும், Dயும்
 2) Cயும், Dயும்
 3) Bயும், Dயும்
 4) Bயும் Cயும்

27) A - பிரித்தானிய முடிக்குரிய குடியேற்ற நாடாக இலங்கை கரையோரப் பிரதேசம் பிரகடனப்படுத்தப்படல்
 B - கோல்புறூக் சீர்திருத்தம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்படல்
 C - இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் தாழ்நிலச்சட்டங்களை முன்வைத்தல்
மேற்கூறப்பட்ட வரலாற்று நிகழ்வுகள் நடைபெற்ற ஆண்டுகளை ஒழுங்கு படுத்தினால் சரியாக அமையும் விடை
 1) 1803,1815,1833
 2) 1840,1815,1515
 3) 1802,1833,1540
 4) 1848,1533,1840

28) பிரித்தானியர் இலங்கையை ஆட்சிசெய்த காலத்தில் 1891இல் இலங்கையில் ஸ்ரீமகாபோதி சங்கத்தை ஆரம்பித்தவர் யார்?
 1)மீதெட்டுவத்த குணானந்த தேரர்
 2)அநாகரிகதர்மபால
 3)ஸ்டீல் ஒல்கொட்
 4)இரத்மலான தம்மாலோக தேரர்

29) இங்கிலாந்தில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியின் நன்மையான விளைவுகளில் ஒன்று
 1) போக்குவரத்து துறை விருத்தி கண்டது
 2) மானிடமுறை உற்பத்திகள் அதிகரித்தன
 3) நிலப்பரப்புக்களுக்கு அதிக நிலங்களை பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்படும்
 4) நில அடைப்பு முறையானது இங்கிலாந்தில் அதிகரித்து விவசாய மக்கள் தமது பிரச்சினைகள் தீர்த்து கொண்டனர்

30)சர்வதேச சங்கத்தின் தோல்வியால் ஏற்பட்ட உலகளாவிய விளைவுகளில் ஒன்று
 1)அணிசேரா இயக்கம் உருவாகியமை
 2) 2ஆம் உலக யுத்தம் ஏற்பட்டமை
 3) NATO அமைப்பு தாபிக்கப்பட்டமை
 4) மொன்றியல் பிரகடனம் எழுதப்பட்டது

31) 1921 ஆம் ஆண்டு பிரித்தானியர்களால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட யாப்பின்படி உத்தியோக சார்புள்ளோர்களின் எண்ணிக்கை
 1)14 பேர்
 2) 16 பேர்
 3) 11 பேர்
 4) 20 பேர்

32) A - கிவுலேகெதர மொகட்டால
 B - பிலம்மத்தலாவ
 C -கெப்பற்றிபொல திசாவை
 D -கொங்கால கொடபண்டா
 E - வீரபுறன் அப்பு
பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் 1818ஆம் ஆண்டு கிளர்ச்சிக்கு தலைமை வகித்த தலைவர்களை மட்டும் காட்டும் விடைப்பகுதி
 1) AD
 2) AC
 3) AE
 4) FC

33) இலங்கையில் கெபினட் என்ற அமைச்சரவையை அறிமுகப்படுத்திய யாப்பு பின்வருவனவற்றுள் எது?
 1) சோல்பரி
 2) மனிங்
 3) டொனமூர்
 4) 1972 ஆம் ஆண்டு 1ஆம் குடியரசு யாப்பு

## கடந்த ஞாயிறு, திங்கள், புதன், வெள்ளி, பிரசுரமாகிய விடைகள்

### 16.11.2014 ஞாயிற்றுக்கிழமை

(01).1.அவலம் 2.மனைவி 3.பால்நிலா 4.ஆடிப்பாடி 5.அழுகிறது 6.அருமை

(02).1.தீர்ப்பு 2.அந்தபுரம் 3.அணிந்துரை

(03).1.உத்தமநட்பு 2.வறுமையில்செம்மை

(04).1.பிற்பகல் 2.வினையறுப்பான்

(05).1.தந்திரம் 2.மகிழ்ச்சி

(06).1.பெட்டை 2.மறி 3. குறுகுறுக்கும்

(07).1.கஸ்தூரிபாயை 2.சத்தியசோதனை 3.நன்னயம்

(08).1. Goat 2.Tiger 3.Lion

(09).1.தயவுசெய்து எனது புத்தகத்தை கொண்டு வாருங்கள்

(10).1.விஞ்ஞானகூடம் 2.மாணவன்

(11).1.குருதுமா எய்த? 2.மில அடு கரன்ன பெரித?

(12).1.2 2.3 3.1 4.2 5.3 6.4 7.1 8.2 9.3 10. 11.3 12.2 13.1 14.3 15.4 16.1 17.1 18.3 19.4 20.3 21.3

(13).1.04 2.100900 3.02 4.6 5.10,11 6.180.00 7.8cm² 2,8 8 500m² 9.1.123km 2.116km 3.116km 10.48 11.140.00 12.5.00 14.1 15.2

### 17.11.2014 திங்கட்கிழமை

(01).1.2 2.1 3.3 4.3 5.1 6.3 7.3 8.2 9.2 10.1 11.3 12.2 13.1 14.3 15.3 16.1 17.3 18.1 19.2 20.2 21.3 22.3 23.3 24.1 25.2

(02).1.சரி 2.பிழை 3.சரி 4.சரி 5.சரி 6.பிழை 7.சரி 8.சரி 9.சரி 10.பிழை

(03).11.கத்தரிக்கோல் 12.வலது 13.நத்தை 14.பனை 15.சிலந்தி 16.சுத்தியல் 17.குயில்

(04).18.வற்றாளை 19.வெண்டி 20.வெற்றிலை 21.நெல் 22.அறுகு

23.வௌவால் 24.புளியம்வித்து,மஞ்சாடி 25.கதிரை,கட்டில் 26.2 27.3 28.2

29.3 30.2 31.1 32.3 33.1 34.3 35.3 36.3 37.1 38.3 39.3 40.1 41.3

42.3 43.3 44.3 45.1 46.3

### 19.11.2014 புதன்கிழமை

(01).1. காற்றிடம் 2.புன்னகை 3.நன்மைகள் 4.வள்ளல் 5.ஞானத்தை 6.மாண்புடன் இருப்பாய் 7.மரத்திடம் (02).1.திறமையில் நம்பிக்கை 2.வறுமையில் செம்மை (03).1.கொய்யாமரங்கள் 2.இலைமறைக்காய்போல

(04).1.குணப்பெயர் 2.தொழிற்பெயர் 3.பொருட்பெயர் 4.காலப்பெயர்

(05).1.மயில்கள் ஆடின 2.தம்பிபாடம் படித்தான்

(06).1.வானத்தில் வெண்ணிலா ஓர் ஓடம் போல தோன்றியது 2.ஏழை எளியவர்களுக்குஉதவுவது ஓர் உத்தம குணமாகும்.

(07).1.தயவுசெய்து முயற்சி செய் 2.இரவு வந்தனம் 3. நாம் பாட்டுப் பாடுவோமா?

(08).1. Donkey 2. Buffalo

(09).1.வீடு 2.அதிபர்காரியாலயம் 3.சிற்றுண்டிச்சாலை எங்குள்ளது

(10).1.2 2.2 3.4 4.1 5.4 6.2 7.3 8.4 9.4 10.3 11.3 12.3 13.2 14.4 15.1 16.4

(11).1.3 2.4 3.5 4.2

(12).1.1389 2.1 3.7தடவை 4.முக்கோணம்,சதுரம் 6.50km 7.8m 70cm 8.96 9.55 10.22 11.200ml 12.2020ம் வருடம் 13.170.00 14.32.00 15.அண்ணாகாலையில் மைதானம்சென்றார் 16.அப்பா நேற்று காலை கொழும்பு சென்றார் 17.3 18.3 19. 20.1 21.1 22.3 24.3

### 21.11.2014 வெள்ளிக்கிழமை

(1)2 (2)3 (3) 3 (4)2 (5) 1 (6) 2 (7)1 (8)3 (9)1 (10)3 (11)2 (12)1 (13)3 (14)2 (15)2 (16)2 (17)1 (18)3 (19)3 (20)2 (21)2 (22)2 (23)3 (24)1 (25)3 (26)1 (27)2 (28)1 (29)3 (30)2 (31)1 (32)1 (33)1 (34)3 (35)2 (36)3 (37)1 (38)2 (39)வசதி (40)தகரம் (41)2 (42)3 (43)2 (44)3 (45)3 (46)2 (47)2





கியூடெக் கரித்தாஸ் நிறுவன 'சர்வமத வாழ்வு' அமைப்பின் மாதாந்த கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது. இதன் போது அண்மையில் கொஸ்லந்தையில் இடம்பெற்ற அனர்த்தத்தில் உயிர்நீத்த மக்களுக்காக மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்படுவதையும், கியூடெக் நிறுவன சமூக சேவையாளர் பிரிவு அதிகாரி ஜோசப் பாலா தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறுவதையும் காணலாம்.

(படங்கள்:ஆர்.இராஜகுமார்)

# குப்பை மூடைகளை அகற்றுவதில் சாவகச்சேரி நகரசபை அசிரத்தை

## தொற்றுநோய் பரவும் என மக்கள் அச்சம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையின் அசண்டையீனமான செயற்பாட்டால் வீட்டு வாசலில் வைக்கப்பட்டுள்ள குப்பை மூடைகளால் நோய்த்தொற்று ஏற்படக்கூடும் என மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.



கடந்த வாரம் சாவகச்சேரி நகரசபையினால் இரவிரவாக ஒலிபெருக்கிமூலம் டெங்கு வாரம் விசேடமாக மேற்கொள்ளப்படவுள்ளதாகவும், வீடுகளில் உள்ள கழிவுப்பொருட்கள் மற்றும் குப்பைகளை மூடைகளாக கட்டி தங்களது வீட்டு வாசல்களில் வைக்குமாறும், அக்கழிவுகள் நகர சபையினரால் அகற்றப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

இதற்கமைய அனைத்து மக்களும் தமது காணிகளில் இருந்த கழிவுப் பொருட்களை உரப்பைகளில் கட்டி வீட்டு வாசல்களில் வைத்து ஒருவார காலம் ஆகியும் அவை இன்று வரை அகற்றப்படாதுள்ளன.

இதனுள் மழை வெள்ளம் உட்புகுவதால், நுளம்பு மற்றும் தொற்றுக் கிருமிகள் பெருகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் இவ்வாறு அறிவித்தும் குப்பை அகற்றுவதில் சாவகச்சேரி நகரசபை காட்டும் அசமந்தப் போக்கால் தாம் பெரும் பாதிப்புக்கு ஆளாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும், சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வசிப்போர் விசனத்தை வெளியிட்டுள்ளனர்.

தம்மை முட்டாள்களாக்கும் வகையில், சாவகச்சேரி நகர சபையினர் செயற்பட்டு வருவதாகவும் பலரும் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளனர். (இ)

# ஆக்கத்திறன் கண்காட்சி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆரம்பப்பிரிவு தரம் 1 மாணவர்கள் ஆசிரியர்கள் ஒன்றிணைந்து நடாத்திய கற்றல் கற்பித்தல் ஆக்கத்திறன் கண்காட்சி கடந்த 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

இக்கண்காட்சியினை கல்லூரியின் ஆரம்பப்பிரிவு உதவி அதிபர் செல்வி க.சுமதி பகுதித்தலைவர் திருமதி சி.சிவகுமார் ஆகியோர் இணைந்து நாடாவை வெட்டி திறந்து வைத்தார்கள்.

இக்கண்காட்சியில் கற்றல் கற்பித்தல் ஆக்கத்திறன் சார் விடயங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. கண்காட்சியினை மாணவர்கள் பெற்றோர்கள், ஆசிரியர்கள், ஆர்வலர்கள் எனப்பலர் பார்வையிட்டனர். (63)



கொக்குவில் றோட்டறக் கழக்கத்தின் ஏற்பாட்டில் கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டிதர் வித்தியாசாலை மாணவர்களின் நன்மை கருதி கற்றல் உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. இதில் றோட்டறக் கழகத்தின் மாவட்ட ஆளுநர் கலந்து கொண்டு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தார். (48)

# யாழ். பல்கலைக்கழகத்தில் ஆரம்பமாகிறது தொழில் நிர்வாக முதுமாணிக் கற்கைநெறி

வடபகுதியில் உயர்கல்வி வாய்ப்பினை வழங்கும் ஒரேயொரு பல்கலைக் கழகமாக யாழ். பல்கலைக்கழகம் விளங்குகின்றது. அபிவிருத்திப் பாதையில் முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கும் இப்பல்கலைக்கழகத்தில் முகாமைக் கற்கைகள் வணிகபீடமும் ஒன்றாகும்.

இப்பீடத்தினால் தொழில் நிர்வாக முதுமாணிக் கற்கைநெறி முதன்முறையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**பீடத்தின் வளர்ச்சி**

ஆரம்பத்தில் வணிகமுகாமைக் கற்கைகள் என்ற துறையின் கீழ் வணிகமாணி முகாமைத்துவமாணி என்ற இரு கற்கை நெறிகள் காணப்பட்டதுடன் இத்துறையானது கலைப்பீடத்தின் கீழ் இயங்கி வந்தது.

1994 இல் முகாமைக் கற்கைகள் வணிக பீடம் தனியான உருவாக்கப்பட்டு கல்விச் செயற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டதுடன் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன.

இலங்கையிலுள்ள ஏனைய பல் கலைக்கழகங்களிலுள்ள முகாமைத்துவ மற்றும் வணிக கற்கை நெறிகளின் தரத்துடன் ஒத்துப்போகக்கூடிய வகையில் பாடத்திட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்டதுடன் அரையாண்டுக் கல்வி முறையும் அறிமுகப்படுத்தப்பட்டது.

தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் தொழில் சந்தையில் போட்டியிடுவதற்கும், தொழில் வாய்ப்புக்களைப் பெறுவதற்கும் ஏற்றவகையில் மாணவர்களைத் தயார்படுத்தும் நோக்குடன் ஆங்கில மொழி மூலமான கற்பித்தல் 1999 இல் ஆரம்பிக்கப்பட்டது.

மாணவர்களின் விசேட கற்கைநெறிகளுக்கு வசதியளிக்கும் வகையிலும் கூடுதலான மாணவர்களைப் பீடத்திற்கு உள்வாங்கும் நோக்கிலும் 2010 ஆம் ஆண்டு பீடத்தின் இரு துறைகளும் மீள் கட்டமைப்பு செய்யப்பட்டு கணக்கியல் துறை, நிதி முகாமைத்துவத்துறை, மனிதவள முகாமைத்துவத்துறை, சந்தைப்படுத்தல் துறை என நான்கு துறைகள் உருவாக்கப்பட்டன.

தற்போது முகாமைத்துவம், வணிகம் ஆகிய இரு கற்கைநெறிகளுக்கும் சேர்த்து வருடாந்தம் 400 மாணவர்கள் வரையில் அனுமதி பெறுவதுடன் பீடத்தில் ஏறத்தாழ 1200 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.

**பீடத்தின் கற்கைநெறிகள்**

முகாமைக் கற்கைகள் வணிக பீடத்தில் தொழில் நிர்வாகமாணி, வணிக மாணி என்ற இரு பட்டப்படிப்பு கற்கை நெறிகள் நடாத்தப்பட்டு வருகின்றன. தொழில் நிர்வாகமாணி கற்கைநெறியைப பயிலும் மாணவர்கள் கணக்கியல், நிதி முகாமைத்துவம், சந்தைப்படுத்தல், முகாமைத்துவம், மனிதவள முகாமைத்துவம் என்ற நான்கு துறைகளில் விசேடத்துவ கல்வியைத் தொடரமுடியும்.

அவ்வாறே வணிகமாணிக் கற்கை நெறியிலும் மாணவர்கள் கணக்கியலும் நிதியும், வியாபார தொழில்நுட்ப முகாமைத்துவம் என்ற இரண்டு துறைகளில் விசேடத்துவ கல்வியை மேற்கொள்ள முடியும்.

வணிகமாணி (வெளிவாரி) கற்கை நெறியும் பீடத்தினால் நடாத்தப்பட்டு வருகிறது. பீடத்தின் வளர்ச்சிப் படிகளில் ஒன்றாக 2008 ஆம் ஆண்டு இணையவழி வியாபார முகாமைத்துவமாணி (வெளிவாரி) கற்கைநெறி ஆரம்பிக்கப் பட்டது.

இக் கற்கைநெறியின் முதலாம் வருட மாணவர்கள் தமது பட்டப்படிப்பை பூர்த்தி செய்துள்ளனர். 2011 ஆம் ஆண்டில மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா, சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா, நுண்நிதியில் டிப்ளோமா என மூன்று டிப்ளோமா கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்பட்டன.

**பட்டப்பின் படிப்பு கற்கைநெறிகள்**

முகாமைத்துவ முதுதத்துவமாணி, வணிக முதுதத்துவமாணி மற்றும் கலாநிதிப்பட்ட கற்கைநெறிகளும் இப் பீடத்தினால் உயர்பட்டப் படிப்புகள் பீடத்தின் கீழ் நடாத்தப்பட்டு வருகின்றன.

இத்தகைய வளர்ச்சிப் போக்கின் பிரதான ஒரு கட்டத்தில் முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம் இன்று காலடி எடுத்து வைக்கின்றது. தொழில் நிர்வாக முகமாணிக் கற்கைநெறி நவம்பர் 19 ஆம் திகதி அங்குரார்ப்பண வைபவத்துடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சமூகத்தின் தேவைகளைக் கருத்திற் கொண்டு இம் முதுமாணிக் கற்கை நெறியை ஆரம்பிப்பது தொடர்பான நீண்ட நாள் கனவு தற்பொழுது நனவாகிறது.

வடபகுதி மக்களின் ஒரே உயர்கல்வி நிறுவனமான யாழ். பல்கலைக்கழகம் தனது சமூகப் பொறுப்பை நிறைவேற்றும் உன்னத பணியில் தொடர்ந்து புதிய புதிய கற்கைநெறிகளை ஆரம்பித்து வருவது அனைவரும் அறிந்ததே.

அதன் வழியில் முகாமைக் கற்கைகள் வணிகபீடம் எதிர்காலத்தில் மேன்மேலும் புதியகல்வித் திட்டங்களை அறிமுகப் படுத்தவுள்ளது.

**திருமதி.தனேஸ்வரி ரவீந்திரன்**
**இணைப்பாளர்**
**தொழில் நிர்வாக முதுமாணிக் கற்கைநெறி**

# ஐ.நா. பாதுகாப்பு குழுவை விரிவுபடுத்தவேண்டும்

## கோருகிறது இந்தியா



ஐ.நா.வில் சேர்ந்துள்ள உறுப்பு நாடுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பாதுகாப்பு குழுவை விரிவுபடுத்தப் வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது. ஐ.நா. சபை சார்பில் நாடாளுமன்றங்களின் சபாநாயகர்கள் மாநாடு நியூயோர்க்கில் நடைபெற்றது. இம் மாநாட்டில் இந்திய மக்களவை சபாநாயகர் சுமித்ரா மகாஜன் இந்தக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

1945-ம் ஆண்டு ஐ.நா. சபை தொடங்கப்பட்டபோது 51 உறுப்பு நாடுகள் மட்டுமே இருந்தன. தற்போது 193 உறுப்பு நாடுகள் உள்ளன. தொடக்க காலத்தில் ஐ.நா. சபையில் 3 ஆபிரிக்க நாடுகள் மட்டுமே இருந்தன. இப்போது 54 ஆபிரிக்க நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.

ஆனால் ஐ.நா. பாதுகாப்பு குழுவில் ஆபிரிக்க நாடு களுக்கு போதிய பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை. உறுப்பு நாடுகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பாதுகாப்பு குழு விரிவுபடுத்தப்பட வேண்டும். 2010ஆம் ஆண்டில் ஐ.நா. சபையின் 65 ஆவது ஆண்டு தினம் கொண்டாடப்பட்டது. அப்போது பாதுகாப்பு குழுவில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது. ஆனால் அந்த சீர்திருத்தங்கள் இன்றுவரை நிறைவேற்றப் படவில்லை.

வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்துவதற்கு ஒரு வரைமுறையை உருவாக்க வேண்டும். குழுவில் நடைமுறைகளில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். என்றும் அவர் கோரியுள்ளார்.

## நடிகர் ரஜினியிடம் மன்னிப்பு கோரிய அமைச்சர்

சர்வதேச திரைப்பட விழாவில் ரஜினியின் பெயரை குறிப்பிட மறந்ததால், மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் மனோகர் பரிக்கர் மன்னிப்பு கோரியுள்ளார்.

கோவா சர்வதேச திரைப்பட விழாவில் நடிகர்கள் அமிதாப் பச்சன் மற்றும் ரஜினிகாந்த் பங்கேற்றனர்.

இந்த விழாவில் ரஜினிக்கு நூற்றாண்டு இந்திய சினிமாவின் சிறந்த பிரமுகருக்கான விருது வழங்கப்பட்டது.

விருது வழங்கும் முன்னர் புதிதாக மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள மனோகர் பரிக்கர் பேசினார்.

அவர் தனது பேச்சில் கோவா ஆளுநர், முதல்வர், மத்திய அமைச்சர்கள், அமிதாப் பச்சன் பெயர்களையெல்லாம் குறிப்பிட்டவர், விழாவின் நாயகனான ரஜினி பெயரை மறந்துவிட்டார்.

பின்னர் இதை உணர்ந்த அவர், ரஜினிகாந்த் பெயரைக் குறிப்பிடாததற்கு மன்னிக்க வேண்டும். நான் பெயர்களை ஒரு தாளில் எழுதி வைத்திருந்தேன். அதை எடுத்து வர மறந்துவிட்டேன் என்றார். ரஜினியும் இதைப் பெரிதுபடுத்தாமல், அமைதியான புன்னகையுடன் தலையசைத்து ஏற்றுக் கொண்டார்.

## உலகச் செய்திகள்

## மின்சாரம் தாக்கிய சிறுவன் காந்தமாக மாறினான்



ரஷ்யாவில் சிறுவன் ஒருவனுக்கு இரும்புகளை இழுத்துக் கொள்ளும் காந்த சக்தி கிடைத்துள்ளது.

ரஷ்யாவை சேர்ந்த நிக்கோலை (வயது-12) என்ற சிறுவன் வீதியில் உள்ள விளக்கு கம்பத்தில் சாய்ந்தபோது, அவரை மின்சாரம் தாக்கியுள்ளது. இதனையடுத்து மயக்கமடைந்த அச் சிறுவனை வீதியில் சென்றவர்கள் அவரது வீட்டிற்கு தூக்கிச் சென்று விட்டுள்ளனர்.

இதன்பின் காலையில் நித்திரையில் இருந்து விழித்து எழுந்தவுடன் படுக்கையில் உள்ள சில நாணயங்கள் அவர் மீது ஒட்டிக் கொண்டுள்ளன.

மேலும் சாப்பிடும் போது கரண்டியை கீழே போட்ட போது, அது அவனது நெஞ்சில் ஒட்டிக் கொண்டுள்ளது.

இதனால் பள்ளிக்கூடத்தில் பிரபலமடைந்த நிக்கோலை, தற்போது மாணவர்கள் மத்தியில் சாகசங்கள் செய்து அசத்தி வருகிறான்.

## ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் ஆயுதத் தொழிற்சாலை தகர்ப்பு



ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அமைப்பினர் குண்டுகளை தயாரிக்கப் பயன்படுத்திய தொழிற்சாலை கட்டடம் ஒன்றின் மீது கனேடிய யுத்த விமானங்கள் குண்டுவீச்சினை மேற்கொண்டுள்ளன. ஈராக்கின் வட பகுதியில் அமைந்துள்ள இந்த தொழிற்சாலை மீது கனேடிய போர் விமானங்களுடன், ஏனைய கூட்டணி நாடுகளின் விமானங்களும் இணைந்து தாக்குதலை மேற்கொண்டுள்ளன.

கனடாவின் ஊகு-18 வகை போர் விமானங்கள் நான்கு குறித்த அந்த இலக்கின் மீது எட்டு குண்டுகளை துல்லியமாக வீசியதாக கூறப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் அந்த ஆயுத தொழிற்சாலை தரைமட்டமானதாகவும், நூற்றுக்கணக்கான தீவிரவாதிகள் இறந்ததாகவும் கூறப்படுகிறது.

மேலும் ஈராக்கிய படையினர் மீது தாக்குதலை நடத்துவதற்கான கண்ணிவெடிகள், வீதியோர குண்டுகள், பொறி வெடிகள் போன்றவற்றை தயாரிப்பதற்கு அந்த தொழிற்சாலை பயன்பட்டு வந்ததாக தெரிகிறது.

## மரண தண்டனையிலிருந்து விடுதலையாகிய ஐந்து மீனவர்களும் தமிழகம் திரும்பினர்

### சாவின் விளிம்பிலிருந்து மீள உதவியவர்களுக்கு நன்றி தெரிவிப்பு



இலங்கைச்சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர்கள் 5 பேரும் கொழும்பில் இருந்து நேற்று முன்தினம் இரவு டில்லி சென்றனர். அங்கிருந்து நேற்று முன்தினம் நள்ளிரவு விமானம் மூலம் அவர்கள் தமிழகம் சென்னை திரும்பினர்.

ராமேஸ்வரம் தங்கச்சி மடத்தைச் சேர்ந்த எமர்சன், அகஸ்டஸ், வில்சன், பிரசாத், லாங்லெட் ஆகியோர் போதைப் பொருள கடத்தியதாக கடந்த 2011ஆம் ஆண்டு இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இந்த வழக்கு 2012ஆம் ஆண்டு இறுதிவரை யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. பின்னர் வழக்கு விசாரணை கொழும்பு உயர் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து கடந்த அக்டோபர் 30ஆம் திகதி 5 பேருக்கும் கொழும்பு உயர் நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது.

அவர்களை விடுவிக்கக் கோரி தமிழகம் முழுவதும் மீனவர் அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகள் சார்பில் பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டன. இதுதொடர்பாக தமிழக அரசின் சார்பில் மத்திய அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து தமிழக மீனவர்களை மீட்க மத்திய அரசு சட்டரீதியாகவும் ராஜியரீதியாகவும் தீவிர முயற்சிகளை மேற்கொண்டது.

மேலும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை பிரதமர் நரேந்திர மோடி தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

அப்போது 5 மீனவர்களின் மரண தண்டனையை இரத்து செய்யவும் அவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஒப்புக் கொண்டார்.

பின்னர் அவர்கள் கொழும்பில் இருந்து நேரடியாக டில்லிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். தமிழகம் வராமல் மீனவர்கள் டெல்லிக்கு சென்றதால் அவர்கள் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்துப் பேசுவார்கள் என்று கூறப்பட்டது.

ஆனால் பிரதமரை சந்திக்கும் திட்டம் இல்லை என்று மத்திய வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் அக்பருதீன் தெளிவுபடுத்தினார். சில சம்பிரதாய நடவடிக்கைகளுக்காகவே மீனவர்கள் டில்லிக்கு அழைத்து வரப்பட்டனர் என்று தெரிவித்தார்.

ஐந்து மீனவர்களும் டில்லியில் நிருபர்களிடம் கூறுகையில்:

மரண தண்டனை விதிக்கப்பட்ட வுடன் மிகுந்த சோகத்தில் ஆழ்ந்தோம். ஆனால் இந்திய தூதரக அதிகாரிகள் எங்களைச் சந்தித்து விடுதலை அடைவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பதாக உறுதி அளித்தனர். அவர்களின் ஆறுதல் எங்களுக்கு தைரியம் அளித்தது.

இதைத் தொடர்ந்து இருநாடுகளின் ராஜியரீதியிலான பேச்சுவார்த்தை மூலம் மரண தண்டனையில் இருந்து விடுதலை பெற்றோம். சாவின் விளிம்பில் இருந்து எங்களை மீட்க உதவிய மத்திய அரசுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். எங்களது விடுதலைக்காகப் போராடிய தமிழக மக்களுக்கு நன்றிக் கடன்பட்டுள்ளோம் எனத் தெரிவித்தனர்.

## ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளை தாக்க சவுதி விமானிகள் மறுப்பு



ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத்த சவுதி அரேபிய விமானிகள் மறுப்பு தெரிவித்துள்ளனர்.

ஈராக் மற்றும் சிரியாவின் பல்வேறு பகுதிகளைக் கைப்பற்றி தனி இஸ்லாமிய தேசத்தை உருவாக்கி அட்டூழியங்களை அரங்கேற்றி வரும் ஐ.எஸ்.ஐ.எஸ் மீது, தாக்குதல் நடத்த அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானியா, கனடா, ஜேர்மனி உள்ளிட்ட சர்வதேச நாடுகள் ஒன்றிணைந்துள்ளன.

ஆனால் ஐ.எஸ்.ஐ.எஸ் மீது வான்வழி தாக்குதல் நடத்த சவுதி அரேபிய விமானிகள் மறுத்துவருவதாக சமூக வலைத்தளங்களில் தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

இந்த தகவலை ஈராக்கின் அரசியல் நிபுணர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

மேலும் இத்தகைய தாக்குதல்கள் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என சவுதியின் முக்கிய அரசியல் தலைவர்கள் எண்ணுகின்றனர்.

இதுகுறித்து ஈராக் அரசியல் ஆய்வாளர் சாஜத் ஜியாத் கூறுகையில் சவுதி விமானிகள் ஐ.எஸ். ஐ.எஸ் தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத்த மறுத்து வருவது உண்மை தான் என்றும் இதை அவர்கள் உறுதி செய்துள்ளனர் எனவும் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

# முடங்கிக் கிடக்கிறது நகரசபை சேவைக்காக ஏங்கும் பொதுமக்கள்

## எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆதங்கம்

மத்திய அரசாங்கம் தமக்கு அதிகாரங்களை வழங்கவில்லையெனக் குறை கூறிவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையிலுள்ள வடக்கு மாகாணசபை, மக்களின் வாக்குகளால் அமர்த்தப்பட்ட வல்வெட்டித்துறை நகரசபையை முடக்கி வைத்துள்ளது.

கூட்டமைப்பின் சபை உறுப்பினர்களுக்குள் ஏற்பட்டுள்ள பதவி மோகங்களாலும் கோஷ்டிப் பூசல்களாலும் மக்களின் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. சபை தொடர்பாக நடவடிக்கை எடுக்கத் துணிந்த முதலமைச்சரினால் தீர்வு கூறுவதற்கு மட்டும், சட்டத்தினை தூக்கி எறிந்துவிட்டு, கட்சியினரிடம் பொறுப்பைத் தள்ளி விட எத்தனிக்கும் செயற்பாடு எவ்வகையில் நீதியானது என ஈ.பி.டி.பி.யின் வல்வெட்டித்துறை நகரசபை எதிர்க் கட்சித் தலைவி திருமதி கைலாஜனி கேள்வி எழுப்பியுள்ளார்.

மேற்படி விடயமாக மேலும் நகர சபை தொடர்பாக அவர் தெளிவுபடுத்துகையில்,

வல்வெட்டித்துறை நகரசபையானது மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளால் ஆளப்பட ஆரம்பித்த காலம் முதலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடையே தலைவர் பதவியினைக் குறிவைத்து தொடர்ச்சியாக பிரச்சினைகளும் கோஷ்டிச் செயற்பாடுகளும் தலைதூக்கி தாண்டவமாடினவேயன்றி, பிரதேச மக்களின் நலன்பற்றியோ, அவர்கள் தாம் தெரிவு செய்யப்பட்டது எதற்காக என்பது பற்றியோ, எண்ணிக் கொள்ள மறந்துவிட்ட நிலையில் சபையின் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்களாகிய நாம் எம்மால் ஆனவரை சட்டங்களை மதித்து, மக்களின் நலன் காக்கும் வகையில், மக்கள் எம்மீது வைத்த நம்பிக்கைக்கு துரோகம் இழைக்காது சபைக்கு ஒத்துழைப்பு நல்கி இயங்கி வந்தோம்.

இருப்பினும் வல்வெட்டித்துறை நகரசபையில் 2014 ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டம் எமது ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களிடையே நிலவிய உட்பூசல்கள், பதவி மோகங்கள் விஸ்வரூபம் எடுத்து அதன் உச்சக்கட்டமாக மாத அமர்வுகளில், மிகவும் கீழ்த்தரமான முறையில் நடந்து கொள்வதும் நகரசபையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்களது சம்பளக் கொடுப்பனவுகள் உள்ளிட்ட அனைத்துக் கொடுப்பனவுகளையும் அங்கீகரிக்க மறுத்து சபையின் பெரும்பான்மை உறுப்பினர்களால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தகுந்த, பொருத்தமான காரணங்கள் எதனையும் குறிப்பிடாது தவிசாளர் பதவியைக் குறிவைத்து மக்களின் நலன் நோக்காது அரச உத்தியோகத்தர்களை அலைத்திதும், ஆதிக்க வெறி கொண்டு மக்களுக்கு சேவையாற்ற வந்த நோக்கம் மறந்து, சுயநலன்கள் மட்டுமே கருத்திற் கொண்டு சபையின் நடவடிக்கைகளை முடக்கியுள்ளனர்.

இதற்கு கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர் ஒருவரும் உடந்தையாக செயற்பட்டதை நகர மக்கள் நன்கு அறிவார்கள். இதன் விளைவாக நகரசபை கட்டளைச்சட்டம் 184 இற்கமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதாவது வல்வெட்டித்துறை நகரசபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களின் பதவி வெறி கொண்ட இழிவான நடவடிக்கைகளால் வல்வெட்டித்துறை நகரசபையானது வட மாகாண முதலமைச்சரால் வெளியிடப்பட்ட 1873/3 ஆம் இலக்க 28.07.2014 ஆம் திகதி அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் பிரகாரம் 28.07.2014 ஆம் திகதி தொடக்கம் மக்கள் பிரதிநிதித்துவ சபை இடைநிறுத்தப்பட்டு இளைப்பாறிய நிதவான் அரிய நாயகம் தலைமையில் விசாரணை ஒன்றினை மேற்கொள்வதெனவும், அக்காலப் பகுதிக்குரிய சபையின் அதிகாரங்கள் யாழ. பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டும் இருந்தது.

சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரது நிறைவேற்று அதிகாரப் பணிகளும் குறித்த 3 மாத காலப் பகுதியுடன் (27.10.2014) முடிவுறுத்தப்பட்டுள்ள நிலையில் மீண்டும் வல்வெட்டித்துறை நகர சபையானது முடக்கப்பட்டதோர் நிலையை அண்மித்துள்ளது வருத்தமளிக்கிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனவரி 08...

ஒருவரை நிறுத்தக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் அத்தகவல் உறுதிசெய்யப்படவில்லை.

பாப்பாண்டவர் இலங்கை விஜயம் செய்யும் காலப்பகுதிக்கு மிகவும் அண்மைய நாட்களிலோ அல்லது அதன் பின்னரான அண்மைய நாட்களிலோ ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டாம் என இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பொது வேட்பாளராக...

களமிறக்கப்பட்டமையால் தெற்கில் அரசியல் பூகம்பம் போன்ற நிலை உருவாகியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரணதுங்க உள்ளிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிரமுகர்கள் கலந்துகொண்ட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் சிறிசேன இந்த முடிவை அறிவித்தார்.

அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, எம்.கே.டி.எஸ்.குணவர்தன, துமிந்த திசாநாயக்க, ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான ராஜிவ விஜேசிங்க, வசந்த சேனாநாயக்க ஆகியோரும் இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

குடும்ப ஆட்சியிலிருந்து நாட்டை காப்பதற்காகவே தான் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளதாக அங்கு உரையாற்றிய மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவாளர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். பொது மக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். நாட்டின் ஜனநாயகம், சட்டம் - ஒழுங்கு சீர்குலைந்துள்ளன என்ற சிறிசேன. இந்த அழிவில் இருந்து நாட்டை காப்பதற்காகவே தான் இந்தத் தீர்மானத்தை எடுத்ததாக தெரிவித்தார்.

தான் வெற்றிபெறும் நாள் முதல் 100 நாட்களுக்குள் நிறைவேற்று அதிகாரங்கள் கொண்ட ஜனாதிபதி முறை இரத்துச் செய்யப்படும் என்றும் கூறிய மைத்திரிபால, தான் அமைக்கும் அரசாங்கத்தின் பிரதமராக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை நியமிக்கவுள்ளதாகவும் கூறினார்.

தனது புதிய ஆட்சின் கீழ், அரசியல்யாப்பின் 18 வது திருத்தம் இரத்துச் செய்யப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

அரசியல் யாப்பின் 18 ஆவது திருத்தம் காரணமாகவே நாட்டில் சர்வாதிகார ஆட்சியொன்று உருவாகியுள்ளதாக கூறிய அவர், பொலிஸ், அரசசேவை, நீதித்துறை, ஊடக சுதந்திரம், ஊடக சுதந்திரம், ஆகியவை முடக்கப்பட்டுள்ளதாகவும் குற்றம் சாட்டினார்.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தினால் நீக்கப்பட்ட அரசியலமைப்பின் 17 ஆவது திருத்தத்தை மீண்டும் அமுலுக்கு கொண்டுவருவதாகவும் அவர் உறுதியளித்தார்.

தன்னை பொது ஜனாதிபதி வேட்பாளராக தேர்ந்தெடுப்பதற்காக செயற்பட்ட முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க, ஜாதிக ஹெல உறுமய கட்சியினர் உள்ளிட்ட தரப்பினருக்கு நன்றி கூறுவதாகவும் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

## மீண்டும்...

கொடுமைகள் மட்டுமல்ல பல காரணங்கள் உண்டு அவை ஒவ்வொன்றையும் கூற வெட்கமாக உள்ளது, அது இங்கு முக்கியமில்லை.

பலர் என்னை பொது வேட்பாளராக களமிறங்க கூறினர். 18 ஆவது அரசியல் அமைப்பு சட்டத்தின் படி முடியும் என்றனர்.

ஆனால் மீண்டும் அவ்வாறு போட்டியிட எந்தவொரு அவசியமும் எனக்கு இல்லை, அரசியல் ரீதியாக தேவையான உதவிகளை வழங்கி நாட்டை கட்டியெழுப்ப உதவுவேன். எந்தப் பதவியும் தேவையில்லை என்றார்.

## ஸ்திரத்...

நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு சவாலானது என்றும் அவர் தெரிவித்தார்.

கடந்த காலங்களிலும் கட்சியின் முக்கிய பொறுப்புகளிலிருந்தவர்கள் பல தடவைகளில் கட்சியிலிருந்து விலகியுள்ளனர்.

கடந்த காலங்களில் கட்சி இவ்வாறான பல நெருக்கடிகளை சந்தித்துள்ளது, பல கட்சி தாவல்களை சந்தித்துள்ளது. இந்த நாட்டில் நிறைவேற்று அதிகார முறை என்ற ஒன்று இருந்திருக்காவிட்டால் நாடு இன்னமும் மோசமான நெருக்கடிகளைச் சந்தித்திருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கவிஞர் இ.த.ஜெயசீலனின் நூல் அறிமுக விழா நாளை

(யாழ்ப்பாணம்)

கவிஞர் இ.த.ஜெயசீலனின் "புயல் மழைக்கு பின்னரான பொழுது" கவிதை நூல் அறிமுக விழா நாளை பி.ப. 3.00 மணிக்கு பருத்தித்துறை 4 ஆம் குறுக்கில் அமைந்துள்ள ராஜ ராணி சேவை இல்ல மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாபூஷணம் குப்பிளான் ஐ.சண்முகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் வரவேற்புரையை கலைப்பருதி கே.இருதயராசா, ஆசியுரையை சிவஸ்ரீ வே.நித்தியானந்தராஜா குருக்கள், அருட்தந்தை சூ.டேமியன், வாழ்த்துரையை பருத்தித்துறை பிரதேச சபை எதிர்க் கட்சித் தலைவர் ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன், பருத்தித்துறை நகரபிதா தேசமான்ய சபா ரவீந்திரன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

இந்நூலின் முதற்பிரதியை பருத்தித்துறை வர்த்தகர் சங்கத் தலைவர் சி.பத்மநாதனும், கௌரவ பிரதியை கலாபூஷணம் ச.உருத்திரேஸ்வரனும் பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

நூலின் நயப்புரையை யாழ். பல்கலைக்கழக கலைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி, யாழ். பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ராஜேஸ்கண்ணன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (116.08)

# சீனாவின் உதவி தொடர்ந்து கிடைக்கும்

சீன முன்னாள் உதவிப்பிரதமரும் சீன பொவாவோ மாநாட்டின் தலைவருமான ஷேங்க் பியேன், நேற்று பிரதமர் தி.மு. ஜயரத்னவை, பிரதமர் அலுவலகத்தில் சந்தித்து உரையாடினார்.

இந்தச் சந்திப்பின் போது கருத்துத் தெரிவித்த சீன முன்னாள் உதவிப்பிரதமரும் சீன பொவாவோ மாநாட்டின் தலைவருமான ஷேங்க் பியேன்,

இலங்கை ஒரு அழகான நாடு. தீவிரவாத யுத்தம் முடிவடைந்த பின்னர் தற்சமயம் இலங்கை வேகமாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடாகும்.

இலங்கையின் எந்த ஒரு அபிவிருத்தி நடவடிக்கைக்கும் சீனா உதவத் தயாராக உள்ளது எனத் தெரிவித்தார்.

சீன பொவாவோ மாநாட்டில் கலந்து கொள்ளுமாறும் இலங்கைப் பிரதமருக்கு அழைப்பு விடுத்தார்.

அவ்வாறே, இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு சீனா அளப்பரிய பங்களிப்பைச் செய்துள்ளதாகவும் இது குறித்து சீன அரசாங்கத்துக்கு தாம் நன்றி தெரிவிப்பதாகவும் பிரதமர் இச்சந்திப்பின் போது தெரிவித்தார்.

## அமைச்சு...

நேற்று எதிரணியின் பொது வேட்பாளராக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தில் சுகாதார அமைச்சராக கடமையாற்றிய மைத்திரிபால சிறிசேன தெரிவுசெய்யப்பட்டிருந்தார் என்பதுடன் ராஜித சேனாரத்ன உள்ளிட்ட அமைச்சர்கள் இதற்கு ஆதரவளித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## புதிய...

மைத்திரிபால சிறிசேனவை கட்சியின் சகல பொறுப்புக்களிலிருந்தும் நீக்குவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.

மைத்திரிபால சிறிசேனவையும் பணி நீக்கவும், எஸ்.பி.திஸாநாயக்கவிற்கு பொறுப்புக்களை ஒப்படைக்கவும் அவசரமாக ஜனாதிபதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவினை கூட்டி நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட கட்சியின் சில நாடாளுமன்ற உறுப்பினர்களின் கட்சி உறுப்புரிமையையும் இடைநிறுத்த ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன, அமைச்சர் துமிந்த திஸாநாயக்க, பிரதி அமைச்சர் எம்.கே.டி.எஸ். குணவர்தன, தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ராஜீவ விஜேசிங்க உள்ளிட்டவர்க்ள் இவ்வாறு பணி இடைநிறுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## சுதந்திர...

போன்று வடமாகாணத்திலும் சுதந்திர வர்த்தக வலயத்தை நிறுவி, அதனூடாக துறைசார்ந்த உற்பத்தியாளர்களுக்கும், பொதுமக்களுக்குமான சேவைகளை இலகுபடுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

அதுமட்டுமன்றி வடக்கில் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதன் ஊடாக வடமாகாணத்தின் பல்துறை சார்ந்த தொழிற்றுறைகளை நவீனப்படுத்தி, மேம்படுத்த முடியும்.

அத்துடன், சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழிற்துறைகள், வாழ்வாதாரத்திற்கான செயற்திட்டங்கள் உள்ளிட்ட பலவகையான திட்டங்களை விரிவுபடுத்தி, அவற்றின் ஊடாக வடபகுதியை அபிவிருத்தியால் மட்டுமன்றி, மக்களின் பொருளாதாரத்தையும் மேம்படுத்துவதே இச்சுதந்திர வர்த்தக வலயம் நிறுவுவதன் அடிப்படை நோக்காகும் எனத் தெரிவித்தார்.

வடபகுதியை நோக்கியதான உல்லாசப் பயணிகளின் வருகையை அதிகரிக்கும் விதமாகவும், உள்ளூர் உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்புகளை உள்ளூர் மற்றும் வெளியூர்களில் பெற்றுக் கொள்ளும் விதமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய செயற்றிட்டங்கள் தொடர்பிலும் உரிய கவனம் செலுத்தப்படும்.

இவ்வாறு சுதந்திர வர்த்தக வலயம் செயற்படுத்துவதன் ஊடாக இங்கு வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கும் வேலை வாய்ப்பினை பெற்றுக் கொடுப்பது தொடர்பிலும் உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இதன் போது சுட்டிக்காட்டினார்.

இதனிடையே, தேசத்தின் மகுடம் திட்டத்தை 2016 இல் வடமாகாணத்தில் நடைமுறைப்படுத்துமாறு தாம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கோரியுள்ளதாகத் தெரிவித்த அமைச்சர், இத்திட்டத்தின் ஊடாகவும் வடபகுதியில் பல்வேறு கட்டுமானப் பணிகளை முன்னெடுக்க முடியும் எனத் தாம் நம்புவதாகவும் நம்பிக்கை தெரிவித்தார்.

# அமைச்சர் டக்ளஸின் நிதிப்பங்களிப்பால் காரைநகரில் புதிய முன்பள்ளி உதயம்

## அமைப்பாளர் கண்ணன் நேற்று அடிக்கல் நாட்டிவைப்பு



(கரைநகர்)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு, செலவுத் திட்ட நிதியிலிருந்து தோப்புக்கட்டு பிரதேசத்திற்கு நவீன முன்பள்ளிக் கட்டடம் விரைவில் கிடைக்கும்.

இதற்கான அடிக்கல் நேற்று காரைநகர் ஈ.பி.டி.பி.யின் அமைப்பாளரும், பிரதேச சபை எதிர்க்கட்சித்தலைவருமான வீரமுத்து கண்ணனால் நாட்டி வைக்கப்பட்டது. மேற்படி விடயம் சம்பந்தமாக மேலும் தெரிவிக்கையில்,

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா இந்த தோப்புக்காடு பிரதேசத்தை மீள் குடியமரச் செய்ததோடு மட்டுமல்லாமல் தொடர்ந்தும் பன்முகப்படுத்தப்பட்ட நிதி மூலம் பல உதவிகளைச் செய்து கொண்டு வருகின்றார்.

இன்னும் பல உதவிகளையும், அபிவிருத்திகளையும் செய்ய நாம் தயாராக உள்ளோம். எது எமக்கு தேவை என்பது இப்போது மக்களுக்கு நன்றாக புரிந்து விட்டது.

ஆகவே இனிவரும் காலங்களில் ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது என்பதனை மக்கள் புரிந்து கொள்வார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நல்லதொரு பாடமதை இனிவரும் காலங்களில் மக்கள் புகட்டுவார்கள் என்பதில் ஐயமில்லை என்றார்.

மேலும் இந்நிகழ்வில் தோப்புக் காடு கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் இரத்தினம் ஜெயராமன், முன்பள்ளி ஆசிரியர்கள் மாணவர்கள் எனப் பெருமளவானவர்கள் கலந்து கொணடனர்.

# மூதாட்டியை ஏமாற்றி 4 பவுண் சங்கிலி அபேஸ்

(யாழ்ப்பாணம்)

கிளினிக்குக்காக வரும் மூதாட்டிகளின் தங்க ஆபரணங்களை ஏமாற்றி அபகரிக்கும் கைங்காரியம் ஒன்று நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் அரங்கேறியுள்ளது.

சுன்னாகத்தைச் சேர்ந்த கனகராசா - விசாலாட்சி என்ற 80 வயது மூதாட்டியே ஏமாற்றுக்காரரின் வலைக்குள் வீழ்ந்து 4 பவுண தங்கச் சங்கிலியையும், கைப்பையையும் இழந்து நிர்க்கதியாற்றுவைத்தியசாலையின் நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள வராவார்.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

சயரோக கிளினிக்குக்காக மகனான லோகேஸ்வரனால் வைத்தியசாலைக்கு கூட்டி வரப்பட்ட பிரஸ்தாப மூதாட்டி கிளினிக் முடிந்த நிலையில் வெளியில் சென்று மகனுக்காக வைத்திய சாலையில் காத்திருந்த வேளை இனந்தெரியாத ஏமாற்றுக்காரன் மூதாட்டியிம் மகனின் பெயரைக்கூறி வெளில் கூட்டிவருமாறு தெரிவித்து வைத்தியசாலையின் அம்புலன்ஸ் தரிப்பட்ம் வரை அழைத்துவந்து அவர் அணிந்திருந்த 4 பவுண் சங்கிலியை அறுத்ததுடன், கைப்பையையும் பறித்துக்கொண்டு மாயமாகியுள்ளான்.

இடம் வலம் தெரியாது தவித்த மூதாட்டி மேற்பார்வையாளர் ஒருவரின் கண்ணில் பட்டு அவரினால் மூதாட்டியின் மகன் கண்டு பிடிக்கப்பட்டு அவரிடம் மூதாட்டி ஒப்படைக்கப்பட்டார். இச்சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்போவதாக அவர்கள் தெரிவித்தனர்.

# சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்க நாடாளுமன்ற விவாதக்குழு உதயம்

சிறுவர் உரிமைகளை பாதுகாக்கும் பொருட்டு இலங்கை முதன் முறையாக சிறுவர்கள் நாடாளுமன்ற விவாதக்குழு ஒன்றினை அறிமுகப்படுத்தியுள்ளது.

இவ்விவாதக்குழு மூலம் சிறுவர்களின் உரிமை பாதுகாக்கப்படும். 1991 ஆம் ஆண்டில் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட சிறுவர்கள் உரிமைகள் மாநாட்டின் 25 ஆவது ஆண்டு நிறைவினை நினைவுகூரும் விதமாகவே இலங்கையில் முதல் தடவையாக சிறுவர்கள் நாடாளுமன்ற விவாதக்குழு ஒன்றினை ஆரம்பித்து வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ் ஆரம்ப நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச அலுவலர்கள், பொது மக்கள், ஊடகவியலாளர்கள் என்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நாட்டின் வருங்கால சந்ததியினரின் எதிர்கால நன்மைக்காகவும் சிறுவர்கள் உரிமை மாநாட்டின் இலட்சிய நோக்கினை முன்னோக்கி எடுத்தியம்பவும் அறிமுகப்படுத்தப்பட்ட சிறுவர் நாடாளுமன்ற விவாதக்குழு மிகச்சிறந்த ஆயுதமாக விளங்கக்கூடுமென நாடாளுமன்ற சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நிகழ்வின் வரவேற்பும் பிரதான உரையினையும் நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சிறுவர் உரிமை மாநாட்டின் நினைவாக அறிமுகப்படுத்தப்பட்ட விவாதக்குழுவினை சரியான முறையில் எமது சிறுவர்களுக்கு உதவும் வகையில் தெளிவுபடுத்த அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் ஒன்றிணைந்து கைசேர்க்குமாறு சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யுனிசெப் சர்வதேச நிறுவனத்தின் ஆதரவுடனும் சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சின் வழிகாட்டலுடன் நாடாளுமன்ற உறுப்பி[illegible] சுதர்சினி பெர்னாந்துப்பிள்ளையின் வேண்டுகோளுக்கிணங்கவே இவ்விவாதக்குழு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சிறுவர்களின் நீண்ட கால வாழ்க்கைக்கு தேவையான அனைத்து மாற்றங்களையும் ஏற்படுத்துவதில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒற்றுமையுடன் ஒன்று சேர்ந்து பணியாற்றி வருகின்றனர் என யுனிசெப்பின் இலங்கைகான பிரதிநிதி உனா மக்குலேய் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சிறுவர்களுக்கான அபிவிருத்தி, சுதந்திரம் அனைத்தையும் நாம் பெற்றிருந்தாலும் சிலர் தற்போதும் பிரச்சினைகளால் பாதிக்கப்படுகின்றன[illegible] அவர்களுக்கு பாதுகாப்புகளை வழங்கும் முகமாகவே இவ்வாறானதொரு விவாதக்குழு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# யாழ்.செயலகத்தில் மீளாய்வுக் கூட்டம்

எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெறவிருந்த யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.சிவபாலன் அறிவித்துள்ளார்.

எனினும் இவ்வருடத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் யாழ்.மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் அன்றையதினம் காலை 9 மணிக்கு யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

# ஆசிரிய ஆலோசகர்களுக்கு அவசர பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆசிரிய ஆலோசகர் சங்கத்தின் அவசர பொதுக்கூட்டம் நாளை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என செயலாளர் எஸ்.பி. ஸ்ரீந்திரன் அறிவித்துள்ளார்.

மேற்படி கூட்டத்தில் ஆசிரிய ஆலோசகர் சேவைக்குள் ஆசிரிய ஆலோசகர்களை உள்ளீர்ப்புச் செய்வது தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதால் வடமாகாணத்திலுள்ள 12 கல்வி வலயப்பிரதிநிதிகளையும் ஏனைய ஆசிரிய ஆலோசகர்கள் அனைவரையும் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு அழைக்கப்பட்டுள்ளனர். (06)

## ஜீ.சீ.ஈ. சாதாரணதர பரீட்சை

# கணிப்பீடு தொடர்பில் அதிபர்களுக்கு அறிவுறுத்து

நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களின் பாடசாலை மட்ட இறுதிக்கணிப்பீட்டுப் புள்ளிகளை பதிவு செய்து கொள்வதற்கான கணிப்பீட்டுப் படிவங்கள் பரீட்சைத் திணைக்களத்தினால் பாடசாலைகளுககு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே பாடசாலைகளில் தரம் 10,தரம் 11 வகுப்புக்களில் மாணவர்கள் பெற்ற தவணைக் கணிப்பீட்டுப் புள்ளிகளின் இறுதிச் சராசரிப் புள்ளிகளை பதிவு செய்து அவற்றை மீண்டும் பரீடசைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதற்காக இப்படிவங்கள் பாடரீதியாக தயார் செய்யப்பட்டு பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

எனவே அப்படிவங்களை அறிவுறுத்தல்களுக்கமைய நேர்த்தியாகவும் சரியாகவும் பூர்த்தி செய்து அதற்கான உறையில் இட்டு எதிர்வரும் மார்கழி மாதம் முதல் வாரத்திற்கிடையில் வலயக்கல்வி அலுவலகங்களில் ஒப்படைக்குமாறும் அதிபர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (03)


# வறிய குடும்பங்களுக்கு யுனிசெவ் உதவித்திட்டம்

யாழ். மாவட்டத்தில் பாடசாலை செல்லும் வறிய மாணவர்கள் உள்ள குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்குடன் யுனிசெவ் நிறுவன நிதியில் சுயதொழில் நன்கொடைகள் வழங்கப்பட்டு வருகின்றது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 செயலகப் பிரிவுகளில் யுனிசெவ் நிறுவனத்தினால் வழங்கப்படும் சுயதொழில் உதவி நன்கொடைக்கான காசோலை தலா 4 பேர் வீதம் 60 பேருக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பயனாளியும் தலா 36000 ரூபா வீதம் இந்த காசோலையைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தால் இந்த உதவி நன்கொடைகள் வழங்கப்பட்டுள்ளது. யுனிசெவ் நிறுவனம் சென்ற 2012 ஆம் ஆண்டில் யாழ்.மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலகப் பிரிவுகளிலும் 90 பேருக்கும், 2013 ஆம் ஆண்டில் 73 பேருக்கும் சுயதொழில் நன்கொடைகளை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது. இந்த சுயதொழில் நன்கொடையைக் கொண்டு கால்நடை வளர்ப்பு, சிறுகடை, சிறுகைத்தொழில், போன்ற தொழில் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். (90)

# செவிப்புலன் பாதிக்கப்பட்ட 12 பயனாளிகளுக்கு உதவி



(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகர றோட்டறிக் கழகத்தால் 12 பயனாளிகளுக்கு கடந்த புதன்கிழமை கேட்டல் உபகரணங்கள் வழங்கப்பட்டது.

கிளிநொச்சி நண்பர்கள் விருந்தகத்தில் சு.த.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் முன்னாள் றோட்டறிக் கழக ஆளுநர் பத்மநாதன், கல்முனைக் கழகம் சார்பில் றோட்டேறியன் ஹென்றி அமல்ராஜ் மற்றும் கிளிநொச்சி நகர றோட்டறி கழக அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர்.

ஒவ்வொன்றும் 75000 ரூபாய் பெறுமதியான கேட்டல் உபகரணங்கள் செவிப்புலன் குறைபாடுடையவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளன. இன்னும் 50 உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன. கழகம் ஆரம்பிக்கப்பட்டு இது முதல் செயற்றிட்டமாக மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (90)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 நவம்பர் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.